பொழிவு - 17
குவிப்பு - 08
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
ஓகஸ்ட் 2014
(ISSN 1800-2641)
Registered as a News Paper
# மன்னா
MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 161/ News / 2014"

# இனப்படுகொலையை நிறுத்த அரசை வலியுறுத்த வேண்டும்

## தமிழ் சிவில் அமைப்புக்கள் திருத்தந்தையிடம் வேண்டுகோள்

தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை நிறுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்த வேண்டும் என்று தமிழ் சிவில் சமூக அமைப்பு உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கைக்கான வத்திக்கான் பிரதிநிதியை யாழ்ப்பாணத்தில் சந்தித்தபோதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான வத்திக்கான் பிரதிநிதி பேராயர் பியரி நயுகேன் வான்டாட் கடந்த 13.07.2014 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அவரைத் தமிழ் சிவில் சமூக உறுப்பினர்கள் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில், திருத்தந்தையிடம் கையளிப்பதற்கான கடிதம் ஒன்றையும் அவர்கள் வத்திக்கான் பேராயரிடம் வழங்கினர். அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு;

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்)

## திருத்தந்தையின் இலங்கை வருகையை முன்னிட்டு உருவாக்கப்பட்டுள்ள சின்னம் (Logo)




## குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழா





அருட்பணியாளர் பீற்றர் மனோகர்


அருட்பணியாளர் எஸ். கே. தேவராஜா


அருட்பணியாளர் டெஸ்மன் குலாஸ்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூன்று அருட்பணியாளர்கள் இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி தமது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் காண்கிறார்கள். அருட்பணியாளர் மொத்தம் போல் பீற்றர் மனோகர் (முருங்கன் பங்குத்தந்தை), அருட்பணியாளர் சந்தாம்பிள்ளை கொடுதோர் தேவராஜா (குடும்பப்பணி நிலைய இயக்குனர்), அருட்பணியாளர் பர்னபாஸ் டெஸ்மன் குலாஸ் (தலைமன்னார் பங்குத்தந்தை) ஆகியோரே இவ்வாண்டுக்குரிய வெள்ளி விழா நாயகர்களாவர்.

இவர்கள் அன்றைய மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் 1989ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளிக்காணும் இக்குருக்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், இறைமக்கள் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கிறது. (யூபிலி நாயகர்களின் நன்றித்திருப்பலிகள், அவர்களின் வாழ்வு மற்றும் பணி பற்றிய விரிவான குறிப்புக்களை 15ஆம் பக்கத்தில் காணலாம்.)

## மடு ஆவணித் திருவிழா



மடு அன்னையின் ஆவணித் திருவிழாவுக்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன. ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆவணித் திருவிழா ஆரம்பித்துவைக்கப்படும். ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி மாலை 6.15 மணிக்கு வேஸ்பர் - நற்கருணை ஆராதனையும், 15ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும்.

இவ்விழாவிற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மடுப் பரிபாலகர் அருட்பணி. எஸ். எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தலைமையில் மன்னார் மறைமாவட்டக் குருக்களின் ஒத்துழைப்போடு இடம்பெற்று வருகின்றன.

## சர்வதேச ஆங்கிலக் கவிதைப் போட்டியில் வெற்றி



அமெரிக்காவில் வருடாந்தம் அறிவிக்கப்பட்டு நடாத்தப்படும் 'சர்வதேச திறந்த கவிதைப் போட்டி'யின் 2013ம் ஆண்டிற்கான போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. இதில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ். ஏ. ராஜன் குரூஸ் என்பவரின் கவிதைப்படைப்பும், வெற்றிபெற்ற கவிதைகளுள் ஒன்றாகத் தெரிவுசெய்யப்பட்டு 'International Poetry Prize – 2013' எனும் கவிதைத் தொகுப்பு நூலாக வெளியிடப்படவுள்ளது.

2011ம் ஆண்டில் "யப்பானைத் தாக்கிய சுனாமிப் பேரழிவு மனித குலத்திற்குச் சொல்லும் செய்தி" என்ற விடயத்தை 'Lessens From Tsunami that Shook Japan' என்ற அவரது கவிதை மிகத் தத்ரூபமாக எடுத்தியம்புகிறது.

'International Poetry Prize Anthology – 2013' எனும்பெயரில் ஒன்லைன் விற்பனையில் வெளியிடப்படவிருக்கும் இந்நூற் தொகுப்பின் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள அமெரிக்கா செல்லும் அழைப்பிதழையும் திரு. ராஜன் குரூஸ் பெற்றுள்ளார்.

வடமாகாண ஆங்கில வள நிலைய முகாமையாளராகக் கடமையாற்றும் இவரது ஆங்கிலப் படைப்புகள் சில தேசியமட்ட விருதுகளை ஏற்கனவே வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஆங்கில எழுத்துத்துறையில் இவரது படைப்புக்கள் மேலும் வெற்றிபெற 'மன்னா' வாழ்த்துகிறது.

## பண்டிவிரிச்சானில் புதிய பங்குப்பணிமனை




பண்டிவிரிச்சான் பங்கில் புதிய பங்குப்பணிமனைக் கட்டிடம் கடந்த யூலை மாதம் 15ஆம் திகதி - பெரிய பண்டிவிரிச்சான் புனித மரியகொறற்றி ஆலயத் திருவிழா அன்று மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை அடிகளாரினால் திறந்துவைக்கப்பட்டது.

இந்தப் பங்குப் பணிமனைக்கான அடிக்கல் 2013ம் ஆண்டு சித்திரை மாதம் நாட்டப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயரின் முழுமையான நிதியுதவியோடும் பண்டிவிரிச்சான் பங்குமக்களின் பூரண ஒத்துழைப்போடும், சிரமதானப்பணிகளோடும் பங்குத்தந்தை அ. ஆரோக்கியம் அடிகளாரின் அயராத முயற்சியினாலும் இப்புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## கல்வாரித் திருத்தலத்தின்மீது விஷமிகள் தாக்குதல்




வவுனியா பெரிய கோமரசங்குளம் பகுதியில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற கல்வாரித் திருத்தலத்திலுள்ள இயேசுவின் சிலுவைப் பாடுகளைச் சித்தரிக்கும் 15 சிலுவைப்பாதைத் திருவுருவங்களில் 8 திருவுருவங்கள் கடந்த 23.07.2014 அன்று இனந்தெரியாதவர்களால் தாக்கி சேதமாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை நடாத்தி வருகின்றனர். உடைக்கப்பட்ட திருவுருவங்களை படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## திருத்தந்தையின் இலங்கை விஜயமும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 12ஆம் திகதி வத்திக்கானில் இருந்து புறப்பட்டு 13ஆம் திகதி இலங்கையில் காலடி பதிக்கின்றார். 13ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதிவரை அவர் இலங்கையில் தங்கியிருப்பார். இலங்கை அரச தரப்பினரதும், இலங்கை ஆயர்களினதும் அழைப்பை ஏற்று வருகைதரும் திருத்தந்தை இலங்கையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கெடுக்கவுள்ளார். தன்னுடைய எளிமையான வாழ்வாலும், வார்த்தையாலும் உலக மக்களின் மனங்களைக் கவர்ந்த திருத்தந்தை நமது நாட்டிற்கு விஜயம் செய்வது நமக்கெல்லாம் பெருமையும், மகிழ்ச்சியும் தரும் ஓர் உன்னத நிகழ்வாகும். திருத்தந்தையின் வருகை இலங்கை நாட்டிற்கு பெரும் ஆசீர்வாதமாகவும் அமையும் எனலாம் .

திருத்தந்தையின் வருகையை முன்னிட்டு இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை பல்வேறு ஆயத்த முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. சிறப்பான ஒழுங்கமைப்புக்கு பெயர்போன கத்தோலிக்க திருச்சபை திருத்தந்தையின் இந்த விஜயத்திற்கான ஒழுங்கமைப்பை மிகவும் நேர்த்தியாகவும், கச்சிதமாகவும் செய்துமுடிக்கும் என உறுதியாக நம்பலாம்.

### தமிழ் மக்களின் கேள்வி

திருத்தந்தையின் இலங்கை விஜயம் குறித்து அறிவிக்கப்பட்டவுடன் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்த முதல் கேள்வி திருத்தந்தை தமிழர் தாயகப் பகுதிக்கு விஜயம் செய்வாரா? என்பதே. இலங்கை ஆயர்கள் வத்திக்கானில் திருத்தந்தையைச் சந்தித்த பின்னர் ஆசிய கத்தோலிக்க செய்திச் சேவைக்கு மன்னார் ஆயர் வழங்கிய நேர்காணலில் திருத்தந்தை இலங்கைக்கு விஜயம் செய்வாரானால் அவர் மடுவுக்கும் விஜயம் செய்வார் எனக் குறிப்பிட்டிருந்தார். அந்தச் செய்தியை மன்னா உட்பட அனைத்து தமிழ் ஊடகங்களும் முக்கிய செய்தியாக வெளியிட்டிருந்தன. ஆனால் உத்தியோகப்பற்றற்ற முறையில் வெளியிடப்பட்ட திருத்தந்தையின் இலங்கைக்கான நிகழ்ச்சிநிரலில் தமிழர் தாயகப் பகுதிக்கான திருத்தந்தையின் விஜயம் குறித்து எந்த விபரமும் இருக்கவில்லை. இதை அறிந்த தமிழ்த் திருச்சபைத் தலைவர்களும், குருக்களும், மக்களும் ஆழ்ந்த கவலையும், ஏமாற்றமும் ஏன் ஆத்திரமும் அடைந்தனர் எனலாம். இது தொடர்பாக ஆரம்பத்தில் மௌனம் காத்த கொழும்புத் திருச்சபை பின்னர் தமிழ்த் திருச்சபையின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாக திருத்தந்தையின் மடுவுக்கான பயணத்தையும் சேர்த்துக்கொண்டது.

### சுயலாப அரசியல் நோக்கம்

திருத்தந்தையின் இலங்கை விஜயத்தை இலங்கை அரசாங்கம் தனது சுயநல நோக்கங்களுக்காக பயன்படுத்தக்கூடிய ஆபத்து இருக்கின்றது. முத்திப்பேறுபெற்ற யோசவ்வாஸ் முனிவரை புனிதராக அறிவிக்க திருத்தந்தை இலங்கைக்கு வரவில்லை எனில் .... - போரினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல்கூற திருத்தந்தை இலங்கைக்கு வரவில்லை எனில் ..... வேறு எதற்காகத் திருத்தந்தை இலங்கைக்கு வரவேண்டும்? என்றகேள்வி இங்கு முக்கியம் பெறுகின்றது. திருத்தந்தை அவசரமாக, அவசியமாகப் பயணம் செய்யவேண்டிய எத்தனையோ நாடுகள், இடங்கள் உலகத்தில் இருக்கின்ற இன்றைய சூழ்நிலையில் இப்போது திருத்தந்தை இலங்கைக்கு விஜயம் செய்யவேண்டிய அவசியம் என்ன? போர்க்குற்ற விசாரணைகள் போன்ற சர்வதேசத்தின் அழுங்குப்பிடியில் அகப்பட்டுள்ள இலங்கை அரசாங்கம் தன்னுடைய இமேஜை உலக அரங்கில் உயத்திக்காட்ட திருத்தந்தையின் இலங்கை வருகையை பயன்படுத்த முனைகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. அரசாங்கத்தின் இந்த மறைமுக அரசியல் தந்ரோபாயத்திற்கு ((Political Diplomacy) கொழும்புப் பேராயராக இருக்கும் இன்றைய கருதினாலும் துணைபோகின்றாரா? என்ற கேள்வியும் இங்கு கூடவே எழுகின்றது.

### மாற்றத்திற்குள்ளான நிகழ்ச்சி நிரல்

திருத்தந்தையின் இலங்கை வருகையின்போது இலங்கையில் அவர் பயணம் செய்யும் இடங்கள், நிகழ்வுகள் உத்தியோகப்பற்றற்ற முறையில் திட்டமிடப்பட்டிருந்தது. அதில் திருத்தந்தை வடபகுதிக்கு விஜயம் செய்வது குறித்து எந்த நிகழ்ச்சியும் இருக்கவில்லை. இவை அறிந்து மன்னார் ஆயர் மற்றும் வடபகுதி குருக்கள், பொதுநிலையினரின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாகவே திருத்தந்தை மடுவுக்கு விஜயம்செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அதுவும் ஒரு மணித்தியாலம் மட்டுமே அவர் மடுவில் செலவிடுவார் என்றும் மக்களோடு சேர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கமாட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை தமிழர் பகுதிக்கு வருகைதந்து போரினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல்கூறும்போதுதான், தமிழரின் அரசியல் அபிலாசைகள் உட்பட அவர்களின் உரிமைகளுக்காக குரல்கொடுக்கும்போதுதான் அவருடைய இலங்கை வருகை அர்த்தமும் ஆழமும் பெறும்.

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை**
**அன்புடன் அருட்பணி. தமிழ் நேசன்,**
**மன்னா பதிப்பாசிரியர்**

## சுண்டிக்குளியில் புனித அந்தோனியார் வாசாப்பு

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 29ம் திகதி மாலை 6.00 மணிக்கு முருங்கன் பங்கில் உள்ள சுண்டிக்குளி கிராம மக்களால் புனித அந்தோனியார் வாசாப்பு மேடையேற்றப்படவுள்ளது.

இவ்வாசாப்பானது சுண்டிக்குளிப் புலவரால் எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். புனித அந்தோனியாரின் வாழ்க்கை வரலாறு அடங்கிய இந்த வாசாப்பினைக் கண்டுகளிக்க சுண்டிக்குளி கர்த்தர் ஆலய நிர்வாகத்தினர் அனைவரையும் அன்போடு அழைக்கின்றனர்.



வவுனியா புனித அந்தோனியார் விழாவை முன்னிட்டு கடந்த யூன் மாதம் 4ஆம் திகதி புனிதரின் கொடியை பங்குத்தந்தை அருட்பணி. சத்தியராஜ் ஏற்றுகின்றார்.

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2014
### புரட்டாதி

07 - கிறிஸ்து அரசர் விழா - சாந்திபுரம்
- தேசிய இளைஞர் ஞாயிறு

08 - தூய வேளாங்கண்ணி திருவிழா - எல்லப்பர் மருதங்குளம்
- தூய கன்னி மரியாளின் பிறப்பு விழா - நானாட்டான், மாவிலங்கேணி, கரிசல், இலுப்பைக்குளம், குஞ்சுக்குளம், ஓமந்தை, விடத்தல்தீவு, எழுத்தூர், சாளம்பன், நடுக்குடா, நொச்சிக்குளம், மாறாஇலுப்பை, காட்டாஸ்பத்திரி, தலைமன்னார் பியர், மூங்கில் முறிச்சான், பாலியாறு, வேளாங்கண்ணிநகர், பாரதிபுரம், கங்கங்குளம்.

14 - திருச்சிலுவை அருட்சகோதரிகளின் விழா
- தூய வேளாங்கண்ணி திருவிழா - சாவற்கட்டு
- குருசுக்கோவில் விடத்தல்தீவு

15 - தூய வியாகுல அன்னை திருவிழா - அடம்பன்
- தூய வேளாங்கண்ணி திருவிழா - கட்டுக்கரை

22 - தூய சிந்தாத்துரை மாதா திருவிழா - பெரியமுறிப்பு
- அடைக்கலமாதா - முருகனூர்
- தூய வேளாங்கண்ணி திருவிழா - கற்பகபுரம்

24 - தூய சிந்தாத்துரை மாதா திருவிழா - பாப்பாமோட்டை

28 - தூய வேளாங்கண்ணி மாதா திருவிழா - தாமரைக்குளம்
- அடைக்கலமாதா திருவிழா - கருவாஞ்சிகுளம்
- தேசிய மறைக்கல்வி தினம்

29 - தூய மிக்கேல் திருவிழா - தரவன்கோட்டை
- புனித சவேரியார் திருவிழா - கோட்டக்குளம்

■ *மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத்தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.*




## திருவுளப்பணியாளர் சபைக்கு புதிய குரு



திருவுளப் பணியாளர் சபையின் இலங்கை மாவட்டத்தைச் சேர்ந்த **மரியதாஸ் கொட்வின் கமிலஸ் (சணா)** அவர்கள் கடந்த யூலை மாதம் 18ஆம் திகதி அன்று யாழ் குருநகர் புனித இயாகப்பர் ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் இளவாலை போயிட்டி புனித லூர்து அன்னை ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி. அ. மரியதாஸ், மேரியோசேப்பின் தம்பதிகளின் புதல்வனாக 16.06.1977இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை இளவாலை றோ.க.த.க. பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை இளவலை புனித கென்றி அரசர் கல்லூரியிலும். உயர் கல்வியை பளை மத்திய கல்லூரியிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணி. இருதயதாஸ் அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர் கொழும்புத்துறை திருவுளச்சபை 'திருவடி' இல்லம் சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்பக் குருத்துவ உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் இந்தியா, மதுரை அருள் ஆனந்தம் இயேசு சபைக் கல்லூரியில் மெய்யியல் கல்வியை நிறைவுசெய்து அங்கு இளங்கலைப் பட்டம் பெற்றார். தொடர்ந்து கண்டி தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார்.

இவர் தனது முதல் திருப்பலியை கடந்த 19.07.2014 அன்று காலை 9.30 மணிக்கு போயிட்டி புனித லூர்து அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார். புதிய குருவுக்கு மன்னாவின் மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம்.

## தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்கள்



செல்வி. இன்பநிதி பசிலிக்கா ஷியோனா



செல்வி. ஜெனிங்ஸ் அபிஷானி

கொழும்பு ஔவை இலக்கிய வட்டத்தினரால் நடாத்தப்பட்ட ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான 'ஔவையின் கொன்றை வேந்தன்' மனனம் செய்து பாடும் போட்டி கடந்த 05.04.2014 அன்று நடாத்தப்பட்டது. இப்போட்டியில் மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவிகளான செல்வி. இன்பநிதி பசிலிக்கா ஷியோனா (தரம் - 04) கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தையும், செல்வி. ஜெனிங்ஸ் அபிஷானி (தரம் - 02) பாலர் பிரிவில் 2ம் இடத்தையும் பெற்றனர். இவர்களுக்கான பதக்கம், சான்றிதழ்கள், பரிசில்கள் என்பன கடந்த 11.05.2014 அன்று கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற ஔவை இலக்கிய விழாவில் வழங்கப்பட்டது. இவர்களைக் கல்லூரி அதிபரும் கல்லூரிச் சமூகமும் பாராட்டி வாழ்த்துகின்றனர்.

**தகவல் : அதிபர், மன்/ புனித சவேரியார் பெண்கள் தே.பா, மன்னார்.**

## தவறுக்கு வருந்துகிறோம்!

வடமாகாண ஆளுனர் செயலகத்தின் கலாசாரப் பிரிவால் நடத்தப்பட்ட வடமாகாணத்தில் உள்ள கலாமன்றங்களுக்கிடையிலான பாரம்பரியக் கலைகளுக்கான போட்டி முடிவுகள் தொடர்பாக கடந்த யூலை மன்னா பத்திரிகையில் பிரசுரித்திருந்தோம்.

அதில் பேசாலை வளர்கலை கலாமன்றம் வளர்ந்தோருக்கான நாட்டுக்கூத்துப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தது. தவறுதலாக இந்தக் கலாமன்றத்தின் பெயர் அந்தச் செய்தியில் விடுபட்டுவிட்டது. தவறுக்கு மிகவும் வருந்துகிறோம்.

போட்டியில் பங்கெடுத்து இரண்டாவது இடத்தைப் பெற்ற பேசாலை வளர்கலை கலாமன்றத்திற்கு மன்னாவின் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

**- மன்னா நிர்வாகம் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு தமிழ் மறைமாவட்டங்களுக்கு தனியான மறைமாநிலம் சாத்தியமே!

## – திருத்தந்தையின் பிரதிநிதி தெரிவிப்பு –


இலங்கைக்கான திருத்தந்தையின் புதிய பிரதிநிதியாக அண்மையில் நியமனம்பெற்ற பேராயர் நிக்யூயென் வான் ரொட் (Nguyen Van Tot) அவர்கள் இருநாள் விஜயமாக கடந்த யூலை மாதம் 13ஆம் 14ஆம் திகதிகளில் யாழ் மறைமாவட்டத்திற்கு வருகை தந்திருந்தார். 14ம் திகதி காலை யாழ் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்களுடன் யாழ் ஆயர் இல்லத்தில் அவர் சந்திப்பை மேற்கொண்டபோதே மேற்படி கருத்ததை வெளியிட்டார்.

வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் மறை மாவட்டங்களை இணைத்து ஒரு மறைமாநிலத்தை ஏற்படுத்துவது மேய்ப்புப்பணித் தேவைகளுக்குப் பெரும் உதவியாக அமையும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதே அவர் அதன் சாத்தியப்பாட்டை ஏற்றுக்கொண்டு உரிய விண்ணப்பத்தைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். கிளி - முல்லை மறைக்கோட்டத்தைத் தனி மறைமாவட்டமாக்கும் கோரிக்கையும் மேற்படி சந்திப்பில் முன்வைக்கப்பட்டது. மேலும் தமிழ் மக்களின் இன்றைய நிலை மக்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தலும் சவால்களும் போன்ற விடயங்களும் தெளிவாக முன்வைக்கப்பட்டன.

மேலும் அவர் தமது இந்த விஜயத்தின்போது மறைமாவட்டத்தின் சில பங்குகளுக்குச் சென்று பார்வையிட்டதுடன் குருநகர் புனித இயாகப்பர் ஆலயத்தில் ஞாயிறு திருப்பலியை நிறைவேற்றினார். புனித சவேரியார் உயர் குருத்துவக்கல்லூரியினது திருத்தந்தை புனித 2ம் யோவான் போல் பற்றிய நாடகத்தைப் பார்வையிட்டு கல்லூரிச் சமூகத்தையும் சந்தித்தார்.



# திருவுளப்பணியாளர் சபையின் இலங்கை மாவட்ட புதிய அதிபராக அருட்பணியாளர் அலன்




திருவுளப்பணியாளர் சபையின் (Institute of Voluntas Dei) இலங்கை மாவட்டத்தின் புதிய அதிபராக (Sri Lankan District Director) அருட்பணியாளர் செபமாலை பெனாண்டோ யுஸ்ரஸ் (அலன் ) அடிகளார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் மன்னார் மறைமாவட்டம் குஞ்சுக்குளம் பங்கைச் சார்ந்தவர். கடந்த யூலை மாதம் 18ஆம் 19ஆம் திகதிகளில் இலங்கை மாவட்ட திருவுளப்பணியாளர் சபையின் ஆலோசனைக் கூட்டம் யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தின்போதே அலன் அடிகளார் இலங்கைக்கான புதிய மாவட்ட அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டார். இக்கூட்டத்திற்கு கனடாவில் இருந்து உதவி மேனிலை அதிபர் (Assistant Director General) அவர்களும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒரு மாவட்ட அதிபரின் பணிக்காலம் நான்கு வருடங்களாகும். தற்போது பணியில் இருக்கும் இச்சபையின் மாவட்ட அதிபர் அருட்பணியாளர் அ. சகாயநாதன் அவர்களின் பணிக்காலம் நிறைவுபெறுவதை முன்னிட்டு புதிய அதிபர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அருட்பணியாளர் யுஸ்ரஸ் அலன் அவர்கள் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும் பின்னர் மன்/முருங்கன் மகாவித்தியாலயத்திலும் தன் ஆரம்பக் கல்வியைக் கற்றார். இவர் தன் குருத்துவக் கல்வியை யாழ் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் பெற்றுக்கொண்டார். கடந்த நான்கு வருடங்களாக கொழும்பு புனித லூசியா பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி இவர் தன் புதிய பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

கடந்த நான்கு வருடங்களாக இச்சபையின் இலங்கை மாவட்ட அதிபராக இருந்து இச்சபையைச் சிறப்பாக வழிநடத்திய அருட்பணியாளர் அ. சகாயநாதனுக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு புதிய அதிபர் அலன் அடிகளாருக்கு வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா மகிழ்வெய்துகின்றது.

# புனித சவேரியாரின் திருப்பண்டங்கள் பக்தர்களின் பார்வைக்கு



2014ஆம் ஆண்டு கார்த்திகை 22ஆம் திகதி முதல் 2015ஆம் ஆண்டு தை மாதம் 14ஆம் திகதி வரை கோவாவில் புனித பிரான்சிஸ் சவேரியாரின் திருப்பண்டங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கிலுமிருந்து ஐம்பது இலட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் அத்திருப்பண்டங்களைப் பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என இந்நிகழ்வின் தலைமை நிர்வாகி அருள்பணி. ஆல்பிரட் வாஸ் தெரிவித்தார்.

1506ஆம் ஆண்டு சித்திரை 7ஆம் திகதி இஸ்பெயினில் பிறந்த புனித பிரான்சிஸ் சவேரியார், இந்தியாவின் கோவாவுக்கு 1524ஆம் ஆண்டு வைகாசி மாதம் 6ஆம் திகதி வந்தார். பத்து ஆண்டுகளுக்கு மேலாக, ஆசியாவில் மறைப்பணியாற்றிய இப்புனிதர் சீனாவின் சான்சியன் தீவில் 1552ஆம் ஆண்டு மார்கழி 3ஆம் திகதி இறந்தார். இப்புனிதரின் உடல் போர்த்துக்கீசிய காலனியாகிய மலாக்காவில் முதலில் வைக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகள் கழித்து கோவாவின் குழந்தை இயேசு பசிலிக்காவில் வைக்கப்பட்டது.

# அமலவைச் சகோதரிகளின் முப்பெரும் விழா



மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அமலவைச் சகோதரிகள் கடந்த யூன் மாதம் 29ஆம் திகதி மடுவில் முப்பெரும் விழாக்களை நினைவுகூர்ந்து கொண்டாடினர். இவர்கள் சி.ஐ.சி சகோதரிகள் (CIC - Congregation of Immaculate Conception) என்றும் அறியப்படுகின்றனர்.

அருட்சகோதரி மேரி ஆரோக்கிய நாயகி (உயிலங்குளம் பங்கு - பெரிய நீலாசனைக் கிராமம்) அவர்களின் நித்திய அர்ப்பணம், புகுமுகத் துறவுநிலைச் சடங்கு நிகழ்வு, அமலவை இலங்கைப் பணி தொடங்கி பத்தாண்டு நிறைவு விழா என முப்பெரும் மகிழ்வைச் சிறப்பிக்கும் வகையில் இவ்விழா இடம்பெற்றது. இவ்விழாவையொட்டி மடு தியான இல்லத்தில் இடம்பெற்ற திருப்பலியை மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

இவ்விழாவில் கலந்துகொள்வதற்காக இந்தியாவில் இருந்து இச்சபையின் அதிபர் அருட்சகோதரி அன்டனி சேவியர், துணை அதிபர் அருட்சகோதரி தனசீலி சாலமன் ஆகியோரும் மன்னாரில் முன்னர் பணியாற்றிய அருட்சகோதரி தியோனி மற்றும் அருட்சகோதரி சகாயம் ஆகியோரும் வருகை தந்திருந்தனர். இச்சபைச் சகோதரிகள் மன்னார் மண்ணில் கால்பதித்து 10 ஆண்டுகள் நிறைவை இவ்வாண்டு கொண்டாடுகின்றனர். வாழ்க்கைப்பெற்றான் கண்டல், மன்னார், மடு, அந்தோனியார்புரம் போன்ற இடங்களில் இந்தச் சகோதரிகள் தற்போது தமது பணியை சிறப்பாக ஆற்றிவருகின்றனர்.

# இலங்கைக்கு வருகைதந்த அமதிகளின் மேனிலை முதல்வர்



அமலமரித்தியாகிகள் சபையின் மேனிலை முதல்வர் (Superior General) அருட்திரு. லொய்ஜி லோஜென் (அ.ம.தி) (Rev. Fr. Louigi Lougen OMI) அடிகளார் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டு இலங்கையில் அமதிகள் பணியாற்றும் பணித்தளங்களைத் தரிசித்தார்.

கொழும்பு மாகாணத்தில் தனது தரிசிப்பை முடித்துக்கொண்டு கடந்த யூன் மாதம் 15 தொடக்கம் 22ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இவர் யாழ்ப்பாண மாகாணத்தைத் தரிசித்தார். யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மறைமாவட்டங்களில் உள்ள அமதிகளின் பணித்தளங்களையும், உருவாக்கல் தளங்களையும் அவர் தரிசித்தார். தென் பகுதியில் பணியாற்றும் யாழ் மாகாண அமதிகளையும் அவர் சந்தித்தார். நான்கு மாவட்ட அமதிகளையும் மாவட்ட மட்டத்தில் சந்தித்து உரையாற்றினார்.

யூன் 19ஆம் திகதி யாழ் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் துறவியரைச் சந்தித்தார். அவ்வேளையில் வடபகுதி அரசியல் நிலமை உட்பட அனைத்துக் களநிலமைகள் தொடர்பாகவும் அவருக்கு எடுத்துக்கூறப்பட்டது.

அவருடைய இலங்கை விஜயத்தின் இறுதியில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாண மாகாண நிர்வாகத்தினரை ஒன்றாகச் சந்தித்த அவர் இரண்டு மாகாணங்களுக்கிடையில் நிலவவேண்டிய தொடர்ச்சியான ஒத்துழைப்புக் குறித்து கலந்துரையாடினார்.

# அன்பின் சகோதரிகள் சபையின் புதிய தலைமைக்குழு



இயேசுமரியின் அன்பின் சகோதரிகள் சபை, இலங்கை மாகாணத்தின் புதிய தலைவியாக அருட்சகோதரி தீப்திகா சில்வா அவர்கள் இரண்டாவது தடவையாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அருட்சகோதரிகள் மாறி சமரநாயக்க, ஜெயக்கொடி விசுவாசம் (ஜெயம்) அஜித்தா பெர்னாண்டோ, பிறதீப்பிக்கா பெரேரா, றீற்றா அந்தோனிப்பிள்ளை ஆகியோர் இவருடைய ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய தலைமைக்குழு தமது நான்கு வருட பணிப்பொறுப்புக்களை கடந்த 07.06.2014 அன்று பொறுப்பேற்றுக்கொண்டது. கடந்த நான்கு வருடங்களாக இலங்கை மாகாணத்தின் வளர்ச்சிக்காகவும் திருச்சபையின் நன்மைக்காகவும் அயராது பணியில் ஈடுபட்ட ஆலோசகர் குழுவிற்கு புதிய தலைமைக்குழு பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்து நிற்கின்றது.

தகவல் : நிவேதனம், பட்டித்தோட்டம், மன்னார்.



நித்திய அர்ப்பணம் பெற்ற அருட்சகோதரி, சபை அதிபர், துணை அதிபர், மன்னார் ஆயர் மற்றும் மன்னார் குருக்களை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'கவனம்' குறும்படம் வெளியீட்டு விழா





'கவனம்' குறும்படத்தின் இயக்குனர்
திரு. அ. நிஷாந்தன் அவர்கள்
உரையாற்றுவதையும்,
குறும்படத்தின் கதாநாயகன் மயூறன்
அவர்களையும், விருந்தினர்களையும்,
சபையோரையும் படங்களில் காணலாம்.

கவிஞரும் குறும்பட இயக்குனருமாகிய அ. நிஷாந்தனின் 'கவனம்' என்னும் பெயரைக் கொண்ட குறும்பட வெளியீட்டு விழா மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 08.07.2014 அன்று மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்குறும்படமானது தமது தொலைபேசி இலக்கங்களைக் கண்டவர்களுக்கும் வழங்குவதனால் ஏற்படத்தக்க விபரீத விளைவுகளை விளக்குகின்ற ஒரு விழிப்புணர்வுப் படமாகும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக 'பிறிஜ்ஜிங் லங்கா' (Bridging lanka) என்ற அமைப்பின் இயக்குனர் திரு. ஆர். ஜெறிமி லியனகே அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வின் வரவேற்புரையினை மன்னார்த் தமிழ்ச்சங்கச் செயலாளர் துறையூரான் எம். சிவானந்தன் அவர்கள் வழங்கினார். தலைமையுரையினை தமிழ்ச்சங்க நிர்வாக உறுப்பினர் கவிஞர் மன்னார் அமுதன் அவர்களும், வெளியீட்டுரையினை இக்குறும்படத்தின் கதாநாயகன் கவிஞர் ஜே. ஆர். மயூரனும் வழங்கினர். கருத்துரையினைச் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டிருந்த திரைப்பட இயக்குனர் திரு. என். கேசவராஜா அவர்களும் ஏற்புரையினை இயக்குனர் அ. நிஷாந்தன் அவர்களும் வழங்கினர்.

நிஷாந்தன் அவர்களின் வழிகாட்டலில் மன்னாரிலிருந்து இன்னும் பல குறும்படங்களும் முழுநீளப்படங்களும் வெளிவரவுள்ளதனால் நடிப்புத்துறையில் ஆர்வமுள்ள அனைவரும் பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம் உங்களது திறமைகளையும் வெளிக்காட்டிக் கொள்ளமுடியும்.

தொடர்பு இல. : 0779704876, 0778444043

# வேப்பங்குளம் பங்கு குகன் நகரில் புதிய ஆலயம்



தற்போதைய வேப்பங்குளம் பங்கின் துணை ஆலயங்களில் ஒன்றான குகன்நகர் புதுமை மாதா ஆலயமானது பம்மைமடுப் பங்கின்கீழ் இருந்த பல சிற்றாலயங்களுள் ஒன்றாக 11 குடும்பங்களை மாத்திரமே கொண்ட எந்தவித வசதிகளும் அற்ற நிலையில் இருந்தது. பம்மைமடுவின் முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி. இ. அகஸ்ரின் அடிகளாரின் அதீத முயற்சியினாலும் மக்களின் ஒத்துழைப்போடும் கொட்டில் ஆலயமாக 2001ம் ஆண்டு இது ஆரம்பிக்கப்பட்டது. 2001ம் ஆண்டிலிருந்து 2005ம் ஆண்டு காலப்பகுதிகளில் ஒரு திருச்சிலுவையை வைத்து இம்மக்கள் தம் வழிபாடுகளை மேற்கொண்டார்கள்.

2005ம் ஆண்டு ஐப்பசி மாதம் 7ம் திகதி புதுமை மாதாவின் திருச்சுருபம் அகஸ்ரின் அடிகளாரால் ஆசீர்வதிக்கப்பட்டு இந்த ஆலயத்தில் வைக்கப்பட்டது. இத்திருச்சுருபம் கொண்டுவரப்பட்டு சில மாதங்களில் சிறு மாற்றங்களுடனும் மக்களின் உதவியுடனும் தகரத்தினால் இருந்ததைவிட இவ்வாலயம் மேம்படுத்தப்பட்டது.

இந்த ஆலயத்தில் மாதத்தில் முதல் சனியும் இறுதிச் சனியும் மாலை 6.00 மணிக்கு திருப்பலி இடம்பெற்றது. 2006ம் ஆண்டு வைகாசி மாதம் 10ம் திகதி முதல் திருவிழாத் திருப்பலி அகஸ்ரின் அடிகளாரின் காலத்தில் இடம்பெற்றது. அடுத்து இந்தப் பங்கைப் பொறுப்பேற்ற பங்குத்தந்தை அருட்பணி. எஸ். அன்ரன் அடிகளாரின் காலத்தில் பெரிய ஆலயம் கட்டுவதற்காக 2008ம் ஆண்டு வைகாசி மாதம் 25ம் திகதி திருவிழா அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அன்னையின் திருவருளால் மக்கள் தொகை சிறிது சிறிதாக அதிகரித்தது. அனைத்து மக்களும் இவ்வாலயம் கட்டும் பணியில் பண உதவியும் சரீர உதவியும் தாராளமாக வழங்கினார்கள். அருட்பணி. அன்ரன் அடிகளாரின் காலத்திலேயே கட்டட வேலைகள் யாவும் நிறைவுபெற்றது. அடுத்ததாக வந்த ஆருட்பணி . கிறிஸ்துநாயகம் அடிகளாரின் பணிக்காலம் சொற்பமாக இருப்பினும் பல பணிகளை இந்த ஆலயத்திற்காக அவர் ஆற்றினார்.

அடுத்ததாகப் பணிப்பொறுப்பேற்ற அருட்பணி. றஜனிக்காந் அடிகளாரின் காலத்தில் மக்களின் ஒத்துழைப்புடனும் வெளிநாட்டில் உள்ளவர்களின் உதவியுடனும் பீடத்திற்கு மாபிள் பதிக்கப்பட்டு நற்கருணைப் பேழை வைக்கப்பட்டது. அத்துடன் பூச்சுவேலைகள் அரைவாசியும் நிறைவுபெற்றது. இவர் மாற்றலாகும் கடைசி நேரத்தில் போட்டிக்கோ மண்டபத்தின் கூரைவேலையை ஆரம்பித்துவைத்தார். நல்லாயன் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் ரெமோயினி, கௌசல்யா, கிறேஸ்கார்சிஸ் மற்றும் தற்போதுள்ள அருட்சகோதரிகளும் இந்த ஆலயத்திற்கு பல உதவிகளைச் செய்துள்ளனர்.

இறுதியாக இப்பங்கிற்கு வந்த அருட்பணி. லக்ஸ்ரன் டி சில்வா அவர்கள் எமது ஆலயத் திருவிழாவிற்குமுன் அனைத்து ஆலய வேலைகளையும் நிறைவுசெய்து திறப்பு விழாச் செய்ய வேண்டும் எனும் நோக்குடன் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து அழகிய ஆலயமாக இதை மாற்றி அமைத்துள்ளார்.

# நாட்டு நடப்புக்கள்

## தருவது நாங்கள் ........ தீர்மானிப்பது நீங்கள்........

### கார் ஓட்டப்பந்தயத்திற்கு 300 விலைமாதர்கள் வரவழைப்பு

கண்டியில் நடைபெற்ற கார் ஓட்டப்பந்தயத்தன்று சுமார் 300 விலைமாதர்கள் வரவழைக்கப்பட்டனர். இது உலகின் புனித நகரம் எனப் பெயர் பெற்ற கண்டி நகருக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் களங்கமாகும் என மத்திய மாகாண முன்னாள் விவசாய அமைச்சரும் உறுப்பினருமான நிமல் பியதிஸ்ஸ தெரிவித்தார்.

மத்திய மாகாண சபையின் மாதாந்தக் கூட்டம் அதன் தலைவர் மகிந்த அபேயக்கோன் தலைமையில் பல்லேகலையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, உலக மரபுரிமை நகராகவும், உலக புனித நகராகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கண்டி மாநகரில் கார் ஓட்டப்பந்தயங்க்ளைப்போன்ற கேளிக்கைகள் நடைபெறக்கூடாது என்று கோரிக்கை விடுத்தும் அது மீறப்பட்டது. அதிகாரம் படைத்த தனி மனிதனுடைய தேவைக்காக தனி நிறுவனம் ஒன்று எதற்கும் அஞ்சாது சட்டத்தை மதிக்காது கார் ஓட்டப்பந்தயத்தை நடத்தியுள்ளது.

அன்றைய தினம் கண்டி மாநகரில் மாலை 5.00 மணிக்குப் பிறகு சாதாரண பொதுமக்களுக்குக்கூட நடமாட முடியாத சூழ்நிலை காணப்பட்டது.

கண்டி நகர சுற்றுலா விடுதிகளில் இக்கார் ஓட்டப் பந்தயத்தினத்தன்று சுமார் 300க்கும் மேற்பட்ட விலைமாதர்கள் கொண்டுவரப்பட்டிருந்ததாகவும் அதில் அனேகமானோர் வெளிநாட்டு விலைமாதர்கள் எனவும் தெரியவருகிறது என்றார்.

### ஞானசார தேரர் மற்றும் சம்பிக்கவுக்கு எதிராக 2 இலட்சம் முறைப்பாடுகள்

பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கு எதிராக 24 மணித்தியாலங்களுக்குள் 2 இலட்சம் முறைப்பாடுகள் முகநூல் நிர்வாகத்துக்குக் கிடைத்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் ஆசிய நாடுகளில் இருந்தே அதிக முறைப்பாடுகள் கிடைத்தன. இந்நிலையில் பொதுபல சேனாவின் வாசகர் பக்கத்திற்கு எதிராக மொத்தமாக 50 லட்சம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானில் இருந்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனினும் எந்த மதத்துக்கு எதிராகவும் தாம் முகநூலைப் பயன்படுத்தவில்லை என்று ஞானசார தேரர் முகநூல் நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளார்.

### மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 2,500 மீனவருக்கு வலைத்தொகுதிகள், தற்காப்பு அங்கிகள் கையளிப்பு

மன்னார் மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தில் பதிவுசெய்து எரிபொருள் மானியம் பெற்ற அனைத்து மீன்பிடிப் படகு உரிமையாளர்களுக்கும் மாற்று மானியத்திட்டமாக வலைத் தொகுதி மற்றும் தற்பாதுகாப்பு அங்கிகள் என்பன கடந்த 11.07.2014 முதல் வழங்கப்பட்டு வருவதாகக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் வி. எஸ். மிராண்டா தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 2,500 மீன்பிடிப் படகுகளின் உரிமையாளர்களுக்கு முதற்கட்டமாக தற்போது இவை வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு உரிமையாளருக்கு ஒரு லட்சத்து 12 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைத்தொகுதிகள் மற்றும் இரண்டு தற்பாதுகாப்பு அங்கிகள் என்பனவே வழங்கப்பட்டு வருகின்றன. கடற்தொழில் அமைச்சினால் மீனவர்கள் தற்பாதுகாப்பு அங்கி அணிந்தே தொழிலுக்குச் செல்லவேண்டும் என அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைவாகவே குறித்த தற்பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். முதற்கட்டமாக மீனவர்களுக்கு வழங்கப்படுவதற்காக 5,325 தற்பாதுகாப்பு அங்கிகள் தமக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மன்னார் ஊடகவியலாளரை விசாரணைக்கு அழைப்பு

மன்னார் மாவட்ட ஊடகவியலாளர் திரு. எஸ். ஆர் லெம்பேட் அவர்கள் இரண்டாவது தடவையாக மீண்டும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸாரினூடாகக் கடந்த 11.07.2014 வெள்ளிக்கிழமை அழைப்பாணைக் கடிதம் மன்னார் மூர்வீதியில் உள்ள அவரது வீட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்தக்கடிதத்தில் ஊடகவியலாளரான எஸ். ஆர். லெம்பேட் என்பவரிடம் வாக்குமூலம் பெறுவதற்காகக் கொழும்பு குற்றத்தடுப்பு (சி.ஐ.டி.) காரியாலயத்திற்கு 14.07.2014 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு வருகைதருமாறு குறிப்பிட்டுள்ளது.

இதே ஊடகவியலாளர் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 9ஆம் திகதியும் கொழும்பு பயங்கரவாதக் குற்றத்தடுப்புப்பிரிவினரால் கொழும்பிற்கு அழைக்கப்பட்டு சுமார் 3.00 மணி நேரம் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை
கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை
உரியவர்களுக்கு வழங்குங்கள்.
சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக்
காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.
பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில்
பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள்,
அருட்சகோதரிகள் அல்லது பொதுநிலைப்
பணியாளர்களும் இது விடயத்தில் அக்கறை
செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.
உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும்
உடனடியாக அவற்றை
உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு
அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# ஓமந்தைப் பங்கில் முப்பெரும் விழா





ஓமந்தை பங்கின் இளமருதங்குளம் தூய கார்மேல் அன்னையின் வருடாந்த ஆலயத்திருவிழா கடந்த 16.07.2014 அன்று மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை தலைமையில் பங்குத்தந்தை அருட்பணி. லக்கோன்ஸ் பிகிறாடோ அவர்களின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது. ஆலயத்திருவிழா, கத்தோலிக்க விசுவாசத்தின் நூற்றாண்டு விழா, அருட்சகோதரி கிளேயா (திருச்சிலுவை கன்னியர் சபை) அவர்களின் துறவற அர்ப்பணத்தின் 40ஆம் ஆண்டு நிறைவுவிழா என்பன இணைந்து ஒரு முப்பெரும் விழாவாக இவ்விழா கொண்டாடப்பட்டது.

1914ம் ஆண்டில் இளமருதங்குளம் பகுதியில் வாழ்ந்த கட்டையர் குடும்பம், காளியர் குடும்பம், தனியார் குடும்பம், சினப்புலி அம்மா (தலைவர் பெயர் தெரியவில்லை) குடும்பம் என நான்கு குடும்பங்கள் திருமுழுக்குப்பெற்று கத்தோலிக்க விசுவாசத்தை ஏற்றுக்கொண்டனர். இவர்களின் சமயக் கடமைகளுக்காக சிறு வட்டக் கொட்டிலாக ஆலயம் அமைத்து கார்மேல் அன்னையைக் கொலுவேற்றியுள்ளனர்.

பின்னர் செங்கல் களிமண்ணாலான ஆலயம் அமைக்கப்பட்டது. 1945ம் ஆண்டில் வவுனியா பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி. Z. N. குரூஸ் அடிகளாரால் விசாலமான ஆலயத் தேவை உணரப்பட்டு 3வது ஆலயப்பணி ஆரம்பமாகி பலரது ஒத்துழைப்புடன் நிறைவெய்தியது.

யுத்தத்தின் பின்னர் புதிய ஆலயக் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் நூற்றாண்டுவிழாத் திருப்பலியும் தொடர்ந்து நிகழ்வுகளும் தயாராக்கப்பட்ட முழுமையடையாத ஆலயத்தின் போட்டிக்கோ முன்றலிலேயே நடைபெற்றது. இடம்பெயர்வினால் சிதறுண்டு வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் வாழும் உறவுகள் பலரும் இவ்விழாவில் கலந்துகொண்டது சிறப்பான விடயமாகும்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## சேவை நலன் பாராட்டு விழாவும் வரவேற்பு வைபவமும்



மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களுடைய சமாசத்தின் இயக்குனர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா அடிகளாருக்கான பிரிவுபசார சேவை நலன் பாராட்டு விழாவும், புதிய இயக்குனர் அருட்பணி. ஒல்பன் இராஜசிங்கம் அடிகளாருக்கான வரவேற்பு நிகழ்வும் கடந்த மார்ச் மாதம் 12ஆம் திகதி குடும்பநலப் பணியக மண்டபத்தில் இடம்பெற்றது. அவ்வேளையில் எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம்.


## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

கட்டண விபரம்

கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=


## ஆட்காட்டிவெளிப் பங்கு இளைஞர்களின் மகிழ்ச்சிப் பயணம்


கடந்த மே மாதம் 14ம், 15ம் திகதிகளில் ஆட்காட்டிவெளிப் பங்கு இளைஞர்கள் திருகோணமலை மாவட்டத்திற்கு சுற்றுலாப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். ஆட்காட்டிவெளிப் பங்குத்தந்தை அருட்பணி. டெஸ்மன் அஞ்சலோ அவர்களின் தலைமையில் இரண்டு நாட்களைக் கொண்டதாக இச்சுற்றுலாப் பயணம் அமைந்திருந்தது. இப்பயணமானது இளைஞர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதாகவும், இளைஞர்களின் ஒற்றுமையை வெளிகாட்டுவதாகவும் அமைந்தது.

அந்நாட்களில் வென்னீரூற்று, திருக்கோணேஸ்வரர் ஆலயம், மாபிள் பீச், நிலாவெளி பீச் மற்றும் ஏனைய சுற்றுலாத் தலங்களை இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் கண்டுகளித்தனர்.

கடந்த 25.05.2014 அன்று பங்கிலே நடைபெற்ற இளைஞர் ஒன்றியக் கூட்டத்திலே புதிய நிர்வாகத் தெரிவுகள் இடம்பெற்றன.

## வவுனியா புனித அந்தோனியார் ஆலய முதல்நன்மை பெருவிழா





வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த 49 சிறுவர்களுக்கான முதல்நன்மைப் பெருவிழா கடந்த 25.05.2014 அன்று மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி. சத்தியராஜ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவின்போது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.

## மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் பணியகத்தின் நிகழ்வுகள்

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் பணியகத்தினால் கடந்த மாதத்தில் சில நிகழ்வுகள் இடம்பெற்றன. Dr. றோய் அவர்களினால் "சிறுவயதுத் திருமணமும் பாலியல் பிரச்சினைகளும்" தொடர்பான கருத்தரங்கு, இளைஞர் ஆணைக்குழுவினால் வவுனியா, மன்னார், மடுமறைக்கோட்டங்களுக்கான கிரிக்கட், கிளித்தட்டு விளையாட்டுப் போட்டிகள், அருட்பணி. ஜெயபாலன் குரூஸ் அவர்களினால் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் இளைஞர்கள் மற்றும் பொதுநிலையினருக்கான மனித உரிமை தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. இவற்றோடு அருட்பணி. போல் றொபின்சன் அவர்களினால் "ஆன்மீகம் ஓர் அனுபவம்" என்ற கருத்தரங்கும் திருகோணமலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து 100ற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வுகளின் சில படங்களை கீழே காணலாம்.









### மன்னார் மறைமாவட்டத்தில் இடம்பெற்ற

# தேசிய அன்பியக் கூட்டம்

இலங்கை அன்பிய தேசியக் குழுவின் 2014ம் ஆண்டின் 2வது கூட்டம் மன்னார் மறைமாவட்டத்தின் மடுத் தியான மண்டபத்தில் ஆனி மாதம் 18, 19, 20 ஆகிய தினங்களில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 09 மறைமாவட்டங்களின் 40 பிரதிநிதிகள் பங்கேற்றனர். ஆரம்ப நிகழ்வு ஆனி 18, புதன் பி.ப 3.00 மணியளவில் மடுத்தியான மண்டபத்தில் இடம்பெற்றது. அன்றைய தினம் திருத்தந்தையின் கொடியையும், மறைமாவட்ட அன்பியக் கொடியையும், முறையே மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசையும், அன்பியத் தேசிய இயக்குனர் அருட்பணி. லைலி பெர்ணான்டோவும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து விவிலிய அரங்கேற்றம், ஆரம்ப செபம், மங்கள விளக்கேற்றல் ஆகியன இடம்பெற்றன. வருகைதந்தோரை மன்னார் மறைமாவட்ட அன்பிய இயக்குனர் அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு வரவேற்றார். மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர், இலங்கை அன்பியத் தேசிய குழுவின் இயக்குனர் ஆகியோரது உரைகளைத் தொடர்ந்து அன்பிய களச்சந்திப்பிற்கெனத் தேசியக் குழு உறுப்பினர்கள் 04 குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். தட்சனா மருதமடு, சின்னப் பண்டிவிரிச்சான், செட்டிகுளம், குஞ்சுக்குளம் ஆகிய பங்குகளுக்கு மன்னார் மறைமாவட்ட மத்திய குழு உறுப்பினர்களின் வழிகாட்டலுடன் பி.ப 4.30 மணியளவில் இக்குழுக்கள் சென்றடைந்தன.

இக்குழுக்கள் சென்று பார்வையிட்ட பங்குகளில், அன்பிய வாழ்வின் அணுகுமுறைகள், மக்களின் துன்ப துயரங்களில் இறைவார்த்தை ஆறுதல் அளிக்கும் விதம், மக்களின் பங்கேற்பு, ஏழு படி நற்செய்திப் பகிர்வு முறை போன்றவற்றை அறிந்துணர்ந்து வியந்து பாராட்டினர். மக்கள் கண்ணீரோடு ஏழு படி நற்செய்திப் பகிர்வில் தங்கள் கடந்தகால அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டவேளை தேசியக் குழுவினரது கண்களினின்று கண்ணீர் மல்கியதுடன் மக்களினது துன்பியல் வாழ்வையும் அவர்கள் உணர்ந்துகொண்டதை மீளாய்வில் பகிர்ந்துகொண்டனர். மன்னார் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுவும், மக்களும் காட்டும் ஆர்வத்தையும் பாராட்டினர்.

அடுத்த நாள் (19.06.2014) காலை 9.00 – 12.30 வரை மன்னார் மறைமாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. ஜெயபாலன் குருஸ் அவர்களால் "அன்பியமும் மனித உரிமைகளும்" எனும் தொனிப்பொருளில் தேசிய அன்பியக் குழுவினருக்கு பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது.

அன்று பி.ப 4.00 மணிக்கு மன்னார் பேராலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அன்பிய இணைப்பாளருக்கான ஒன்றுகூடலின்போது சுமார் 400 அன்பிய இணைப்பாளர்கள் கூடியிருந்தார்கள். மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இவ்வொன்றுகூடலில் கலந்துகொண்டு அன்பிய வளர்ச்சிமுறை சார்ந்த கருத்துக்களைப் பகிர்ந்து அன்பியப் பணியாளர்களையும் பாராட்டினார்.

மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளிலிருந்து அணிதிரண்டு வந்திருந்த அன்பியப் பணியாளர்களுக்கு முன்னைநாள் அன்பியத் தேசிய இயக்குனரும், இலங்கைக் கிளரிசியன் சபையின் மாகாண முதல்வருமாகிய அருட்பணி. டோமினிக் றொகான் அவரின் தலைமையில் "செவிமடுத்தல்" எனும் கருப்பொருளில் பயிற்சி வழங்கப்பட்டது.

இறுதி நாளாகிய 20.06.2014 அன்று மருதமடுத் தியான நிலையத்தின் கேட்போர்கூடத்தில் தேசிய அன்பிய ஆணைக்குழுவிற்குப் பொறுப்பாக இருக்கின்ற ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்ணாண்டோ தலைமையில் இவ்வருடத்தின் 2வது தேசிய அன்பியக் கூட்டம் இடம்பெற்றது. அதில் பல்வேறு மறைமாவட்டங்களினால் சமர்பிக்கப்பட்ட அரையாண்டு அன்பிய அறிக்கையில் மன்னார் மறைமாவட்ட அறிக்கை தனித்துவமானதாகவும் பாராட்டுக்குரியதாகவும் இருப்பதாக ஆயர் அவர்கள் குறிப்பிட்டார். மன்னார் மறைமாவட்ட அன்பிய அறிக்கையானது காணொளி காட்சிப்படுத்தலாக வழங்கப்பட்டது.

ஈற்றில் அன்பியத் தேசியக் குழுவின் தலைவர் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்ணாண்டோ அவர்களின் ஆசீருடன் 20.06.2014 நண்பகல் 1.30 மணியளவில் அன்பிய தேசியக் குழுவின் 2வது கூட்டத்தொடர் இனிதே நிறைவுற்றது.

தகவல் : டி.பி.எவ். ஞானப்பிரகாசம்,
செயலாளர் அன்பியத் தொடர்பகம்.

### கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரின்

## புதிய நிர்வாகத் தெரிவு

மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரின் 2014 - 2015 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத்தெரிவு கடந்த மாதம் இடம்பெற்றது. இதன்போது கடந்த இரண்டு வருடங்களாகப் பணியாற்றிய தலைவர், செயலாளர், பொருளார் முறையே திரு. E. டெலிஸ்ரன் நிஷாந் (தோட்டவெளிப் பங்கு), செல்வி. ரி. ஜொயலின் (அனுஷா) (வேப்பங்குளப் பங்கு), உபசெயலாளர் செல்வி. றஜேந்தினி (அடம்பன் பங்கு), திரு. ஏபிராம் (றொகான்) (வஞ்சியங்குளப் பங்கு) ஆகியோருக்கும் ஏனைய நிர்வாக உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து இவ்வாண்டிற்கான புதிய உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் தலைவராக திரு. எட்வேட் (கற்கிடந்தகுளம் பங்கு) அவர்களும், செயலாளராக செல்வி டீ. பிறிடா (முத்தரிப்புத்துறை பங்கு) அவர்களும், பொருளாளராக, திரு. அலெக்ஸ் லௌசன் (செட்டிகுளப் பங்கு) அவர்களும், உபதலைவராகத் திரு. தீபன் (வேப்பங்குளப் பங்கு) அவர்களும், உபசெயலாளராக செல்வி. சோபியா (விடத்தல்தீவுப் பங்கு) ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பினால் கொண்டாடப்பட்ட

# மன்னார் மறைசாட்சிகள் நினைவு விழா – 2014

### – யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகை சிறப்பு விருந்தினராகப் பங்கேற்பு!

### – 21 கிராமங்களிலிருந்து மக்கள் பங்கேற்பு! – யாழ் ஆயர் கௌரவிப்பு!













கி. பி. 1544ஆம் ஆண்டு கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாய் மாறியதால் தோட்டவெளிப் பகுதியில் வாழ்ந்த கமண்டலர் (Kadayar Pattankatty) என்ற சமூக மக்கள் 600க்கும் மேற்பட்டோர் யாழ் அரசன் சங்கிலியால் கொல்லப்பட்டார்கள். 1கொரி. 4:20 படி "இறையாட்சி பேச்சில் அல்ல, செயற்பாட்டில்தான் இருக்கிறது." என்பதை இவர்கள் நிரூபித்து கிறிஸ்துவுக்காய் இரத்த சாட்சிகளாக மரித்தார்கள்.

மேலும் சென்ற நூற்றாண்டில் தோட்டவெளி மறைசாட்சிகள் எலும்புகளைக்கொண்டு பல நன்மைத்தனங்களை இலங்கை, இந்தியாவிலுள்ள இறைமக்கள் மற்றும் பிறசமய மக்கள் பெற்றுக்கொண்டார்கள் என்பது உலகறிந்த உண்மையாகும்.

இதைப் போற்றும்விதமாக மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பு வருடந்தோறும் மறைசாட்சிகளின் நினைவுவிழாவைக் கொண்டாடி வருகிறது. மன்னார்த் திருச்சபையின் சார்பாக மேதகு ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை ஆசியும், உற்சாகமும் வழங்கிவருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஒவ்வொரு ஆண்டும் யூலை மாதம் மூன்றாவது வாரத்தின் வெள்ளி, சனி தினங்களில் இவ்விழா கொண்டாடப்பட்டுவருகிறது. இவ்வாண்டு யூலை 19ம் திகதி சனிக்கிழமை வழமைபோல் இவ்விழா கொண்டாடப்பட்டது. தோட்டவெளி வேதசாட்சிகள் மண்ணில் அமைந்துள்ள வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் கடந்த 18.07.2014 வெள்ளிக்கிழமை மாலை 04.45 மணிக்கு இச்சமூகக் கொடியாகிய பரிசுத்த ஆவியின் கொடி அருட்பணி. இ. செபமாலை (எழுத்தூர் பங்குத்தந்தை) அவர்களால் ஏற்றிவைக்கப்பட்டு விழா இனிதே ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனையை மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்பணி. தமிழ்நேசன் அடிகளார் நடாத்தினார். "நற்கருணையை வாழ்வாக மாற்றுவோம்" என்ற கருப்பொருளில் அடிகளார் இறைவார்த்தையைப் பகிர்ந்தார்.

மறுநாள் 19.07.2014 சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு மன்னார், தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள தோட்டவெளி சந்தியில் அமைக்கப்பட்டுள்ள வரவேற்பு மாதா (வேத சாட்சிகளின் இராக்கினி) சுருபத்திலிருந்து மன்னார் மறைசாட்சிகளின் வழித்தோன்றலும் இன்றைய யாழ் மறைமாவட்ட ஆயரும் முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயருமான மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராக வரவேற்கப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டு ஊர்தியில் தோட்டவெளி வேதசாட்சிகள் இராக்கினி ஆலயத்திற்கு அழைத்து வரப்பெற்றார். அப்பொழுது வீதி நெடுகிலும் பான்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு, மலர்கள் தூவப்பட்டு பொதுமக்களும் சிறப்பு விருந்தினர்களும் முன்செல்ல ஊர்வலம் ஆலய வீதியை வந்தடைந்தது. அதிலிருந்து கவிகள் பாடி ஆலயத்திற்கு மேதகு ஆண்டகை அழைத்துவரப்பட்டார்.

அதைத் தொடர்ந்து திருவிழாத் திருப்பலி மேதகு யாழ் ஆயர் தலைமையில் நடைபெற்றது. அருட்பணி. சூசைப்பிள்ளை, இந்தியாவில் இருந்து வருகைதந்து அடம்பன் நெடுங்கண்டலில் பணிசெய்யும் அருட்பணி. ரிச்சாட் (சே. ச), மன்னார் மறைமாவட்ட ஆன்மீக மைய இயக்குனர் அருட்பணி. யூட் குரூஸ், அருட்பணி. சாந்தன் இம்மானுவேல், அருட்பணி. இ. செபமாலை ஆகியோர் சேர்ந்து கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். மேலும் அருட்பணி. அன்ரனி பொன்சியன் (அமதி) அவர்களும் திருப்பலியில் கலந்துகொண்டு செபித்தார்கள்.

யாழ் ஆயர் அவர்கள் உரையாற்றும்போது கூறியதாவது, 1980 ஆடி 30ல் நான் ஆயர் பட்டம் பெற்றேன். அவ்விழா முடிந்தவுடன் கர்தினால் தோமஸ் கூரே அவர்கள் முதலாவது ஒரு கேள்வியை என்னிடம் கேட்டார். இந்த மறைமாவட்டத்தில் மன்னார் மறைசாட்சிகள் புனிதர் நிலையடைய நீர் என்ன செய்வீர்? அதன் அடிப்படையில் பராமரிப்பில்லாமல் கிடந்த தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தை வடிவாகக் கட்டி அமைத்தேன். மறைசாட்சிகள் பற்றிய ஒரு வரலாற்று ஆய்வை துறைசார்ந்த அறிஞர் ஒருவரால் எழுதச்செய்து, அதை இலத்தீன் மொழியில் மொழிபெயர்ப்புச் செய்து அதை உரோமையிலுள்ள புனிதர் பட்டம் அளிப்பதற்கான திருப்பேராயத்திடம் ஒப்படைத்தேன். அது இன்றுவரை பதிவில் இருக்கின்றது.

விழாவில் மன்னார் மறைசாட்சிகளின் சுருக்க வரலாறு, மறைசாட்சிகளைப் புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான செபம், மற்றும் திருப்பலிப் பாடல்கள் அடங்கிய பாடல் புத்தகம் ஆகியவை திருப்பலியில் பங்கெடுத்தவர்களுக்கு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சமூக அமைப்பின் நிகழ்வுகள் மேதகு ஆயரின் தலைமையில் நடந்தது. இதில் அமைப்பின் ஆய்வாளர் திரு. எஸ். அந்தோணிபிச்சை அவர்களால் மன்னாரில் மறைசாட்சிகள் மறைவுக்குப் பிறகு நடந்த நிகழ்வுகளை "இந்தப் புனித எலும்புகள்" என்ற தலைப்பில் உரையாக வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேதகு ஆயரின் சேவையைப் பாராட்டி அவருக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது. இவ்வமைப்பின் கிராமங்களிலிருந்து பல்கலைகழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு பரிசுத்தொகை ஆயர் முன்னிலையில் இவ்வமைப்பால் வழங்கப்பட்டது. அதைத்தொடர்ந்து வாழ்த்துமடலும், நினைவுச் சின்னமும், பரிசுத்தொகையும் இவ்வமைப்பால் மேதகு ஆயர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதைத்தொடர்ந்து இறைமக்கள் அனைவரும் மெழுகுதிரி ஏந்திநிற்க மறைசாட்சிகள் கல்லறை ஆசீர்வதிக்கப்பட்டது. பின்னர் கொடியிறக்கப்பட்டு விருந்தினர் உபசரணை நிகழ்ந்தது.

இவ்விழாவிற்கு அருட்சகோதர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மாகாணசபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான பேசாலை ஆ. பிறிமுஸ் சிராய்வா, மன்னார் பிரதேச சபைத் தவிசாளர், மன்னார் பிரதேச சபை உப தவிசாளர் திரு. சகாயம், மாந்தை மேற்கு பிரதேச சபை உப தவிசாளர் சவுந்தரநாயகம் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் பலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு இவ்விழாவைச் சிறப்பித்தார்கள்.

மேலும் இம்மாவட்டத்தில் இவ்வமைப்பை சேர்ந்த 21 கிராமங்களிலிருந்தும் பல்வேறு இடங்களிலிருந்தும் இறைமக்கள் இவ்விழாவிற்கு வருகைதந்து மன்னார் மறைசாட்சிகள் புனிதநிலையடைய விசுவாசத்தோடு செபித்தார்கள் என்பது மிகவும் குறிப்பிடத்தகுந்த விடயமாகும். இவ்விழாவிற்கான ஏற்பாட்டை மன்னார் மறைசாட்சிகள் சமூக நல அமைப்பின் நிர்வாகம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.

**தகவல்:- எஸ். அந்தோணிபிச்சை (M. A, M. phil)**
**மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பு**
**(ஸ்தாபகர், ஆய்வாளர், ஆலோசகர், தொடர்பாளர்)**

# தமிழரின் கலை, கலாசார, மொழி அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன!

## சிங்களமயமாக்கலே முன்னெடுக்கப்படுகின்றது!

### மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவிப்பு

தமிழர்களின் பாரம்பரிய கலை, கலாசார, மொழி அடையாளங்கள் அழிக்கப்பட்டு சிங்களமயமாக்கல் நடவடிக்கையே தற்போது மிக விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் தாய்மொழியான தமிழ் மொழியைப் பேசவேண்டியதுடன் அந்த மொழியிலேயே அனைத்துக் கருமங்களையும் நிறைவேற்றுகின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்றும் தெரிவித்துள்ள சிவில் சமூகப்பிரதிநிதிகள், இது எமது உரிமை என்ற அடிப்படையில் அனைவரும் செயற்பட வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையில் மொழிப்பிரச்சினை தொடர்பிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்திலுள்ள விடுதியொன்றில் கடந்த 18.07.2014 அன்று நடைபெற்றபோதே சிவில் சமூகப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இங்கு இவர்கள் மேலும் தெரிவிக்கையில், ஓர் இனத்தின் மொழியும் மதமும் அந்த இனத்தின் இருப்பை நிலைநாட்டுவதற்கு மிக முக்கியமானதாக இருக்கின்றது. இதற்கமைய தமிழர்களின் இருப்பை நிலைநாட்டுவதற்காக இந்த இரண்டையும் பேணிப்பாதுகாப்பதுடன் இதனை வளர்த்தெடுப்பதற்கு பல வழிகளிலும் காலம் காலமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இங்கு அவ்வாறான நிலைமை இல்லாத நிலையே இருக்கின்றது. ஆனால் வெளிநாட்டிலிருந்து பார்க்கின்றவர்களுக்கு இங்கு ஏதோ நடக்கின்றது; இங்கு மக்கள் நிம்மதியாக இருக்கின்றனர் என்றே தெரிவதுடன் அவ்வாறே அரசினால் பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இங்கு நடைமுறையில் பல சிக்கல்கள் நிலவுவதுடன் மோசமான நிலையே இருக்கின்றது. இத்தகைய நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு மனித உரிமை ஆணைக்குழுவிற்கு கடப்பாடுகள் இருக்கின்றன. குறிப்பாக பொலிஸ் மற்றும் வங்கிகளில் இத்தகைய செயற்பாடுகள் மிக மோசமாகவே இருக்கின்றன.

தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமல் சிங்கள மொழிக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இதனால் ஏற்படுகின்ற பாதிப்புகளும் இழப்புகளும் ஏராளம். இவ்வாறான நிலைமைகள் தொடர்வதனால் எமது மொழி, பண்பாட்டு விழுமியங்கள் அழிக்கப்பட்டு சிங்களமயமாக்கல் நடவடிக்கைகளே தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆகவே இந்நிலை மாற்றப்பட்டு தாய் மொழியான தமிழ் மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்ற நிலைமை ஏற்படுத்தப்படவேண்டும். வடக்கு, கிழக்கு தாயகப் பிரதேசத்தில் தமிழ் மொழியிலேயே பேசவேண்டும். தமிழ் மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். தமிழன் என்ற உணர்வுடன் செயற்பட வேண்டுமென்றும் தெரிவித்தனர்.

இதனை விடுத்து அற்ப சொற்ப சலுகைகளுக்காகவும் சிறு சிறு காரியங்களை நிறைவேற்றுவதற்காகவும் தமிழ் மொழியை விட்டுக்கொடுக்க முடியாது. தமிழ் மொழி உமது உரிமை. அந்த உரிமையைப் பாதுகாக்க நாம் அனைவரும் விழிப்புணர்வுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

இந்நிலையில் மும்மொழிக் கொள்கையை அமுலாக்க வேண்டுமென்றும் மும்மொழிக்கொள்கை அடிப்படையில் அனைவரும் செயற்படவேண்டுமென்றும் தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார செயற்பட்டு வருகின்றார். அத்தோடு இதற்காக அவர் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

வாசுதேவ நாணயக்கார நல்ல மனிதர். எல்லாம் செய்ய வேண்டுமென்று நினைக்கின்றார். ஆனால் அவருடைய சொல்லை அல்லது கருத்தைக் கேட்டுச் செயற்படுவதற்கு யாருமில்லை. இதுதான் இன்றுள்ள மிகவும் பரிதாபமான நிலை.

# தமிழகத்தில் வேட்டி கட்டத் தடையா?

## புதிய சர்ச்சை உருவெடுக்கிறது

சென்னை சேர்ப்பாக்கம் கிரிக்கட் கிளப்புக்குள் நடந்த பொது நிகழ்சிக்குச் சென்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஹரிபரந்தாமன் மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் சிலர் வேட்டி அணிந்து சென்றதால் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. இந்தச்சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் சர்ச்சையை உருவாக்கி உள்ளது.

ஆங்கிலேய தேசத்தில் நமது பாரம்பரிய உடையை அணிந்து வலம்வந்த காந்தியையும் விவேகானந்தரையும் அந்தத் தேசம் அண்ணார்ந்து பார்த்தது. ரஷ்ய நாட்டில் நடுங்கும் குளிரிலும் தமிழரின் பாரம்பரிய உடையான வேட்டி சட்டையில் வலம் வந்த காமராஜரைப் பார்த்து அந்தத் தேசமே வியந்தது. அப்படிப்பட்ட தமிழரின் பாரம்பரிய உடைக்கு அந்நிய நாட்டில் கிடைக்கும் மரியாதை நம் நாட்டில் கிடைக்காதது பெரும் வெட்கக்கேடானது.

தமிழ்க் காற்றைச் சுவாசித்து, தமிழ் மண்ணில் இயங்கும் கிளப்புகள் தமிழ் கலாச்சாரத்தை அவமதிப்பதை ஏற்க முடியாது என்று அரசியல் கட்சிகளும் பல்வேறு அமைப்புகளும் கொந்தளிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# போரால் பாதிக்கப்பட்ட நாட்டைச் சேர்ந்த நான் போரின் பாதிப்புக்களை நன்கு அறிவேன்

**– யாழ்ப்பாணத்தில் திருத்தந்தையின் பிரதிநிதி –**

போரால் சின்னாபின்னப்படுத்தப்பட்ட வியட்நாம் நாட்டைச் சேர்ந்த ஆயராகிய நான் போரின் தாக்கங்களையும், பின்விளைவுகளையும் நன்கு அறிவேன். அன்பு, சமாதானம், நீதி என்பவற்றைக் கடைப்பிடிப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் அமைதியான சமூகத்தை உருவாக்க முடியும் என பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மேதகு உவான் ரொற் ஆண்டகை கடந்த 13.07.2014 அன்று யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டு வருகை தந்தபோது தெரிவித்தார்.

இலங்கைக்கான பிரதிநிதியாக அண்மையில் நியமனம் பெற்ற பேராயரின் யாழ்ப்பாண மறைமாவட்டத்திற்கான முதலாவது பயணம் இதுவாகும். குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் 13.07.2014 அன்று இவருக்கான வரவேற்பும் திருப்பலி நிகழ்வும் இடம்பெற்றன. பேராயருடன் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். யாழ். ஆயரின் பிறந்த தினம் 13.07.2014 அன்று என்பது குறிப்பிடத்தக்கது. பேராயர் யாழ்ப்பாணத்தின் சில பங்கு ஆலயங்களையும் சந்தித்து கலந்துரையாடி நிலைமைகளை அறிந்துகொண்டார். கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய மக்களையும் சந்தித்து வழிபாட்டுக் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

# தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்ட ஆய்வுகள் நிறைவு

செபமாலைத்தாசர் தியானயோக துறவு சபையின் நிறுவுனர் இறையடியார் தவத்திரு வ. அ. தோமஸ், (அ.ம.தி) அடிகளாரைப் புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான ஆய்வுகள், அமலமரித் தியாகிகள் துறவுசபையின் வேண்டுகோளுக்கு இணங்க மறைந்த யாழ் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் 1986ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆயினும் நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரம் காரணமாக இம்முன்னேற்பாடுகள் தடைப்பட்டன.

சில ஆண்டுகளின் பின்னர் செபமாலைத்தாசர் சபையின் உயர்தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க, யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் குருக்கள், துறவிகள் பொதுநிலை விசுவாசிகள் அனைவருக்கும் உத்தியோகபூர்வமான அறிவிப்பின் மூலம் 2003ம் ஆண்டு இம்முன்னேற்பாடுகள் மீண்டும் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

2003ம் ஆண்டிலிருந்து இன்றுவரை மறைமாவட்ட விசாரணைகள் அனைத்தும் நடைபெற்று இப்பொழுது அவை நிறைவுக்கு வந்துள்ளன. தற்பொழுது இறையடியார் தவத்திரு வ. அ. தோமஸ் (அ.ம.தி) அடிகளாரைப்பற்றிய முக்கியமான விடயங்கள், சாட்சியங்கள் அனைத்தும் பரவலாக சேகரிக்கப்பட்ட நிலையில், மறைமாவட்ட ரீதியில் இம்முன்னேற்பாடுகளை நிறைவுசெய்வதற்கான காலம் வந்துள்ளது.

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுடனும் மற்றும் செபமாலைத் தாசர் சபையின் உயர் தலைவர் அருட்தந்தை கே.பி சேவியர் (செ.தா.), புனிதப்பட்ட ஆய்வில் ஆயரின் பிரதிநிதியாச் செயல்படும் அருட்தந்தை எட்வின் வசந்த ராஜா (அ.ம.தி) மற்றும் புனிதர்பட்ட ஆய்வில் நீதி ஊக்குனர் அருட்தந்தை



மேரி யோசவ் ஆகியோருடனும் கலந்தாலோசித்த பிற்பாடு, இறுதி நிகழ்வு ஐப்பசி மாதத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு இறையடியார் தவத்திரு வ. அ. தோமஸ் அ.ம.தி அடிகளார் வாழ்ந்த, பணி புரிந்த, இறையடி சேர்ந்த அவரது சொந்த மண்ணாகிய யாழ் மறை மாவட்டத்தில் நடைபெற ஆவணசெய்யப்பட்டுள்ளது.

இறையடியார் தவத்திரு தோமஸ் (அ.ம.தி) அடிகளார் பற்றிய மேலதிக விடயங்கள், அவரின் பரிந்துரை மூலம் பெறப்பட்ட புதுமைகள், சாட்சியங்கள் இருப்பின் உடனடியாகப் பின்வரும் முகவரிக்கு தெரியப்படுத்தும்படி மக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

**அருட்தந்தை அ.ம.ஸ்ரீபன் (செ.தா),**
**புனிதப்பட்டத்திற்கான ஊக்குனர்,**
**அருள்ஆச்சிரமம், இல.5 கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**

# திருத்தந்தையின் இலங்கைக்கான விஜயம் குறித்து கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அறிக்கை

எதிர்வரும் தை மாதம் (2015 ஆம் ஆண்டு) எமது நாட்டுக்கான திருத்தந்தையின் விஜயத்தைத் திருப்பீடம் உறுதிசெய்துள்ளது. உலகளாவிய ஆயராம் திருத்தந்தையின் எமது நாட்டுக்கான மேய்ப்புப்பணி வருகை எமக்கு மகிழ்ச்சியையும், நம் நாட்டுக்கும் திருச்சபைக்கும் பெரும் ஆசீரையும் பெற்றுத்தரும் நிகழ்வாகும்.

1995ஆம் ஆண்டு திருத்தந்தை 2ஆம் ஜோன் போல் (தற்போதைய புனிதர்) வருகை தந்தபோது நிகழ்த்திய சிறப்புமிக்க நற்கருணைக் கொண்டாட்டத் திருப்பலியின்போது இலங்கையின் அப்போஸ்தலரான யோசவ்வாஸ் அடிகளாரை அருளாளராக அறிவித்துப் பிரகடனப்படுத்தினார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வருகைபற்றி அறிந்ததும் எமது விசுவாசிகள், துறவிகள் மற்றும் குருக்கள் அருளாளர் யோசேவ்வாஸ் முனிவரை இம்மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில் திருத்தந்தை புனிதராகப் பிரகடனப்படுத்துவாரா என ஆர்வம் காட்டுகின்றனர். எமது அன்புக்குரிய அப்போஸ்தலரை எமது மண்ணிலேயே திருத்தந்தை புனிதராகப் பிரகடனப்படுத்துவாராயின் அது எமக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியைக்கொணரும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை ஆயர்களின் 'அட்லிமினா' எனப்படும் (ஒரு நாட்டு ஆயர்கள் ஐந்து வருடத்திற்கு ஒருமுறை திருத்தந்தையைச் சந்திக்கும்) சந்திப்பின்போது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் ஏறக்குறைய ஒன்றரை மணித்தியாலயங்கள் செலவழித்தபோது - நாம் தனித்தனியாகவும், ஒன்றாகச் சேர்ந்தும் திருத்தந்தையின் வருகையை முன்னிட்டு புனிதர் பட்டத்துக்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொண்டோம்.

மேலும் புனிதர் பட்டத்திற்கான பேராயத்தத்துடன் இடம்பெற்ற சந்திப்பின்போது எமது அருளாளரின் பரிந்துரையால் இடம்பெற்றுள்ள 'புதுமையை' பரிசோதிக்கும் படிமுறையை விரிவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டோம். மேலும் எம் நாட்டு மக்கள் தமது ஆயர்களோடும், குருக்கள், துறவிகள் அனைவரோடும் அடிகளாருடைய புனிதர் பட்டத்திற்காக சேர்ந்து இறைவனை பிரார்த்திக்கிறார்கள்.

அதேபோல் புனிதர்பட்ட வேலைகளை உரோமிலிருந்து அவதானமாகச் செயற்படுத்தும் புதிய குருவானவரான அருட்தந்தை கலாநிதி தோமஸ் கொலஸ்டர்காம் அ.ம.தி அடிகளாருக்காகவும் ஆண்டவரை நன்றியோடு நினைவுகூருகின்றோம். நாங்கள் இக்கருத்துக்காக உருக்கமாகச் செபிக்க முன்வரவேண்டும். அனைத்துக் குருக்களும் துறவிகளும் இதற்கான செப வழிபாடுகளை எமது ஆலயங்களிலும், நிறுவனங்களிலும் ஒழுங்குசெய்யுமாறு அழைக்கின்றோம். எல்லாச் சிறுவர்களும் (மறைக்கல்வி, பாடசாலை, ஏனைய) இச்செப அணியில் இணைந்துகொள்ள வேண்டும். எமது கத்தோலிக்க குடும்பங்களிலும் புனிதர் பட்டத்திற்கான இச்செபத்தை தினமும் செபிக்கும்படியாக கேட்டுக்கொள்கின்றோம்.

நாங்கள் அனைவரும் ஒருமனத்தோடு உருக்கமாகச் செபிப்போமானால் நமது வானகத் தந்தை எமது செபத்தைக் கேட்டு எமது அப்போஸ்தலரை உலகத் திருச்சபையின் புனிதர்களின் வரிசையில் இடம்பெறச் செய்வார் என்பது எமது விசுவாசமாகும்.

அருளாளர் யோசேவ்வாஸ் முனிவர் மிகவும் அன்புசெய்த எமது தேவதாயாரும் எமது கருத்துக்காகப் பரிந்து பேசி வருகிற தை மாதம் பாப்பரசர் பிரான்சிஸ் இலங்கைக்கு வரும் சந்தர்ப்பத்திலேயே இவ்வருளையும் எமக்குப் பெற்றுத்தருவார் என்பதும் எமது நம்பிக்கையாகும்.

## அப்புத்தளைப் பங்கில்

# மகா ஞானொடுக்கம்

பதுளை மறைமாவட்டத்தின் அப்புத்தளை பங்கு மக்கள் சித்திரை மாதம் 27ஆம் திகதி 2014 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணியளவில் தமது பங்கின் பிரதான ஆலயமான தூய வனத்துச் சின்னப்பர் ஆலயத்தில் பங்குத்தந்தையர்கள், மகா ஞானொடுக்கக் குருக்களுடன் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து மகா ஞானொடுக்க நிகழ்வுகளை ஆரம்பித்தனர்.

தொடர்ந்து நற்கருணை நாதர் ஆலயம் றொகம்டன், தூய செபஸ்ரியர் ஆலயம் காகல்ல, தூய இயூஜின் டி மெசனட் ஆலயம் பிற்றத்மலை மேல் பிரிவு, தூய அந்தோனியார் ஆலயம் அப்புத்தளை தோட்டம் மற்றும் கல்கந்த, தூய பரலோக மாதா ஆலயம் தொட்டுலாகலை, தூய அன்னம்மாள் ஆலயம் பிற்றத்மலை கீழ் பிரிவு என ஒவ்வொரு வலயங்களாக பிரிக்கப்பட்டு மாலை 6.00 மணியளவில் அந்தந்த வலயங்களுக்குப் பொறுப்பான மகா ஞானொடுக்க அருட்தந்தையர்களால் மகா ஞானொடுக்கக் கொடியேற்றத்துடன் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இம்மகா ஞானொடுக்க நிகழ்வின் பொறுப்பாளராக அருட்பணி. இயூஜின் அமல்ராஜ் (அமதி) இருந்தார். அவருடன் அருட்தந்தையர்கள் யேசுதாசன் (அ.ம.தி), வசந்தராசா (அ.ம.தி), கிளேயர் (அ.ம.தி), பிலிப் (அ.ம.தி) ஆகியோரால் மகா ஞானொடுக்க நிகழ்வுகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

இம்மகா ஞானொடுக்க நிகழ்வுகளாக இல்லத்தரிசிப்புக்கள், சிறுவர், இளையோர், பெற்றோர், அருட்பணிச் சபையினர், மறையாசிரியர்கள், கத்தோலிக்க ஆசிரியர்கள் போன்றோருக்கான கருத்தமர்வுகள், நாளாந்தத் திருப்பலிகள், அன்பியத் திருப்பலிகள், பாவமன்னிப்பு வழிபாடுகள், அன்பியப் பகிர்வுகள், திருவருட்சாதன சீரமைப்புக்கள் உட்பட மரியன்னை செபமாலைப் பேரணி, நற்கருணைப் பேரணி போன்றவையும் இடம்பெற்றன.

பதுளை மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. மார்ஷல் இராஜநாயகம் அடிகளாரால் நற்கருணை ஆசீர் வழங்கப்பட்டு தொடர்ந்து தன்னார்வப் பணியாளர்களுக்கான ஐந்து நாள் வதிவிடப்பயிற்சி திருக்குடும்ப கன்னியரில்லம் நிசன்சலாராம தியத்தலாவையில் இடம்பெற்றது. இப்பயிற்சிநெறியில் ஆன்மீகம், நற்கருணை, திருப்பலி, அன்பியம், இறைவார்த்தை, திருமணமும் அதன் மாண்பும், குடும்பம், ஆன்மீக சமூக ஒழுக்க நெறிகளில் பங்குதந்தைகளுடன் இணைந்து பணியாற்றும் முறைகள் தொடர்பாகப் பயிற்சி வழங்கப்பட்டது. இதனை அருட்பணியாளர்கள் இயூஜின் பெனடிக்ற் (அ.ம.தி) சில்வெஸ்டர், (அ.ம.தி) ஜெயந்தன் பச்சேக் (அ.ம.தி) மற்றும் மன்னார் மறைமாவட்டத் தன்னார்வப் பணியாளர்கள் திருவாளர் ஞானப்பிரகாசம், மரிய செல்வம், யேசு ஆகியோரால் வழிநடத்தப்பட்டது.

தொடர்ந்து மகா ஞானொடுக்க இறுதி வாரத்தில் அப்புத்தளை பிரதான ஆலயத்தில் 22.5.2014 மாலை 6.00 மணியளவில் அனைத்து வலையங்களிலும் உள்ள சிறுவர்களுக்கான சிறப்பு நிகழ்வுகளும் திருப்பலியும் ஒப்புகொடுக்கப்பட்டது. மேலும் புனித அன்னம்மாள் ஆலயம் பிற்றத்மலை கீழ்ப்பிரிவில் 23.05.2014 அன்று மாலை 6.00 மணிக்கு பங்கில் உள்ள அனைத்து இளையோர்களுக்குமான நிகழ்வுகளும், திருப்பலியும், ஒப்புக்கொடுக்கப்பட்டது. அத்தோடு புனித செபஸ்ரியார் ஆலயம் காகல்லயில் 24.05.2014 அன்று மாலை 6.00 மணிக்கு பங்கில் உள்ள அனைத்து பெற்றோருக்கான நிகழ்வுகளும், திருப்பலியும் ஒப்புகொடுக்கப்பட்டது.

தொடர்ந்து இறுதி நாள் நிகழ்வாக 25.05.2014 ஞாயிற்றுக்கிழமை அப்புத்தளை பங்கின் பிரதான ஆலயமான தூய வனத்துச் சின்னப்பர் ஆலயத்தில் காலை 9.00 மணிக்கு அமலமரித்தியாகிகளின் யாழ்ப்பாண முதல்வர் அருட்பணி. போல் நட்சத்திரம் அடிகளாருடன் மகா ஞானொடுக்க அருட்தந்தையர்கள் அப்புத்தளை வனத்துச் சின்னப்பர் ஆலயப் பங்குத் தந்தையர்கள் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். மாலை 6.00 மணிக்கு அப்புத்தளை நகரசபை பிரதான மண்டபத்தில் கலைநிகழ்வுகளுடன் மகா ஞானொடுக்க நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்றது.

இந்த மகா ஞானொடுக்க நிகழ்வை ஏற்பாடு செய்த பங்குத்தந்தையர்கள் அருட்பணி பிரான்சிஸ் லொசிங்டன் அ.ம.தி அருட்பணி அந்தனி கியூபட் அ.ம.தி ஆகிய இருவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துக்களும்.

**தொகுப்பு, மறையாசிரியர், சந்தனம் மெட்டில்டா.**

## இனப்படுகொலையை நிறுத்த .....

**1ஆம் பக்கத் தொடர்ச்சி**

பாப்பரசரின் இலங்கைக்கான பயணத்தை அரசு தமது அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது. பாப்பரசரின் பயணம் அரசுக்கு சார்பாக மாற்றப்படுவதனை முறியடிப்பதற்காக பாப்பரசர் வடக்கு-கிழக்கிற்கு பயணம் செய்யவேண்டும். முடியுமானால் முள்ளிவாய்க்கால் அல்லது மடுத்தேவாலயம் சென்று போரில் இறந்தவர்களின் நினைவாக திருப்பலி ஒப்புக்கொடுக்க வேண்டும். கொழும்பில் ஜனாதிபதியைச் சந்திக்கும்போது தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடர்ந்து நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த வலியுறுத்த வேண்டும் எனவும் நாம் வேண்டுகோள் விடுக்கிறோம். இலங்கை அரசு இதற்கு செவிசாய்க்கும் என்ற நம்பிக்கையில் இந்த வேண்டுகோளை விடுவிக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தியிருப்பதுடன் பாப்பரசர் இந்த விடயங்களைப்பற்றி இலங்கை ஜனாதிபதியிடம் பேசுவது தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து சர்வதேச முக்கியத்துவத்தை பெற்றுத்தரக்கூடியதாக இருக்கும். எனவேதான் இந்தக்கோரிக்கை விடுக்கிறோம் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை

## அதிபர் நியமனத்தின் முறைமையை மாற்ற வேண்டாம்!

## பழைய மாணவர், பெற்றோர் போராட்டம்





ஆண்டாண்டு காலமாக அருட்சகோதரர்களினதும் கத்தோலிக்க குருமாரினதும் கண்காணிப்பிலும் வழிநடத்தலிலும் இருந்துவந்த மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலைக்கு கடந்த 21.07.2014 திங்கட்கிழமைமுதல் வழமைக்கு மாறானமுறையில் புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக அமைதியான எதிர்ப்புப் போராட்டம் கடந்த 21.07.2014 அன்று மன்னாரில் நடைபெற்றது.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த அமைதிப் போராட்டம் இப்பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

21.07.2014இல் புதிய அதிபர் இப்பாடசாலையின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்கச் செல்லப்போகிறார் எனக் கேள்விப்பட்டதும் இப்பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் நூற்றுக்கணக்கானோர் பாடசாலையின் நுழைவாயிலுக்கு முன்பாக ஒன்றுகூடி புதிய அதிபர் இப்பாடசாலைக்கு வரும்பட்சத்தில் அவரை உட்செல்லவிடாமல் தடுக்கும் முகமாக அங்கு திரண்டு இருந்தனர். இப்பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்கள் மற்றும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாதவாறு இப்போராட்டம் இடம்பெற்றது.

காலை 6.00 மணிமுதல் 10.00 மணிவரை பாடசாலை நுழைவாயிலுக்கு முன்பாகத் திரண்டிருந்த மக்கள் புதிய அதிபர் கடமைக்கு வராததனால் அங்கிருந்து பதாதைகளைத் தாங்கிய வண்ணம் அமைதியான முறையில் மன்னார் நகர பஸ் நிலையம் ஊடாக மன்னார் கல்விப்பணிப்பாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதற்காகச் சென்றனர். போராட்டக்காரர்கள் ஏந்திச்சென்ற பதாகைகளில், "பாடசாலையை அரசியல் மேடையாக்காதே", "இப்பாடசாலைக்கு அருட்சகோதரர்களையே தொடர்ந்து நியமி", "எமது பாடசாலைக்கு எதிரான சதியை முறியடிப்போம்", "எங்கள் மாவட்டத்தின் கல்வியைக் குழப்பாதீர் குழப்பாதீர்" போன்ற வாசகங்கள் காணப்பட்டன. மத்திய அரசின் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கும்படி ஊர்வலத்தில் சென்றவர்கள் மன்னார் கல்விப் பணிப்பாளர் திரு. எம். எம். சியாமிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது.

கத்தோலிக்க மக்களை மிகப்பெரும்பான்மையாகக் கொண்ட எமது மன்னார் மாவட்டத்தில் எமது பாரம்பரியத்தையும், ஒழுக்கநெறிகளையும், கலாசார விழுமியங்களையும் பாதுகாத்து வளர்த்துவருவதில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியும், பெண்கள் கல்லூரியும் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக அரும்பணியாற்றி வருவதுடன் மாவட்டத்தின் முதன்மைப் பாடசாலைகளாகவும் திகழ்ந்து வருகின்றன.

இப்பாடசாலைகளின் அரும்பெரும் பணிகளுக்கு ஊன்றுகோலாக மிளிர்வது இந்த இரு பாடசாலைகளும் கத்தோலிக்க துறவிகளின் தலைமையின்கீழ் தொடர்ச்சியாக வழிநடத்தப்பட்டு வருவதே காரணமாகும். இதற்கு மாறாகக் கத்தோலிக்க துறவியல்லாத ஒருவர் இப்பாடசாலைக்கு தலைமைப் பதவியில் நியமிக்கப்படுவதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம் என்று அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நானாட்டான் பள்ளங்கோட்டை நிமாலின்

## 'வலியின் வரிகள்' இறுவட்டு




Music-PhilipNimal, Lyrics-Satheeshbabu, Sung by- Nimal, Audio & Video-Sri.Tharshan, Mastered-C.M.Kalistus

Contact- N.Nimal No-15"A" Part,Devipuram, Puthukkudiyiruppu, Sri Lanka.

நானாட்டான் பள்ளங்கோட்டையைச் சேர்ந்த நகுலேந்திரன் நிமால் அவர்கள் 'வலியின்'வரிகள் என்ற பெயரில் படக்காட்சியுடன் கூடிய பாடல் இறுவட்டை வெளிக்கொணர்ந்துள்ளார். வன்னிப் போரின்போது இரண்டு கால்களையும் இழந்த நிமால் இயல்பிலேயே கலையார்வம் மிக்கவராகத் திகழ்ந்தவர். இருசக்கர வண்டியில் வாழ்நாளைக் கழிக்கும் இவர் தனது துன்ப உணர்வுகளை பாடலாக வெளிப்படுத்தியுள்ளார். எல்லாப் பாடல்களையும் இவரே பாடியும் எல்லாப் பாடல்களுக்கும் இவரே ஒக்ரபாட் எனப்படும் இசைக் கருவியையும் இசைத்துள்ளார். இவருடைய இந்த இறுவட்டை மன்னார் கலையருவியில் பெற்றுக்கொள்ளலாம். இதன் விலை 200.00 ரூபா.

# புதிய அதிபரின் நியமனம் இரத்துச்செய்யப்படும்!

### ஆயர் தலைமையிலான குழுவிடம் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலைக்கான புதிய அதிபரின் நியமனத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் தற்பொழுது நடைமுறையில் உள்ள நிர்வாகத்தில் மாற்றம் ஏற்படாது என மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் எம். எம். சியாம் மன்னார் மறைமாவட்ட ஆயருடன் சென்ற குழுவிடம் உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைக்குப் புதிதாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள புதிய அதிபரை நியமிக்க வேண்டாம் என்று மகஜர் ஒன்றை மன்னார் கல்வி பணிமனைக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்ற பாடசாலை கல்விச் சமூகம் அதனை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையளித்திருந்தது. இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை, அவரின் செயலாளர் அருட்பணி. முரளி, மன்னார் நகரபிதா திரு. எஸ். ஞானப்பிரகாசம், உபதலைவர் எஸ். ஜேம்ஸ் யேசுதாசன் ஆகியோர் மன்னார் கல்விப்பணிப்பாளர் எம். எம் சியாமை சந்தித்தனர்.

இச்சந்திப்பின்பின்னர் இக்குழுவினர் போராட்டத்தில் ஈடுபட்டோர் முன் கருத்துத் தெரிவிக்கையில், பாடசாலை அபிவிருத்திச் செயற்குழுவின் எழுத்து மூலமான கடிதத்தை தனக்கு தரும்பட்சத்தில் தான் உடனடியாக புதிய அதிபரின் நியமனத்தை நிறுத்த நடவடிக்கை எடுப்பதாகவும், அத்துடன் எவருக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு வேறொரு நடவ்டிக்கை எடுப்பதாகவும் வலயக்கல்விப்பணிப்பாளர் உறுதி அளித்துள்ளார். எந்தவிதத்திலும் தற்பொழுது மன்னார் புனித சவேரியார் ஆண்கள் பாடசாலையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிர்வாகத்தில் மாற்றம் செய்யப்பட மாட்டாது எனவும் தற்பொழுது இருக்கும் அதிபரின் நிர்வாகம் தொடர்ந்து நடைபெறும் எனவும் அவர் தெரிவித்ததாகக் குறிப்பிட்டனர்.

### செட்டிகுளம் புனித அந்தோனியார் ஆலய

# வைரவிழாவில் 'இதயம்' மலர் வெளியீடு




செட்டிகுளம் புனித அந்தோனியார் ஆலயத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக வைரவிழா மலர் வெளியிடப்பட்டது. 'இதயம்' என்ற பெயரைத் தாங்கி வெளிவந்துள்ள இம்மலரில் செட்டிகுளம் பங்கு தொடர்பான பல தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

செட்டிகுளம் பங்கில் பணியாற்றிய பங்குத்தந்தையர்களின் விபரங்கள், செட்டிகுளம் பங்கின் வரலாறு, பெரிய கட்டு அந்தோனியார் ஆலய வரலாறு, செட்டிகுளத்தில் இடம்பெற்ற இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பணிகள் தொடர்பான கட்டுரைகள், செட்டிகுளம் பாடசாலையின் வரலாறு போன்ற பல அரிய தகவல்கள் மற்றும் கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

செட்டிகுளம் பங்குத்தந்தை அருட்பணி. பெனோ அலெக்ஸ்சாண்டர் அவர்கள் தலைமையில் இந்த மலர் வெளியீடு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### தேசிய சமூகத் தொடர்பாடல் ஆணைக்குழுவுக்கு

# புதிய இயக்குனர்



சமூகத் தொடர்பாடல் ஆணைக்குழுவின் ( National Director for Social Communication Centre) புதிய தேசிய இயக்குனராக அருட்பணி. சிறிஸ் காமினி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் "சிக்நிஸ்" (Signis) எனப்படும் அமைப்பின் இலங்கை இயக்குனராகவும் உள்ளார்.

# கண்டியில் பாப்பரசரின் பிரதிநிதி

இலங்கைக்கான பாப்பரசரின் பிரதிநிதி நிக்யூபென் வன் ரொட் ஆண்டகை கண்டிக்குச் சென்று தேசிய குருமடத்தையும் அதன்பின்னர் இரு மகாநாயக்க தேரர்களையும் சந்தித்தார். இதன்போது கண்டி ஆயர் மேதகு வியான்னி பெனாண்டோ ஆண்டகையும் உடன் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையைக் கண்டித்து

# கர்தினால் அறிக்கை

அழுத்கம மற்றும் பேருவளைப் பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் கண்டித்துள்ளார். இதுபோன்ற அசம்பாவிதங்கள் மதங்கள் மற்றும் இனங்களுக்கிடையில் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என அவர் அழைப்புவிடுத்துள்ளார். ஒவ்வொருவரும் பேதங்களை மறந்து இலங்கையர் என்ற குடும்பத்தில் சகோதர சகோதரிகளாக செயற்பட வேண்டும் என்றும் பேராயரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### யாழ்ப்பாணம் தும்பளையில்

# தாவீது அடிகளாரின் நினைவு தினம்

பன்மொழிப் புலவர் அருட்கலாநிதி தாவீது அடிகளாரின் 33ஆவது நினைவுதின விழா அண்மையில் அவரது பிறந்த இடமாகிய யாழ்ப்பாணத்தில் உள்ள தும்பளையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பங்குத்தந்தை அருட்திரு ஜோன் மவுலீஸ் அடிகளார் கலந்துகொண்டார். தாவீது அடிகள் நினைவுதினப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு இவ்விழாவில் பரிசில்கள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# இறையழைத்தல்! ஒரு தற்காலிகமான ஒப்பந்தம் அல்ல

**– திருத்தந்தை பிரான்சிஸ் –**



இறையழைத்தல் என்பது ஒரு தற்காலிகமான ஒப்பந்தம் அல்ல, மாறாக ஒருவரது வாழ்வு முழுவதும் மேற்கொள்ளவேண்டிய ஓர் உறவு என்பதைத் திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்திக் கூறினார்.

தங்களுக்கு இறையழைத்தல் உள்ளதா என்பதைத் தேடிவரும் உரோம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இளையோர் பலரைக் கடந்த வார இறுதியில் வத்திக்கான் தோட்டத்தில் அமைந்துள்ள அன்னை மரியா கெபியில் சந்தித்த திருத்தந்தை இவ்வாறு தெரிவித்தார்.

இறையழைத்தலாக இருந்தாலும் சரி, திருமண உறவாக இருந்தாலும் சரி, இன்றைய சூழலில் தற்காலிகம் என்ற எண்ணம் மிக அதிகமாக நியாயப்படுத்தப்படுகிறது என்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, இத்தகைய எண்ணத்திலிருந்து இளையோர் விடுபட்டு, நிரந்தர உறவுகளை வளர்க்கும் பக்குவம் பெறவேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

கிறிஸ்தவ வாழ்வில் அன்னை மரியா வகிக்கும் மிக முக்கிய பங்கைக் குறித்து திருத்தந்தை அங்கு பேசினார். மரியன்னைமீது பற்றில்லை என்று சொல்லும் கிறிஸ்தவர்களைக் காணும்போது எனக்கு வருத்தமாக உள்ளது. அன்னை மரியாவிடம் பக்திகொண்டிருப்பது வெறும் மேலோட்டமான பக்தி உணர்வு மட்டுமல்ல, மாறாக அன்னை மரியாவையும், அன்னையாம் திருஅவையையும் அன்புகூர்வது உண்மையான இறையியல் கருத்து என்றும் திருத்தந்தை இளையோரிடம் எடுத்துரைத்தார்.


## ஒரே கூரையின் கீழ் மூன்று மத வழிபாட்டுத் தலங்கள்



யூதம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மூன்று மதங்களுக்கும் ஒரே இடத்தில் வழிபாட்டுத் தலங்களை அமைப்பதற்கு ஜெர்மனியின் பெர்லின் மாநகராட்சி திட்டமிட்டு வருகின்றது. ஒரே கூரையின்கீழ் ஒரு யூதமதத் தொழுகைக்கூடம், ஒரு மசூதி, ஒரு கிறிஸ்தவ ஆலயம் ஆகியவற்றை அமைக்கவும், இது ஒரு வீடு என அழைக்கப்படும் எனவும் கூறியுள்ள பெர்லின் மாநகராட்சி, இம்மூன்று மதத்தினரும் தாங்கள் வழிபடுவதற்கென தங்களுக்குரிய வழிபாட்டுத்தலங்களை ஒன்றிணைந்து கட்டுவார்கள் எனக் கூறியுள்ளது.

இவ்விடம் எழுப்பப்படுவதற்கான வரைபடம் குறித்து போட்டி வைக்கப்பட்டு வெற்றிபெறும் கட்டட அமைப்பு தேர்ந்தெடுக்கப்படும் எனவும் பி.பி.சி ஊடகச் செய்தி கூறுகிறது. மூன்று மதத்தலைவர்கள் இக்கட்டிடத்திற்கான அடிக்கல்லை ஏந்தியவாறு நிற்பதை மேலே உள்ள படத்தில் காணலாம்.

## மரணத்தின் விளிம்பில் இருப்பவர்கள் தமது வாழ்வை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உரிமைக்கு பேராயர் டுட்டு ஆதரவு



"சாவுக்கு உதவுதல்" தொடர்பான விவாதத்தில் உலகில் மிகவும் மதிக்கப்படும் மதத்தலைவர்களின் ஒருவரான தென்னாபிரிக்கப் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு அசாதாரணமான விதத்தில் தலையிட்டிருக்கிறார். மரணத்தின் விளிம்பில் இருப்பவர்கள் தமது வாழ்வைக் கௌரவமான முறையில் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உரிமைக்கு அவர் ஆதரவளித்திருக்கிறார்.

பிரிட்டனின் பிரபுக்கள் சபையில் போல் கொன்னர் பிரபு சமர்ப்பித்திருக்கும் 'இறப்பதற்கு உதவியளித்தல் சட்ட மூலம்' தொடர்பான விவாதத்திற்கு முன்னராக தென்னாபிரிக்காவின் பேராயரும் நோபல் சமாதானப்பரிசு பெற்றவரும், சமாதானம், நீதி, மனித உரிமைகளுக்காகச் சேவையாற்றுவதற்காக மறைந்த மாமனிதர் நெல்சன் மண்டேலாவினால் ஒன்றிணைக்கப்பட்ட முன்னாள் அரசியல் தலைவர்கள் பலரை உறுப்பினர்களாக கொண்ட சர்வதேச மூத்தோர் குழுவின் தலைவருமான டெஸ்ட்மண்ட் டுட்டு, இறப்பதற்கான உரிமை தொடர்பாக மனமாற்றம் வேண்டும் என அழைப்பு விடுத்திருக்கிறார்.

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி மண்டேலா இறந்துகொண்டிருக்கும் நிலையில் நடத்தப்பட்ட விதம் 'கருணையற்றது' என்றும் டுட்டு கண்டித்திருக்கிறார். வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உதவுவதைத் தடுக்கும் சட்டங்கள் பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு இகழ்ச்சியை ஏற்படுத்துபவையாக இருப்பதாக தென்னாபிரிக்காவின் தார்மீகப் பிரக்ஜை என்று மதிக்கப்படுபவரான டுட்டு (82வயது) பிரிட்டனின் ஒப்சேவர் பத்திரிக்கையில் எழுதியிருக்கிறார்.

தனது நண்பரான நெல்சன் மண்டேலா பல்வேறு தடவைகள் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக வைக்கப்பட்டிருப்பதையும் அவர் தனது 95 வயதில் இறப்பதற்கு முன்னர் அரசியல்வாதிகளுடன் புகைப்படம் எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருந்ததையும் இரக்கமற்ற செயல் என்று அவர் கூறியுள்ளார்.

சாவதற்கான உரிமை தொடர்பான விடயத்தில் மனமாற்றம் தேவை என்று அவர் அழைப்பு விடுத்திருக்கிறார். "வாழ்வதற்கான கௌரவத்திற்காக எனது வாழ்க்கையை நான் செலவிடுகிறேன். இதனால் நான் அதிஷ்டசாலி. ஆனால் இப்போது இறப்பதற்கான கௌரவம் தொடர்பாக எனது மனதை பிரயோகிக்க நான் விரும்புகிறேன். வாழ்வின் புனிதத்துவத்தை நான் வணங்குகிறேன். ஆனால் எந்த விலைகொடுத்தும் அல்ல" என்று அவர் கூறியுள்ளார். 'இறப்பதற்கு உதவுதல்' தொடர்பான சட்டமூலம் தொடர்பாக விவாதம் இடம்பெறவுள்ள தருணத்தில் ஆயர் டுட்டுவின் தலையீடு அமைந்திருக்கிறது.

## இந்தியர்கள் இருவர் உட்பட ஆறுபேருக்கு கார்த்திகை 23இல் புனிதர் பட்டம்



கேரளாவின் அருள்பணி. குரியாகோஸ் எலியாஸ் சாவரா (Kuriakose Elias Chavara), அருள்சகோதரி யுவிரேசியா எலுவதின்கல் (Eufrasis Eluvathingal) உட்பட ஆறு முத்திப்பேறுபெற்றவர்கள் கிறிஸ்து அரசர் பெருவிழாவாகிய வருகிற கார்த்திகை மாதம் 23ஆம் திகதியன்று புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12.06.2014 அன்று திருத்தந்தையின் முன்னிலையில் நடந்த கர்தினால்கள் அவைக் கூட்டத்தில் இந்த ஆறு முத்திப்பேறுபெற்றவர்கள் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படும் நாள் குறிக்கப்பட்டது. கிறிஸ்து அரசர் பெருவிழாவன்று புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவுள்ள ஆறு முத்திப்பேறுபெற்றவர்களில் இருவர் இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். மற்ற நால்வரும் இத்தாலியர்கள். இவர்களில் இருவர் பொதுநிலையினர் ஆவார். இந்தியப் புனிதர்கள் இருவருடைய படத்தை மேலே காணலாம்.

# புனிதர்களின் பாதையில்

## புனித மோனிக்கா

(குடும்பத்தலைவி - (கி.பி. 322 - 387)



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

கிறிஸ்தவ அன்னையருக்கும், குடும்பத் தலைவிகளுக்கும், விதவைகளுக்கும் இவர் ஒளி விளக்கு. தாம் சாவதற்கு ஒருசில நாட்களுக்கு முன் தம் மகன் அகுஸ்தீனிடம் கூறியது. "மகனே இவ்வுலகில் எனக்கு இப்போது வேறு எதுவும் மகிழ்ச்சிதர முடியாது. நான் இனிமேலும் ஏன் இவ்வுலகில் உயிருடன் இருக்க வேண்டுமென்றே தெரியவில்லை. இன்னும் கொஞ்சக்காலம் நான் வாழ விரும்பியது ஒரே ஒரு வரத்திற்காகத்தான். நான் இறக்குமுன் உன்னை கத்தோலிக்க கிறிஸ்தவனாக பார்க்க விரும்பினேன். எனக்கு ஆண்டவர் இவ்வரத்தை அளவுக்கதிகமாகப் பொழிந்துவிட்டார். இப்போது நீ அவருக்கே முழுவதும் சொந்தம் என்பதை உணருகிறேன். இவ்வுலக இன்பங்களை நீ விட்டொழித்ததையும் காண்கிறேன்."

இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் இவரின் கணவர் பத்திரிசியும் தம் இறப்பிற்கு முன் திருச்சபையின் மகனாக வந்து சேர்ந்தார். இவ்வண்ணமே இவரின் மாமியும் திருநீராட்டுப் பெற்று இறந்தார்.

வழிதவறிச் சென்ற தம் மகனை எவ்வழியில் மனந்திருப்புவது என்று அறியாது அடிக்கடி இவர் கலங்கினார். அகுஸ்தீனை மணந்துகொள்ளச் சொன்னதால் அவரும் அப்படியே ஒரு பெண்ணை மணமுடித்தார். ஒருமுறை மொனிக்கா ஓர் ஆயரை அணுகி தம் மகனுக்கு வழிகாட்டுதல் வழங்க வேண்டும் என்று கேட்டார். அகுஸ்தீனுக்கு மனந்திரும்பும் பக்குவம் இன்னும் கிடைக்கவில்லை என்பதை ஆயர் உணர்ந்தார். மீண்டும் மீண்டும் மோனிக்கா ஆயரை கண்ணீருடன் அணுகினார். ஆயர் பொறுமை இழந்தவர்போல் காணப்பட்டாலும் இறைவாக்குரைப்பதுபோல் "இவ்வளவு கண்ணீர் சிந்தும் தாயின் மகன் அழிவுறவே முடியாது" என்று கூறினார்.

இதைக்கேட்டு இன்னும் மிகுதியாக மோனிக்கா இறைவனை மன்றாடினார்.

கார்தேஜ் நகரில், புனித சிப்ரியன் பெயர் கொண்ட ஆலயத்தில் தாய் மன்றாடிக் கொண்டிருந்தார். இந்த வேளையில் அகுஸ்தீன் கப்பலேறி உரோமைக்குப் பயணமாகிவிட்டார். மிலான் வரைக்கும் தாய் விரைந்து தேடிச்சென்றாள். இங்கேதான் புனித அம்புரோஸ் என்னும் பேராயரைச் சந்தித்தார்.

ஒஸ்டியா என்ற நகரில் இவருக்கு இறப்பு அண்மையில் இருந்தது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 34.

## வாழ்க்கை வாழ்வதற்கே!

### வாழ்க்கையை இழந்துபோகலாமா?

உல்லாசப் பயணி ஒருவன் நதியொன்றைக் கடக்க படகோட்டி ஒருவருடன் படகொன்றில் பயணிக்கிறான். பயணத்தை ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே திடீரெனக் கடும் காற்றுடன் நதி பெருக்கெடுக்க ஆரம்பிக்கிறது. இவ்வாபத்தான நிலையினை உணர்ந்துகொள்ளாத உல்லாசப் பயணி படகோட்டியிடம், "உனக்குப் பாடத் தெரியுமா?" எனக் கேட்கிறான். அவனோ தனக்குத் 'தெரியாது' என்கிறான். "அவ்வாறாயின், வாழ்க்கையில் கால்வாசியை இழந்துவிட்டாய்!" என்ற உல்லாசப் பயணி, "சரி, ஓவியமாவது தீட்டத் தெரியுமா?" என மீண்டும் ஒரு கேள்வி கேட்கிறான். படகோட்டி அக்கேள்விக்கும் 'தெரியாது' என்று கூறிவிடுகிறான். "அப்படியென்றால் வாழ்க்கையில் அரைவாசியை இழந்துவிட்டாய்!" என்று சொல்லிவிட்டு, "பறவாயில்லை, கார் ஓட்டவாவது உனக்குத் தெரியுமா?" எனக் கேட்க அதற்கும் அவன் 'தெரியாது' என்கிறான். "வாழ்க்கையில் முக்கால்வாசியை இழந்துவிட்டாய்!" என்றபோது படகோட்டி பதட்டம் அடைந்தான். அதுவரை படகைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தவன் 'வாழ்க்கையில் முக்கால்வாசியை இழந்துவிட்டாய்' என்ற வார்த்தைகளைக் கேட்டதும் பதட்டப்பட்டு துடுப்பை கைவிட்டுவிடுகிறான். படகு நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்படுகிறது.

இந்நிலையில், படகோட்டி உல்லாசப் பயணியைப் பார்த்து, "கடும் காற்றும் ஆற்று வெள்ளமும் படகை மூழ்கடித்துவிடும் போலிருக்கிறது! படகு, நீரில் மூழ்கினால் நீந்திக் கரைசேர உனக்கு நீச்சல் தெரியுமா?" எனக் கேட்க அவன் 'தெரியாது' என்கிறான். படகோட்டி, "அப்படியானால் நீ இப்போது வாழ்க்கை முழுவதையும் இழக்கப்போகிறாய்!" என்றபோதுதான் உல்லாசப் பயணி தன்நிலையையும் களநிலையையும் உணர்ந்தான்.

இவ்வுல்லாசப் பயணியைப்போல தன்நிலையையும் களநிலையையும் உணராத பல பேர்வழிகள் இன்று இருக்கிறார்கள். அவர்கள், வெள்ளம் மூக்கில் முட்டும்வரை அசமந்தப்போக்குடன் இருக்கிறார்கள். வெள்ளம் மூக்கிற்கு மேல் சற்றே ஏறினாலும் சாணென்ன முழமென்ன? எல்லாம் ஒன்றுதான் என்பதை எப்போதுதான் உணரப்போகின்றார்களோ?

### வாழ்க்கை, திட்டமிட்டபடி திசைமாறிச் செல்கிறதா!

பட்டி மன்றம் ஒன்று நடைபெற்றது. 'இவ்வுலக வாழ்க்கை திட்டமிட்டபடி செல்கிறதா?' அல்லது 'இவ்வுலக வாழ்க்கை திசைமாறிச் செல்கிறதா?' என்பதுதான் விவாதத்திற்கான தலைப்பு. காரசாரமான விவாதங்கள் இரு குழுக்களாலும் முன்வைக்கப்பட்டன. நடுவர் எக்குழுவிற்கு முதலிடம் கொடுப்பது எனத் திக்குமுக்காடிப் போனார். இறுதியில் நடுவர் தம் முடிவை; 'இவ்வுலக வாழ்க்கை திட்டமிட்டபடி, திசைமாறிச் செல்கிறது' எனக்கூறி அமர்ந்தார். விவாதித்த இரு குழுக்களின் விவாதங்களும் ஒருபுறமிருக்க நடுவரின் சிந்தனை விவாதங்களின் முடிவுகளைக் கடந்து வாழ்க்கையின் யதார்த்தத்தைக் காட்டுவதாகவே தெரிகிறது. இலக்கு இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லாத படகு போன்றது. போகும் இடமும் அறியாமல் சேரும் இலக்கும் தெரியாமல் வாழ்க்கைக் கப்பல் அலைக்கழிக்கப்படுகிறது.

பொதுவாக நோக்கினால் கவிப்பேரரசு வைரமுத்து கூறுவதுபோல், "வாழ்க்கை பற்றிய அனுமானமோ, வாழ்க்கையில் ஒரு பிடிமானமோ இல்லாமல் 'நீர்வழிப் படூஉம் புனைபோல்' புறப்பட்ட இடமும் தெரியாமல், போகும் இடமும் புரியாமல்..." பலருடைய வாழ்வு நகர்ந்துகொண்டிருப்பதாகவே கருதவேண்டி இருக்கிறது.

"...வெந்ததைத் தின்று – வாயில் வந்ததைப் பேசி - விதி வந்ததும் சாவோம் - என்று இருப்பது ஒரு வாழ்வாகுமா?" என ஆனந்த வாழ்வியல் என்ற நூலின் ஆசிரியர் குறிப்பிடுவார். இக்கால இளவல்கள் பலரின் வாழ்க்கையைப் பார்க்கிறபோது, "ஏன் பிறந்தாய் மகனே(ள) ஏன் பிறந்தாயோ...?" என அவர்களைப் பார்த்துப் பாடவேண்டி – கேட்கவேண்டி இருக்கிறது!

### யாருக்(எதற்)காகவாவது வாழவேண்டும் என்ற விசைவேண்டும்

கிட்லர் யூத இனத்தவர்களை ஒழித்துவந்த காலமது. ஆயிரமாயிரம் யூதர்கள் கொல்லப்படுவதற்காக சிறைகளில் அடைக்கப்பட்டார்கள். அடிமைத்தன வேலை, வருத்தும் பசி, உறையவைக்கும் பனிக்குளிர், மிகக்கொடுமையான சித்திரவதை என நாளும் பொழுதும் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். இவர்களின் மத்தியில் விக்ரர் பிராங்கிலின் என்ற மனோதத்துவ மருத்துவரும் சாவுப் பாசறையில் தள்ளப்பட்டார். இக்கொடுமையான சூழலிலும் விக்ரர் பிராங்கிலின் சாகவேண்டியவர் ஆயினும் உயிர்பிழைத்துக்கொண்டார். பிற்காலத்தில் இவரின் உயிர் பிழைத்தலுக்கான காரணத்தை விபரிக்கும்போது, "வருவது வரட்டும், யாருக்காகவாவது அல்லது எதற்காகவாவது வாழவேண்டும் என்ற வேகம்/ வெறி/ விசை நம்மை வாழவைக்கிறது" என்றார்.

### ஏன் வாழவேண்டுமென்பது தெளிவானால் எப்படி வாழ்வதென்பது தெரிந்துவிடும்

அனேகர் வாழ்க்கையில் பல கசப்பான அனுபவங்களைச் சுமந்து நொந்து நொறுங்கிப் போகிறார்கள். வசதிவாய்ப்புக்கள் பெருகினாலும் வாழ வழிதெரியாமல் அந்தரிக்கிறார்கள், அல்லல்படுகிறார்கள். வகுத்த திட்டங்கள் நிறைவேறாமல், எடுத்த முயற்சிகள் கைகூடாமல், நம்பியவர்கள் ஏமாற்றிவிடுதல் போன்ற காரணங்களால் வாழ்க்கையில் சோர்வுற்று தளர்ந்துபோய்விடுகிறார்கள். சொல்லுகிறார்கள்: 'ஏன் வாழவேண்டும்? என்பதற்கு விடையிருந்தால் எப்படி வாழ்வது என்பதற்கு வழியிருக்கும்.' ஆகவேதான், யாருக்காக/ எதற்காக அதாவது ஏன் வாழவேண்டும் என்ற கேள்விக்குத் தெளிவான பதிலிருந்தால் எப்படி – எவ்வாறு வாழ்வது அதாவது வாழ்வதற்கான வழிகளைக் கண்டுபிடித்துக்கொள்ளலாம்.

### வாழ்க்கை அமைகிறதா வாழ்க்கையை ஆக்கிக்கொள்கிறார்களா?

ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை அமைந்துவிடுகிறது என்றே அதிகமானவர்கள் எண்ணுகிறார்கள். உண்மையில், ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை அமைந்துவிடுகிறதா? அல்லது ஒவ்வொருவரும் வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறார்களா? ஆக்கிக்கொள்கிறார்களா? என்பது ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய கேள்வியாகிறது. ஏனெனில் வாழ்க்கையில் மகிழ்ந்திருப்பவனை(ள)க் காண்கிறபோது, 'வாழ்க்கை அவனு(ளு)க்கு அமைந்துவிடுகிறது' என்றும், வாழ்க்கையில் மகிழ்ச்சியை இழந்தவர்களைப் பார்க்கிறபோது, 'அவனு(ளு)க்கு அளந்தது அவ்வளவுதான்' என்ற முடிவுக்கும் வந்துவிடுகிறார்கள்.

இன்னும், தாம் விரும்பியது அமையாவிட்டால் வாழ்வின் மகிழ்ச்சியைத் தொலைத்தவர்களாக - இழந்தவர்களாக மாறிவிடுகிறார்கள். இப்பேர்ப்பட்ட சூழலில் உபநிடதம் கூறுவதுபோல, "விரும்பியது அமையாவிட்டால் அமைந்ததை விரும்பு" என்ற சிந்தனையை ஏன் பற்றிக்கொள்ள முடியாமல் போகிறது? ஏனெனில் பலருடைய வாழ்க்கையைப் பார்க்கிறபோது அவர்கள் விரும்புவது அமையாதபோது வாழ்க்கையை இழந்தவர்கள்போல ஆகிவிடுவதைக் காணலாம். உதாரணமாக, தாம் விரும்பும் நண்பன்/ வாழ்க்கைத் துணை/ வேலை/ பதவி அமையவில்லை எனில் வாழ்க்கையை இழந்தவர்கள்போல் ஆகிவிடுகிறார்கள். ஆக, 'ஒருவருக்கு வாழ்க்கை அமைந்துவிடுகிறது' என்ற சிந்தனையைப் புறந்தள்ளாது, 'வாழ்க்கையை அமைத்துக்கொள்வதுதான்' வாழ்க்கையில் முன்னேற – வாழ்க்கையை முன்னேற்ற வழிகாட்டும் எனத் துணிந்து சொல்லலாம்போல் தெரிகிறது. நல் வாழ்க்கை அமைந்துவிடவில்லையே என ஏங்காமல் நல் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முயன்றால் அதுவே வாழ்க்கைப் பயணத்தின் முதல் வெற்றி ஆகும்.


### அடிப்படையில் மூன்று வகைகள்

வாழ்க்கையை வாழும் வகையினை வைத்துக்கொண்டு வாழ்க்கையினை அடிப்படையில் மூன்று நிலைகளில் நோக்கலாம். **ஒன்று; உயிர் பிழைத்தல் நிலை (to survive).** உணர்வற்ற நிலையில் (coma) இருக்கின்ற நோயாளர்களை உயிர் பிழைத்தல் நிலைக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். 'கோமா' நிலையில் உள்ளவர்களின் உயிரைக் காப்பதற்கான போராட்டம் மட்டும் இந்நிலையில் நடப்பதற்கான வாய்ப்புண்டு. மேலும், உயிர் பிழைத்தல் நிலையினை இன்னுமொரு நிலையில் பார்க்கலாம்: உலகில் மிகச்சொற்பமானவர்களிடம் செல்வம் மிதமிஞ்சிக் கிடக்க பலநூறு மில்லியன் மக்கள் அத்தியாவசிய – அடிப்படை தேவைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற நிலையினையும் உயிர்பிழைத்தலுக்கான உதாரணமாகக் கொள்ளலாம்.

**இரண்டு; இருத்தல் நிலை (to exist).** சிறையில் இருப்பவர்களைக் குறிப்பிடலாம். அவர்கள் முழு மனித சுதந்திரம் அற்றவர்களாக வாழ்க்கையை நிறைவோடு வாழமுடியாது இருப்பவர்கள்.

**மூன்று; வாழும் நிலை (to live).** உணர்வற்ற நிலையில் உள்ளவர்களும் சிறைகளில் உள்ளவர்களையும் தவிர மற்றயவர்கள் அத்தனை பேரும் 'வாழும் நிலை'யில் உள்ளவர்கள் என்று கூறிவிட முடியாது.

ஏனெனில், பேர்னாட்சா குறிப்பிடுவதுபோல, "சில மனிதர்கள் இறப்பதற்கும் புதைப்பதற்கும் இடையே முப்பது, நாற்பது ஆண்டுகள் கடந்துவிடுகின்றன" என்பார். இவர்களைத்தான் 'நடை பிணங்கள்' என்று குறிப்பிடுகிறார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் இப்பேர்ப்பட்டவர்கள் மனதளவில் எப்போதோ இறந்துவிட்டார்கள். அதாவது உண்மையான உயிரோட்டமான வாழ்வுக்கு இறந்துவிட்டார்கள், ஆனால், உடல் ஊர்ந்து திரிகிறது! காரணம், உயிர் இருக்கும்வரை இவ்வுடலைச் சுமந்து திரியவேண்டும் என்பதற்காக! இவ்வுண்மையை உறுதிப்படுத்தவதற்காகவோ என்னவோ, "இக்பால், உன் பிணத்தை நீயே சுமக்கவேண்டும்" என இக்பால் என்பவன் எழுதிவைத்தான். "...சாதனையாக்கிக்கொள்ளத் தெரிந்தவர்கள்தான் வாழுகிறார்கள். மற்றவர்கள் இந்த உலகில் சும்மா வசிக்கிறார்கள்." என்று ஆன்மீகவியலாளர் சத்குரு குறிப்பிடுவது மேற்சொன்ன உண்மையை ஆழப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. மேலும், "உறுதிகொண்ட நெஞ்சங்களே முன்னேறுங்கள், சாதித்துச் சாவதே வாழ்வாகும்" என்ற சுவாமி விவேகானந்தரின் வரிகள் வாழ்க்கையைப் பொருளோடு வாழுவதற்கு அர்த்தம் சேர்க்கட்டும்.




### வாழ்க்கையை நல்லமுறையில் வகுக்கவேண்டும்

"நல்லவற்றைக் கூட்டிக்கொள், தீயவற்றைக் கழித்துக்கொள், அன்பைப் பெருக்கிக்கொள், வாழ்க்கையை நல்லமுறையில் வகுத்துக்கொள்" என வாழ்வுபற்றி அழகான பாடத்தை ஒருவன் வரைகிறான். அருள்திரு வை. இருதயராஜ் குறிப்பிடுவதுபோல, "வாழ்க்கை ஒரு பட்டாம்பூச்சி மாதிரி! லேசா பிடிச்சாப் பறந்திடும், இறுகப் பிடிச்சா இறந்திடும், கவனமாகக் கையாளவேண்டும்" என்ற வரிகள் வாழ்க்கை எவ்வளவு நுட்பமாக வாழப்படவேண்டும் என்பதைக் காட்டிநிற்கிறது. ஆம், 'வாழ்க்கை ஒரு கொண்டாட்டம், அதைக் கொண்டாடுவதை விட்டுவிட்டு கூட்டத்தில் தொலைந்துபோகாமல்' பார்த்துக்கொள்ளவேண்டும்.

### வாழ்க்கையை முடிக்க காத்திருப்பார்கள், கவனம்!

மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட மனைவியின் உடல்நிலை மிகவும் ஆபத்தான நிலையில் இருந்ததை அறிந்துகொண்ட மருத்துவர் அவளின் கணவனுக்கு இத்துன்பமான செய்தியைப் பக்குவமாக அதேவேளை உண்மை நிலையைத் தெரிவித்துவிட வேண்டும் என நினைத்தார். கணவனை அழைத்த மருத்துவர், "உண்மையில் உங்கள் மனைவி இவ்வளவு காலம் இருந்ததே இறைவன் செயல்! அவள் இப்போது ஆபத்தான நிலையில் இருக்கிறாள். இன்னும் ஒரு மாதத்தில் இறந்துவிடுவாள்!..." எனத் தயக்கத்தோடு கூறிமுடித்தார். அப்பெண்ணின் கணவனோ, "இருபத்தைந்து வருசமாப் பொறுமையாக இருந்த நான், இன்னும் ஒரு மாதம் பொறுத்துக்கொள்ள மாட்டேனா 'டொக்ரர்'?" என்றாராம் மிக உற்சாகமாக!

நம் இவ்வுலக வாழ்வும் நாம் வாழும் இவ்வாழ்க்கையும் சில காலங்கள்தான்! அதற்குள் நாமும் வாழ்ந்துகாட்ட வேண்டும், அயலவர்களையும் வாழவிட வேண்டும், அடுத்திருப்பவர்களையும் வாழ்விக்க வேண்டும். இவ்வாழ்க்கை முறையை வாழ்வாக்குவோம், இவ்வாழ்க்கை முறையை வளர்த்தெடுப்போம். (அதிர்வுகள் தொ..ட..ரு.....ம்.... கருத்துக்களுக்கு: anpuomi@yahoo.com)

---

## அதிக நேரம் செல்போன் பேசினால் ... என்ன?




"தினசரி செல்போன் பேசுவோருக்கு உடலில் பாதிப்புக்கள் ஏற்படும்" என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் உறுதி செய்யப்படவில்லை. இந்த நிலையில் இஸ்ரேலிலுள்ள டெல் அவிவ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானியான டாக்டர் யனிவ் ஹம்ஷானி தலைமையிலான குழுவினர் ஒரு புதிய ஆய்வை நடத்தினர். அதன்படி அதிக நேரம் செல்போன் பேசுபவர்களை புற்றுநோய் தாக்கும் அபாயம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் அதிகநேரம் செல்போன் பேசுபவர்களிடமும் இருந்து 'எச்சில்' எடுத்து பரிசோதனை செய்து பார்த்தபோது அவர்களில் அதிக நேரம் செல்போன் பேசுபவர்களுக்கு புற்று நோய் ஏற்படுவதற்கான அறிகுறி இருப்பது தெரிய வந்தது. "செல்போன் பேசும்போது காதுகளின் அடியிலுள்ள சுரப்பிகள் மற்றும் திசுக்கள் பாதிக்கப்பட்டு, மரபணுக்கோளாறினால் புற்றுநோய்க் கட்டிகள் ஏற்பட வாய்ப்பு உருவாகும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே சிந்தித்து செயல்பட்டு வாழ்வை வளமாக்கிக்கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்துவந்த ஐம்பது வருடங்களைத் திரும்பிப் பார்க்கின்றேன்!

## திருமண வாழ்வில் பொன் விழாக் காணும் ஓர் பொதுநிலைப் பணியாளரின் ஆன்மீக அனுபவங்கள்



(27.08.1964 – 27.08.2014)

திரு. திருமதி பெனடிக்ற் கிறிஸ்ரினி
பெற்றா, மன்னார்

நாம் வாழும் வாழ்க்கை ஒரு முறைதான்! இன்ப துன்பம் கலந்த வாழ்வு அமைய அருள்தந்த ஆண்டவர் வாழ்த்தப் பெறுவாராக! "நான் வாழ்கிறேன்; நீங்களும் வாழ்வீர்கள்" (யோவான் 14:19) என்று வாக்களித்த இயேசு பொழிந்த அருள் நலன்களுக்காக நன்றிகூறி என் ஐம்பது வருட திருமண வாழ்வைத் திரும்பிப் பார்க்கின்றேன்.

1936ம் ஆண்டு மடு ஆடித் திருவிழாவுக்கு குடும்பமாகச் சென்றிருந்தோம். தந்தையை இழந்து ஏழு பிள்ளைகளும் தாயுமாக திருவிழாத்திருப்பலி முடிய மடு அன்னையின் விறாந்தையில் கூடி காலை உணவு அருந்திக்கொண்டிருந்தோம். அந்தவேளை அமரர் ஜோசப் மாஸ்டர் எங்களோடு கதைத்துக்கொண்டு நின்றார். எனது கணவர் பெனடிக்ற் அவர்கள் ஜோசப் மாஸ்டரைக் கண்டதும் அவரோடு கதைத்துவிட்டுப் போய்விட்டார். அந்த நிமிடமே இறைவன் மாஸ்டரின் உள்ளத்தில் எனது வாழ்வின் விதையை ஊன்றிவிட்டார்.

"உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு. அவரையே நம்பியிரு. அவர் உன் சார்பாகச் செயலாற்றுவார்" (திரு.பா 37:5) என்பது என் வாழ்வில் உண்மையானது. மாஸ்டரும் என் கணவரின் அண்ணன் பிரான்சிசும் நண்பர்கள். அவர் மூலமாகத் திருமணம் பேசப்பட்டது.

இந்தவேளையில் எமக்கு இல்லிடம் இருக்கவில்லை; வாழ்வுக்கு ஆதாரம் இருக்கவில்லை. அம்மாவுக்கு இறைவன் கொடுத்த மாபெரும் தாலந்து தையல் மட்டுமே. முயற்சியாக உழைத்து தன்னிடம் இருந்ததை அம்மா எனக்குத் தந்தார். உறவுகள் கைகொடுத்தார்கள். எங்கள் திருமணத்தை நாதஸ்வரக் கச்சேரி, வீதி ஊர்வலம் என எங்கள் சித்தப்பா அமரர் சபா மாசில்லாமணி சிறப்பாக நடத்திமுடித்தார்.

என் கணவர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் காவலராக இருந்தார். கொழும்பில் சிறைச்சாலை விடுதியில் நாம் வாழத் தொடங்கினோம். இன்று வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியவில்லை என்று தலையில் கை வைக்கின்றோம். அன்று எனது கையில் கிடைத்த பணம் 200 ரூபா. உறவுகள் நண்பர்கள் வருவார்கள். அவர்களை அன்போடு உபசரிப்போம். மகிழ்ச்சியாக வாழ்வு நகர்ந்தது.

எமது திருமண நாள் ஆவணி 27ஆம் திகதி. அன்றைய நாளில் ஒவ்வொரு வருடமும் மடுவுக்கு வந்து நன்றிப்பலி செலுத்துவேன். இதை 1965 - 1989 வரை இருபத்தைந்து வருடங்களாகத் தொடர்ந்து செய்து வந்தேன். அதன் பின்பு நாட்டின் சூழ்நிலை காரணமாக மடுவுக்கான பாதை தடைப்பட்டது.

இளமையான 25 வருட வாழ்வை எண்ணிப் பார்க்கிறேன். பொறளையில் இருந்து தெமட்டக்கொட ஊடாக மட்டக்குளிக்கு பஸ்ஸில் சென்றுகொண்டிருந்தவேளை பஸ்தரிப்பில் பஸ் நின்றது. 'மொட்டையா நகிற்ரின்ட' என்று ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. பஸ்சில் அடித்துக்கொண்டும் இருந்தார்கள். வெளியில் என்னைப் பார்க்க வேண்டாம் என்று எனது கணவர் சொல்லிக்கொண்டிருந்தார். நின்றவர்களில் இருவர் மறியலில் இருந்தவர்கள் என்றும் அவர்களுக்குத் தான் அடித்ததாகவும் அதுதான் அவர்கள் இப்படிக் கூச்சல் போட்டதாகவும் என் கணவர் எனக்குப் பின்னர் சொன்னார்.

இரக்கமும் கருணையும் உள்ளத்தில் இருந்தாலும் சிறைக்காவலாளித் தொழிலில் அவற்றை வெளிப்படுத்த முடியாது. மேல் அதிகாரிகளின் கவனத்திற்கும் அடுத்த இன சகோதரரின் நச்சரிப்பிற்கும் ஆளாக வேண்டியிருக்கும். ஒருமுறை நித்தம்புவ என்ற இடத்திற்கு ஒருவனை எஸ்கோட்டில் எனது கணவர் கொண்டுபோனார். இவர் அவனுக்கு இரக்கம் காட்டப் போக அவன் தலைமறைவாகிவிட்டான். இரண்டு நாளாக இவர் வீடு வரவில்லை. அவனைத் தேடித்திரிந்து கண்டுபிடித்து, கெஞ்சி மன்றாடி மறியல் வீட்டிற்குக் கொண்டுவந்து வழக்குச் செலவையும் தானே செய்துகொடுத்தார். ஏனென்றால் ஐந்து பிள்ளைகளின் தகப்பன்; வீட்டில் வறுமை! வேலையில் இருந்து நீக்கிவிட்டால் என்ன செய்வது? "இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்." (மத் 5:7) என்ற இறைவார்த்தையின் செயல்பாட்டினைத் தொடர்ந்த வாழ்வில் கண்டேன்.

1967ஆம் ஆண்டில் எமக்கு மூத்த மகள் சுதர்சினி பிறந்தாள். 1968ஆம் ஆண்டு வீட்டிற்குரிய காணியை வாங்க இறைவன் வழிவகுத்து 1973ஆம் ஆண்டில் எனது சகோதரன் வில்சன் ருஜனின் உதவியோடு அழகிய வீட்டை ஆண்டவர் அமைத்துத் தந்தார். 1981இல் இளைய மகள் நிருஜா பிறந்தாள்.

இந்த 17 வருடங்களும் எனது வாழ்வு சாதாரண ஆன்மீக வாழ்வாகவே இருந்தது. பூசை, செபமாலை, பக்தி முயற்சிகள், கோவில் திருவிழாக்கள் எனச் சென்றுகொண்டிருந்தது. உலக வாழ்வில் ஒரு தேடல் இருந்தது. "உழைக்க வேண்டும்; சம்பாதிக்க வேண்டும்; சுய கௌரவத்தை விட்டுக்கொடுக்கக்கூடாது" போன்ற மனப்பான்மையே வாழ்வில் மேலோங்கி இருந்தது. இதனால் உறவுகளுக்கிடையில் பல பிரச்சினைகள், மனக்கசப்புக்கள் ஏற்படத்தொடங்கியது.

அத்தோடு நாட்டுப்பிரச்சினை விஸ்வரூபமெடுத்த நிலையில் தமிழ் இளைஞர்களைச் சிறைச்சாலையில் போடத் தொடங்கினார்கள். இவருக்கு வேலைசெய்வதில் பயம். மேல் அதிகாரிகளின் கவனம் காவலர்மேல் இருந்ததனால் ஒருநாள் இரவு வீட்டைச் சுற்றிச் ஒரே சத்தம்! வீட்டுக்கதவைத் திறக்கும்படி வற்புறுத்தினார்கள். நாலு தமிழ் இளைஞர்கள் சிறையில் இருந்து தப்பி ஓடி விட்டார்களாம்! அதனால் எமது வீட்டுக்குள் வந்து அந்த இரவுவேளையில் தேடினார்கள். அன்று இவர் சிறைச்சாலையில் இரவுக் காவலில் இருந்தார். இவரை மேலதிகாரிகள் விசாரித்ததால் இரண்டு நாட்களாக இவர் வீட்டிற்கு வரவில்லை.

இச்சம்பவத்தின் பின்பு வேலை மாற்றலாகி ஊரோடு வந்தோம். இக்காலப்பகுதியில் தமிழ்ப்பகுதியில் இராணுவச் சுற்றிவளைப்பு, செல் தாக்குதல், துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் கடை அடைப்புக்கள், ஹர்த்தால், முஸ்லிம் மக்களின் வெளியேற்றம் போன்றவற்றால் இயல்வு வாழ்க்கை பாதிப்படைந்தது. பல மக்கள் பயந்து நாட்டைவிட்டு வெளியேறினார்கள்.

1989இல் எனது சகோதரியின் கணவர் ஆர். ஜி ஸ்ரோர் குணநாயகம் கிபீர் தாக்குதலில் யாழ் மிருசுவிலில் இறந்தார். எனது சகோதரியை, பிள்ளைகளைச் சந்திக்கமுடியாத நிலை எங்களைப் பெரும் கவலைக்குள்ளாக்கியது. இதன்பின்பு எனது அம்மா மற்றும் சகோதரர்கள் எல்லோரும் ஊரைவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்றார்கள். எனது வீட்டிற்கு அயலில் இருந்தவர்களும் செல் தாக்குதலுக்கு பயந்து தள்ளிப்போய் இருந்தார்கள். தனிமை, பயம் மனதில் வளரத்தொடங்கியது.

இந்தவேளையில்தான் நான் இறைவனோடு ஒன்றிக்கத் தொடங்கினேன். தூய பவுல் அடியாரின் நம்பிக்கை எனதாகியது. "கடவுள் நம் சார்பில் இருக்கும்போது நமக்கு எதிராக இருப்பவர் யார்? (உரோமர் 8:31) கிறிஸ்துவின் அன்பில் இருந்து நம்மைப் பிரிக்கக்கூடியது எது? வேதனையா, நெருக்கடியா, இன்னலா, பட்டினியா, ஆடையின்மையா, இடரா, சாவா? எதுதான் நம்மை பிரிக்க முடியும்?" (உரோ 8:35) சத்திய வசனம் நிகழ்ச்சியை வானொலியில் தவறாமல் கேட்பேன். குறிப்பை குசினிக் கதவில் எழுதிவைப்பேன். பின்பு பைபிளில் வாசிப்பேன். அருட்திரு. பேக்ஸ்மன் அடிகளாரின் பாடல்கள், குருஸ் திவாகரனின் ஒலி நாடாக்கள், அருள் ஓசைப் புத்தகங்கள், எந்தச் சபை புத்தகங்கள் கைக்குக் கிடைத்தாலும் வாசிக்கத் தொடங்கினேன். இதனால் பைபிளை முழுமையாக வாசிக்க வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. அந்த நாட்களில் மின்சாரம் இல்லை; மண்ணெண்ணை இல்லை; அயலவர்கள் இல்லை. மனதில் பயம்தான் இருந்தது. தேங்காயெண்ணை வெளிச்சத்தில் பைபிளை முழுமையாக வாசித்தேன்.

எங்கள் திருமணம் நடந்து 26 வருடங்களின் பின்பு மடுவுக்கு போகமுடியாத நிலை ஏற்பட்டபோது வைத்தியசாலை வீதியில் உள்ள எங்கள் காணியில் மடு மாதாவின் சுருபத்தை வைக்க எண்ணினேன். அப்போது பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு. ஜே. பி. தேவராஜாவிடம் என் விருப்பத்தைத் தெரிவித்தேன். அவரே எனக்கு மடுமாதா சுருபத்தைக் கொண்டுவந்து தந்தார். இவ்வேளையில் என் செபத்தோடுகூடிய நன்றியை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பைபிள் வாசிக்கத் தொடங்கியதும் எனக்குள் பல கேள்விகள் எழுந்தன. குற்ற உணர்வுகள் தாக்கியது. செபங்கள் வழிபாடுகளில் திருப்தியற்ற நிலை! யாரிடம் கேட்பது என்று தெரியாமல் இருந்தேன். என்னோடு பழகும் சபை நண்பர்கள் இருந்தார்கள். தங்கள் செபங்களில் பங்குபற்றும்படி அழைத்தார்கள்; பங்குபற்றினேன்; அதிலும் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை.

அந்த வேளையில்தான் அருட்தந்தை கிறிஸ்ரியன் வாஸ் அடிகளார் புதுவாழ்வுக் கூட்டத்தில் எட்டு உரைகள் கொடுக்கிறார் என்று கேள்விப்பட்டேன். பேராலயத்திற்குச் சென்றேன். அன்று மூன்றாவது உரை கொடுக்கப்பட்டது. இயேசுவை ஏன் சந்திக்க வேண்டும்? என்ற கேள்வியை எழுப்பி எம்மைச் சிந்திக்க அழைத்தார். யோவான் 10:10, 14:61 மற்றும் யோவான் 5:12 போன்ற திருவசனங்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது.

உயிர், வாழ்வு, வழி இவற்றைப் பெற்றுக்கொள்ள இயேசுவைச் சந்திக்க வேண்டும் என்று எடுத்து விளக்கினார். இயேசு தரும் வாழ்வு அதிக சக்தி உள்ளது என்று ஆழமாக எடுத்துக் கூறினார். சொந்தப் பிரச்சினை, சமூகப் பிரச்சினை, பிறர் பிரச்சினைகளைத் தாங்கவும் பாதுகாப்பு உணர்வு தருகிறது என்றார். செயல் இல்லாத விசுவாசம் செத்த விசுவாசம் என்று கூறிய வார்த்தைகள் என் மனதைத் தொட்டது. முழுமையாக உரையைக் கேட்டேன்; சிந்தித்தேன்; என்னை மாற்றிக்கொள்ளத் தொடங்கினேன்.

பரிசுத்த ஆவியிடம் அதிகமாக செபிக்கத் தொடங்கினேன். எனக்குள்ளே உற்சாகம் ஏற்பட்டது. பிறருக்கு உதவிசெய்ய வேண்டும் என்ற வாஞ்சை ஏற்பட்டது. 1990ஆம் ஆண்டு பெற்றா முதலாம் குறுக்குத்தெருவில் வாழ்ந்த மூன்று சகோதரிகளில் ஒருவர் சுகவீனமாக இருப்பதைக் கேள்விப்பட்டு பார்க்கச் சென்றேன். படுக்கையில் இருந்து எழும்பமுடியாத நிலையில் அவர் இருந்தார். உணவு கொடுக்க எவரும் இல்லை. செபித்துக்கொண்டே அவரின் அலுவல்களைப் பார்ப்பேன். மூன்று கிழமைக்குள் அவருக்கு அமைதியான மரணத்தை ஆண்டவர் கொடுத்தார். அடுத்த சகோதரிக்குக் கண் தெரியாது. உதவியும் உணவும் தேவையாக இருந்தது. அங்கு பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. விட்டுவிலக நினைத்தேன். பிரச்சினைகளை பூ அன்ரியிடம் சொல்வேன். அவர் என்னை ஆறுதல்படுத்தி பணிசெய்ய உற்சாகப்படுத்தினார். இயேசுவிடமும் பரிசுத்த ஆவியிடமும் செபிக்க தொடங்கினேன். செய்யவேண்டிய பணிகளை இறைவன் காண்பித்தார்.

அனோடா என்ற இன்னுமொரு சகோதரியின் பிரச்சினையைக் கண்டேன். அவருக்கு உதவிசெய்ய விழைந்தேன். உறவுகளாலும் அயலவர்களாலும் பல பிரச்சினைக்கு ஆளானேன். அப்போது மன்னார் பங்குத்தந்தையாக அருட்தந்தை வாஸ் இருந்தார். அவரிடம் பிரச்சினைகளைச் சொன்னேன். என்னை வழிநடத்தி உற்சாகப்படுத்தினார். அச்சகோதரியின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல இடங்களுக்கும் போகவேண்டியிருந்தது. மனம் தளரவில்லை. இறைவனிடம் வேண்டினேன். அவர்களை மீண்டும் குடும்பமாக இணைத்தேன். அவர்கள் இன்று பிள்ளைகளோடு குடும்பமாக வாழ்வதற்காக இறைவனுக்கு நன்றி சொல்கிறேன்.

மன்னார் மறைமாவட்டத்தில் அன்பியம் தொடங்கியது. அதில் பங்குபற்றி பணிகளைச் செய்யத் தொடங்கினேன்.

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தால் தையல் பயிற்சி கொடுக்கும்படி கேட்டபோது சந்தோஷமாக ஏற்றுக்கொண்டேன். ஏனென்றால் இறைவன் எங்கள் குடும்பத்திற்கு தந்த பெரிய தாலந்து தையல். தையலால்தான் எங்கள் குடும்பம் உயர்ந்தது. அன்பியங்களில் ஒளிவிழா நடத்த வேண்டும் என்று கூறப்பட்டபொழுது இந்து, மெதடிஸ்த, கிறிஸ்தவப் பிள்ளைகளை ஒன்றுகூட்டி நிகழ்ச்சிகள் பழக்கினேன். இவ்வேளையில் பாடசாலை அதிபர் தமிழ் அறிஞர் அமரர் கிறகோரி எட்வேட் மிராண்டா அவர்கள் எனக்குப் பெரும் உதவியாக இருந்தார். பெற்றா இரண்டாம் குறுக்குத் தெருவில் மேடை போட்டு அதிபரே சிறப்பாக வழிகாட்டி நடத்தினார். இறைவா அன்னாரின் ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றி அளித்தருளும்!

சிறுவர்களை ஒன்றுகூட்டி றெயின்போ கிளப் உருவாக்கினேன். இதில் டானியல் வசந்தன், ரெலோ மோகன், விமலன் அரியதாஸ் முத்துராசா முத்துலிங்கம், அல்டன் அலோசியஸ் இவர்களுடன் பெண் பிள்ளைகளையும் சேர்த்து வழிபாடுகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்தி கழகத்தை வளர்த்தேன். எனது சகோதரன் மகேந்திரன் றெயின்போ படம் போட்டு ஜேசிகள் செய்துகொடுத்து உட்சாகப்படுத்தினார். அன்பிய வாழ்வில் மக்களைச் சந்தித்தேன். நானும் பூ அன்ரியும் அன்பியங்களை ஒன்றுகூட்டி கலந்துரையாடி செபிப்போம். பெற்றா மக்கள் பண்புள்ளவர்கள்; படித்தவர்கள்; தேவைகளுக்கு உதவிசெய்வதில் தாராள மனம் கொண்டவர்கள். அன்றுதொடங்கி இன்றுவரை அன்பியப் பணியாளராக பணிபுரியும் தங்கம் அன்ரி, ராணி யேசுதாசனுக்கு இறைவனின் ஆசீரும் பாராட்டுக்களும் கிடைக்கவேண்டும்.

பாதை தடைப்பட்டு கடல் வழியாகப் பயணம் செய்யவேண்டி இருந்தபோது எனது கணவர் நோய்வாய்ப்பட்டோரை கடல் வழியாகக் கூட்டிச்செல்வார். யாழ் நகருக்கு சைக்கிளில் கூட்டிச்செல்வார். அருள் சகோதரி பொஸ்கோவுடன் சைக்கிளில் யாழ் சென்ற பயணத்தை இன்றும் சொல்லி சந்தோஷப்படுவார். எத்தனையோ ஆபத்துக்கள், பிரச்சினைகளில் இருந்து அவரைக் காப்பாற்றி வழிநடத்தியிருக்கிறார் இறைவன். 1995ஆம் ஆண்டில் பெற்றா கிராம அபிவிருத்தி சங்கத் தலைவராக என்னை மக்கள் தெரிவுசெய்தார்கள். (தொடர்ச்சி 13ஆம் பக்கம்)



மடுமாதா திருச்சுருபத்தை தேவராஜா அடிகளார் ஸ்தாபித்து வைத்து செபிக்கிறார்.



றெயின் போ வீதியை வாஸ் அடிகளார் திரைநீக்கம் செய்துவைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

### அம்மா உனக்காக ...!

உனக்காகக் கவிதைகள் எதுவும்
இதுவரை எழுதவில்லை அம்மா
நீயே எனக்குக் கவிதையாக இருந்தாய் என்பதால்.
என் வெற்றியின் ஒவ்வொரு படிகளுமே
உன் பெயரையே உச்சரிக்கிறது.
நான் காலடி எடுத்துவைத்த ஒவ்வொரு தடமும்
மிக அழகானவை.
அவை நீ காட்டிய வழி என்பதால்
என்னை மறந்து எழுதிக்கொண்டிருந்தேன்
உந்தன் பெயரையே.
நான் காயங்கள் பட்டு சிந்திய உதிரத் துளிகளைவிட
நீ எனக்காக சிந்திய உன் கண்ணீர்த் துளிகளே
உயர்வானது அம்மா.
மலர்ந்த மலர்களைப் பார்த்து இரசித்தேன்
அவை அழகாக இருப்பதால்.
அதிலும் மேலாக உன் அன்பு முகம் அழகு
என்று உன் முகத்தைப் பார்த்து மகிழ்ந்தேன்.
இத்தனை விதமான சந்தோசமும் உன்னிடம் இருந்து
எனக்குக் கிடைக்க என்ன வேண்டும் எனக்கு?
மீண்டும் ஒரு தடவையாவது உன் கருவிலே
நான் பிறக்க வேண்டும் என்பதே கடவுளிடம்
நான் கேட்கும் வரம்!
காலங்கள் முழுதும் உன் காலடியிலே
என்றும் வாழ்வேன் அம்மா!

*எல். ரெனிஸ்ரிகா, முதலியார்குளம், செட்டிகுளம்.*

### பெண்

உயிர் தோன்றியது முதல் உயிர் சாயும்வரை
அழியாத உருவம் பெண்.
பெண்ணே உன் மௌன மழையைப் பார்த்த நான்
அதில் நனைய ஆசைப்படுகிறேன்.
அழகின் அடித்தளம் பெண்.
உலக அதிசயம் பெண்.
பெண்ணே, உன் அழகிற்கு எல்லையில்லை!
பாரதியால் புதுமைப் பெண் எனச் சித்தரிக்கப்பட்டவளே!
பிரம்மன் படைத்த அழகான உலகில் அழகிய ஓவியம் நீ.
இரவிலே தோன்றும் முழுமதியில் உன் முகம் பார்க்கிறேன்.
மல்லிகையில் உன் மன வெண்மையை உணர்கிறேன்.
மார்கழியில் பொழியும் பனித்துளியில்
உன் சாரலை உணர்கிறேன்.
என் இதயத்திலிருந்து வழிகின்ற இரத்த வலிகளைவிட
உன் கண்ணிலிருந்து வழிகின்ற
கண்ணீர் துளியின் வலியே மேலானது.
உலகிலுள்ள அதிசயம் ஏழு – அதில் நீயும் ஒன்று
வானத்திலுள்ள ரகங்கள் பத்து – அதில் நீயும் ஒன்று
சங்கத்தமிழ் நான்கு – அதில் உன்னைச் சேர்த்து
உன்னுடன் சேர்ந்தபின் நானும் ஒன்று.
காற்றே நீ என் வாசல் வந்தவுடன்
என் இரண்டு இமைக் கதவுகளும் திறக்கப்பட்டது.
விழித்துப் பார்த்தேன்: வந்தது நீயென்று உணர்ந்தேன்....!

*- ம. ஆன் மரிய டிலாணி, செட்டிகுளம், ம. வி, செட்டிகுளம்.*

### தேடுவாரற்றுக் கிடக்கும் என் தேசம்

நேற்றுவரை நேசிக்கப்பட்ட என் தேசம்
இன்று தேடுவாரற்றுக் கிடக்கிறது...
நீண்டு வளர்ந்த பனை மரங்களும்
பல கதை சொல்லும் பச்சை வயல்களும்
காணாமல் போய்விட்டன!
பின்னப்பட்ட கூந்தலும்
பின்னலில் சூட்டப்பட்ட மல்லிகையும்
நெற்றியில் பூத்த குங்குமமும்
நெறி காட்டிய திருமாங்கல்யமும்
நெறி பிறழாத திருமணங்களும்
நேற்று வந்த பேருந்துடன்
ஏறிச் சென்றுவிட்டது தூரதேசம் ......
பெண்ணுக்குரிய மரியாதை
தாய்மைக்குரிய பாசம் இவற்றைத் தந்த
என் வாலிப ஆண்களும் - இன்று
வயோதிபர்களாகிவிட்டனர்.
நவீனம் என்ற போர்வைக்குள்
நசுங்கிப்போகிறது எம் பண்பாடு!
கடவுளுக்குள் வாழும் என் சமூகமே
கண்திறந்து பாருங்கள் ஒருமுறை!
உங்கள் கால்களின் கீழேயும்
கண்ணிவெடி புதைக்கப்பட்டிருக்கும்.....!

*- கயல்விழி வின்சன், இளவாலை*

# கொஞ்சம் சிரிங்க

**ஆசிரியர் :** நம் நாட்டில் தேனும் பாலும் பெருகி ஓடினால் எப்படி இருக்கும்?
**மாணவன் :** எறும்புக் கடி அதிகமாய் இருக்கும்.

**நண்பன் 1 :** நீ ஏன்டா சுற்றுலாவிற்கு வரவில்லை?
**நண்பன் 2 :** போய் வந்த பிறகு ஆசிரியர் கட்டுரை எழுதச் சொல்லுவார். *அ. விலோஜினி, கன்னாட்டி, அடம்பன்.*

**அண்ணன் :** ரூமை மூடிகிட்டு ஏன் மருந்து சாப்பிடுறா?
**தம்பி :** டாக்டர்தான் "அறை மூடி" மருந்து சாப்பிடச் சொன்னார்.

.......................................................

**கமல் :** நேத்து உன் மனைவிக்கும் அம்மாவுக்கும் நடந்த சண்டையில யாருக்குப் பின்னாடி நீ நின்ன?
**விமல் :** போடா, நா பத்திரமா பீரோக்கு பின்னாடி போய் நின்னுகிட்டேன்.

**வாத்தியார் :** தென்னை மரத்தில இருந்து 6 இலையும் பனை மரத்தில இருந்து 6 இலையும் கீழே விழுகுது. இரண்டையும் கூட்டினால் என்ன வரும்?
**மாணவன் :** குப்பைதான் வரும்.

.......................................................

**ராமு :** டேய் என்ன பவுடர் யூஸ் பண்ணற?
**முருகன் :** சுனில் பவுடர்.
**ராமு :** என்ன செண்ட் யூஸ் பண்ணற?
**முருகன் :** சுனில் செண்ட்.
**ராமு :** என்ன ஹேர் ஓயில் யூஸ் பண்ற?
**முருகன் :** சுனில் ஹேர் ஓயில்
**ராமு :** ஓ, சுனில் அவ்வளவு பெரிய பிராண்டா?
**முருகன் :** இல்லடா, சுனில் என்ட ரூம்மேட்.

# மன்னா விளம்பரப் பலகை

கை ரேகையைப் பார்த்து உன் எதிர்காலத்தை நம்பிவிடாதே? ஏனென்றால் கை இல்லாதவனுக்கும் எதிர்காலம் உண்டு. மறந்துவிடாதே? *செ. நிலோசியன், சாளம்பன்.*

உன் தவறைப் பாராமல் மற்றவர் தவறை சுட்டிக்காட்டாதே!
நீ பிறரை மன்னித்தால்தான் பிறரும் உன்னை மன்னிப்பார்.
பிறரை நேசிக்கவும் மதிக்கவும் மன்னிக்கவும் பழகு.
இறைவன் உன்னை மிகுதியாக ஆசீர்வதிப்பார்.
மனிதராகப் பிறந்தவர் தவறுசெய்வது இயல்பு.
அத்தவறை உணர்ந்து மனம் வருந்தல் நல்ல பண்பு.
தவறு செய்த பின்னர் மனம் வருந்துவதைவிட
அதைச் செய்யுமுன் அதைப்பற்றிச் சிந்திப்பது நல்லது.
**ஆக்கம் :** *ஞா. கிறிஷாந்தா (குயின்சி), சாளம்பன்.*

மகிழ்ச்சி எனும் கோட்டையின் முதல் வாயில் அமைதி.
நம்மைக் காப்பாற்றுபவை நீதி, தன்னடக்கம்,
உண்மையான எண்ணம் ஆகியவைதாம்.
ஒழுக்கம் பிச்சைக்கார வடிவத்தில் இருந்தாலும்
மதிப்பளிக்கப்படும். தெய்வ பக்தியோடு ஒருவருகொருவர்
கீழ்ப்படிந்திருங்கள்.
*ஸ். டினோறி, அச்சங்குளம், நானாட்டான்.*

வாழ்க்கைப் படிகளில் மேலே ஏறும்போது வழியில் சந்திப்பவர்களுடன் அன்பாக இருக்க வேண்டும். ஏனென்றால் இறங்கி வரும்போது அவர்களைச் சந்திக்க நேரிடும். *- என். அன்றோ நிஷாயா, மாவிலங்கேணி, முருங்கன்.*

- அன்பு உன் வாழ்வில் வெளிப்படாவிட்டால் அது அநீதியான வாழ்வே.
- ஏதாவது ஒரு வழியில் உன் வாழ்வு பிறருக்கு உதவாவிட்டால் அதை வாழ்ந்து பயனில்லை.
- முயன்று தோற்பது முயற்சி செய்யாமல் இருப்பதைவிட பன்மடங்கு மேலானது. *அ. தர்சினி தற்குரூஸ், தரவன்கோட்டை, மன்னார்.*

# சிறுகதை

*கி. அனுஷா,*
*தட்சனாமருதமடு, பாலம்பிட்டி, மடு.*

## கண்டிப்பு

பாம்பு நெளிந்து நெளிந்து செல்வதுபோல் ஆங்காங்கே வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதைகளில் இரு புறங்களிலும் கள்ளிச் செடிகளும் பருத்த பாலை மரங்களும் அணிவகுத்து நின்றன. தூரத்தே வயல் வெளிகளில் விவசாயமும், சற்றுப் பின்புறத்தே ஆடு, மாடு, மேய்ப்பும் நடைபெற, சிறு குடிசைகளும் குடிசைகளின் நடுவில் பெரிய பொதுக் கிணறு மற்றும் அழகாக அமைக்கப்பட்ட உயர்தரப் பாடசாலையையும், சின்னங்களாகக் கொண்ட சிறிய சிற்றூர்தான் அக்கிராமம்.

இவ்வழகிய கிராமத்தில் அனோச் பிறந்தான். இவன் வீட்டில் ஒரு பையன் என்பதால் செல்லமாக வளர்ந்தான். இவனுக்கு சகோதரியாக உயர்தரத்தில் கல்வி கற்கும் அக்கா. அம்மா மஞ்சுளா. அப்பா செபஸ்தியான் எனக் குடும்பம் மிகவும் சந்தோசமாக இருந்தது.

அனோச் சரியான குழப்படிக்காரன் . "அனோச் அடுத்த வீட்டு ரமேஷை அடிச்சுப் போட்டானாம்" என மனைவியிடம் கூறியவாறு வீட்டினுள் நுழைந்தார் செபஸ்ரியான்.
தந்தை வந்துவிட்டதை அறிந்த அனோச் அடுத்த அறையில் இருந்து மெதுவாக நழுவிப் பின்பக்கம் செல்லத் தொடங்கினான்.

அனோச் 7ஆம் ஆண்டு படிக்கும் மாணவன். இவன் பெற்றோருக்கு ஒரே பிள்ளை என்பதால் அனோச்சில் அம்மா அளவுகடந்த அன்பை வைத்திருந்தாள். அப்பாவும் அப்படித்தான். எனினும் அன்பு காட்டுவதுடன் அவர் கட்டுப்பாடும் கண்டிப்பும் உள்ளவர்.
அவர் அனோச் செய்யும் அடாவடித்தனத்தால் பல ஊர் வம்புகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலைக்கு ஆளாகி இருக்கிறார். இன்றும் அப்படித்தான். பாடசாலை சென்ற அனோச், வகுப்பில் உள்ள மாணவன் ஒருவனுக்கு பெற்றால் அடித்து மூக்கைப் பதம் பார்த்துவிட்டான்.

செபஸ்டியான் முன்பக்கமாக அனோச்சைக் காணாமல் சமையலறைப் பக்கம் சென்று அங்கே கண்களை மூடி அமர்ந்திருக்கும் பூனையைப்போல் ஒடுங்கி நின்ற அவனைக் கண்டுகொண்டார்.
"ஏன்டா வகுப்பில் உள்ள பொடியன அடிச்சனி?" என்று உறுமினார் தந்தை. அனோச் பயத்துடன் அவரைப் பார்த்தவாறு மௌனமாக நின்றான். "என்னடா, நான் கேட்கிறது உன்ர காதில விழவில்லையா?"
"இல்லப்பா ... அவன்தான் எனக்கு முதல்ல அடிச்சவன்." என அனோச் விம்மினான். "உனக்கு எத்தின தடவை சொன்னனான். கண்ட கண்ட பையன்களோட சேர்ந்து ஊர்க் கன்றாவியெல்லாத்தையும் வீட்டுக்குக் கொண்டுவராதேயென்று!" தகப்பன் அனோச்சை நாலு சாத்துச் சாத்தினார். அனோச் குடிமுழுகி விட்டாற்போல ஓவென அழுதான்.
"இஞ்சேருங்கோ, பாவம். அவன் தெரியாமச் செய்திட்டான். அவன அடிக்காதேயுங்கோ" எனக் கூறினாள் அனோச்சின் அம்மா. "சரி, சரி நான் அடிக்கல. நீதான் உந்தப் பிள்ளையைக் கெடுக்கிறது. என்னமாவது செய்யுங்கோ" என்று இரைந்துவிட்டு வெளியேறினார் செபஸ்ரியான்.
(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# சிறுவர் பொழிவு



*செ. யேசுதாசன் குரூஸ்,*
*மன்/புனித ஆனாள் ம.ம.வி, வங்காலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 09 மாணவர்களுக்கான வினா - விடைத் தொகுப்பு - 2014 கத்தோலிக்க திருமறை

தொகுப்பு :- திருமதி. ஞானமலர் மரியதாசன், மன்/ புனித ஆனாள் ம.ம.வி, வங்காலை.

01. தார்சு நகரத்தைச் சேர்ந்த, பெஞ்சமின் கோத்திரத்தைச் சார்ந்த இவர் யார்? பவுல்.
02. அசீப்பா அன்பிய முறையில் குறிப்பிடப்படும் மேய்ப்புப்பணியின் நோக்கம் யாது? திருச்சபையிலும், உலகிலும் இல்லறத்தவருக்கு ஒப்படைக்கப்படும் மேய்ப்புப்பணிபற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறுவதே இதன் நோக்கமாகும்.
03. இறைவனின் வெளிப்பாடு தாவீதுக்கு யார் மூலம் கிடைத்தது? நாத்தான் இறைவாக்கினர் மூலம்
04. "நாம் கடவுளுடைய பிள்ளைகளாய் இருப்பதனால் மனித கற்பனையாலும் சிறிய வேலைத்திறமையாலும் உருவாக்கப்பட்ட பொன், வெள்ளி, கல் உருவங்களைப்போலக் கடவுள் இருப்பார் என நாம் எண்ணுவது முறையாகாது" என யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
புனித பவுலால் ஏதென்ஸ் மக்களுக்குக் கூறப்பட்டது.
05. எத்தனையாம் நூற்றாண்டில் காணிக்கைப் பவனி ஒரு சடங்காக உருவெடுத்தது? கி. பி. 2ஆம் நூற்றாண்டில்.
06. திருப்பலியானது 1. இறைவார்த்தை வழிபாடு, 2. நற்கருணை வழிபாடு என இருபெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவையிரண்டும் எச்செயல்களைக் குறிக்கின்றன?
ஒரே வழிபாட்டுச் செயலை.
07. கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் எண் #1349இல் கூறப்பட்டுள்ளபடி இறைவார்த்தை வழிபாடு எவற்றை உள்ளடக்கியுள்ளது? இறைவாக்கு நூல்கள் அதாவது பழைய ஏற்பாடு, திருத்தூதர்களின் கடிதங்கள், நற்செய்தி நூல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
08. பாஸ்கு சனி திருவிழிப்புத் திருப்பலியில் மொத்தம் எத்தனை வாசகங்கள் வாசிக்கப்படுகின்றன? ஒன்பது வாசகங்கள்.
முதல் ஏழு வாசகங்கள் பழைய ஏற்பாட்டிலிருந்தும், எட்டாம் வாசகம் புதிய ஏற்பாட்டிலிருந்தும், ஒன்பதாம் வாசகம் நற்செய்தி வாசகமாகவும் இருக்கின்றன.
09. 'அல்லேலூயா' என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
ஆண்டவரைப் புகழ்வோம்.
10. ஞாயிறு மற்றும் பெருவிழாக்களில் வாசிக்கப்படும் 2ம் வாசகம் எதிலிருந்து எடுக்கப்படுகின்றது?
புதிய ஏற்பாட்டுத் திருமுகங்களிலிருந்து
11. மறையுரையில் எவை விளக்கப்படுகின்றன?
இறைவனின் மீட்புச்செயலும் பாஸ்கா மறைபொருளும்.
12. நற்செய்தி வாசகத்திற்குப்பின் வாசித்த இறைவார்த்தைகளை விளக்கிக்கூறி மறையுரை மூலம் விசுவாசிகள் தியானிக்க உதவுவது யாருடைய கடமை? குருவானவரின் கடமை.
13. ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவையாக இருக்கும் வழிபாடுகள் எவை?
வார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு.14."நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" எனக் கூறியவர் யார்? இயேசு.
15. யூதர்களில் எத்தனை வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் இறைவார்த்தையைப் போதிப்பதற்கு உரிமையுடையவர்கள்?
பதின்மூன்று வயதிற்கு மேற்பட்டவர்கள்.
16. தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின்பொருட்டு, இழிவையும், பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்ட இயேசு இப்போது எங்கே இருக்கின்றார் என எபிரேயர் 12:2 இல் கூறப்படுகிறது?
கடவுளது அரியணையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்.
17. இயேசுவின் அரும் அடையாளங்கள் மூலம் எவை வெளிப்படுகின்றன?
- இறைவன் மனிதர் மட்டில் கொண்ட அன்பு.
- இறை வல்லமை, மகிமை.
- இயேசு இறைமகன் என்ற உண்மை.
18. எமது அன்றாட வாழ்விலே 'நித்திய வாழ்வு' பற்றிய எண்ணக்கரு வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகிறது.?
இரண்டாம் வருகை, நித்திய வாழ்வு, இறையாட்சி, இறுதித் தீர்ப்பு, விண்ணரசு, இறைவனைக் காணுதல், இறைவனின் படைப்பு முழுமையடைதல் போன்ற பெயர்களால்.
19. இயேசு தனது போதனையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இறையாட்சி பற்றிய எண்ணக்கருவை வெளிப்படுத்தியுள்ளார். அவற்றுக்குத் திருவிவிலியத்திலிருந்து ஆதாரம் காட்டுக?
- "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்" (லூக்கா 23:43).
- "வானத்தை அண்ணார்ந்து பார்த்து, அவற்றின்மீது ஆசி கூறி..." (லூக்கா 9:16).
- "விண்ணுலகில் இருக்கிற எங்கள், தந்தையே...' (மத்தேயு 6)
- "விண்ணுலக வாயிலை அடைத்துவிடுகிறீர்கள்" (மத்தேயு 23:14).
- "இறையாட்சியின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது..." (மாற்கு 4:11).
20. இறுதித்தீர்ப்பின்போது அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து என்ன கூறுவார்?
"என் தந்தையிடமிருந்து ஆசிபெற்றவர்களே, வாருங்கள். உலகம் தோன்றியதுமுதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள் ..." (மத்தேயு 25: 34-36).
21. எகிப்தில் இஸ்ராயேல் மக்கள் அனுபவித்த துன்பத்தைக் குறிக்கும் அடையாளப் பொருள் என்ன? புளியாத அப்பம்.
22. பழைய ஏற்பாட்டுப் பலிமுறைகள் மூன்று தருக?
தகனப்பலி, எரிபலி, பாவம் போக்கும் பலி.
23. வழிநடத்தல், தூண்டுதல், புலப்படாத வல்லமை செயற்படுத்தல், உயிரூட்டம், வழிப்படுத்தல் போன்றன எவ்வாறு அழைக்கப்படும்? இறை ஏவுதல் (இறையூக்கம்)
24. புதிய உடன்படிக்கை என்றால் என்ன?
இறைவன் முழு மனிதகுலத்துடனும் தம் மகன் இயேசுக்கிறிஸ்து வழியாகச் செய்துகொண்ட உடன்படிக்கை.
25. திருச்சபையின் வளர்ச்சிக்கு எதுவும் தடையாக இருக்க முடியாது. இக்கூற்றுடன் தொடர்புடைய மனமாற்றத்திற்கு உரியவர் யார்? பேதுரு, கொர்னேலியு.

## கடந்து வந்த ஐம்பது வருடங்களை ......

11ஆம் பக்கத் தொடர்ச்சி

1997ஆம் ஆண்டில் றெயின் போ வீதி போடப்பட்டது. அருட்தந்தை வாஸ் அடிகளாரால் அவ்வீதி திறக்கப்பட்டு திரைநீக்கம் செய்யப்பட்டது. அந்நாட்களில் எத்தனையோ பிரச்சினைகள், அவமானங்களைத் தாங்கவேண்டி இருந்தது. கல்லெறிகள், சொல்லெறிகள் எல்லாவற்றையும் பொறுமையாகச் சகித்துக்கொண்டேன். என்னோடு தோள் கொடுத்து நின்ற மகன் டானியல் வசந்தனுக்கு இன்று றெயின் போ வீதியில் முதல் வீட்டை வாங்க இறைவன் வழிவகுத்துக் கொடுத்திருக்கிறார். இறைவா உமக்கு நன்றி!

எனது உடலில் உற்சாகமும் வலிமையும் உள்ள நாட்களில் எட்டு வயோதிபரைப் பராமரித்து அவர்களின் கிறிஸ்தவக் கடமைகளைச் செய்வதற்கு வழிவகுத்து அமைதியான மரணத்திற்கு ஞானத்துடன் வழிநடத்திய இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

உறுதிபூசுதல் மற்றும் முதன்நன்மைப் பிள்ளைகளை ஆயத்தம் செய்யக் கேட்டபோது முந்நின்று பணி செய்தேன். அவை மிகவும் சந்தோசமான நினைவுகள். நற்செய்திப் பணியாளராகப் பணிசெய்ய வேண்டுமென்ற ஆவல் என் உள்ளத்தில் எப்போதும் இருந்தது. 2004ஆம் ஆண்டில் தன்னார்வ இறைவார்த்தைப்பணியில் ஆர்வம் கொண்டோரைச் சேர்த்து தியானமும் வழிநடத்தலும் பயிற்சியும் வழங்கப்பட்டது. அதில் இணைந்து பணியாற்றினேன். அருட்தந்தை நேசன் அடிகளார் இக்குழுவுக்குப் பொறுப்பாக இருந்து வழிநடத்தினார். அருட்தந்தை அவர்கள் மறைக்கல்வி நிலையத்தில் இருந்து மாற்றலாகிச் சென்றபின்னர் அருட்சகோதரி தியோனி மற்றும் அருட்தந்தை இலாசர் சவிரிமுத்து போன்றவர்களால் இந்தப் பணிக்குழு மீண்டும் புதுப்பிக்கப்பட்டு பணிக்குழுக்களாக ஊர்களுக்கு அனுப்பப்பட்டோம். இப்பணியில் முன்னின்று வழிநடத்திய நேசன் அடிகளாரை இறைவன் ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டும்மென்று வேண்டுகின்றேன்.

பொன்னும் வேண்டாம் பொருளும் வேண்டாம். இறைவனின் பணிக்காக ஒரு மணி நேரம் செலவழித்தேன். நான் நினைத்ததற்கும் வேண்டுவதற்கும் மேலாக என்னை இறைவன் ஆசீர்வதிக்கிறார். எனது இரண்டு பெண் பிள்ளைகளின் குடும்பங்களையும் நிறைவாக ஆசீர்வதிக்கிறார்.

ஓர் ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கம் இது. "ஏன் ஆண்டவர் பேரன் பேத்திகளை உருவாக்கினார்? ஆண்டவர்மேலுள்ள சம்மனசுகளில் இருந்து பேரன் பேத்திகளை வடிவமைத்து வாஞ்சையுடன் வளக்கவும் அன்பு செய்யவும் அவர்களை பேத்திகளிடம் (அம்மம்மா அப்பப்பா) அனுப்பிவைத்திருக்கிறார். ஆண்டவர் ஏன் அவர்களைப் படைத்தாரென்றால் அவர்கள்தான் ஒரு குடும்பத்திற்கு அவரால் கொடுக்கக்கூடிய மிகவும் அன்பான, இனிமையான ஆசீர்வாதங்கள் என்று அவருக்குத் தெரியும். இக்குடும்ப ஆண்டில் 50 வருடங்களை ஆசீர்வதித்துத்தந்த இறைவனுக்கு நன்றி.

## 05ம் ஆண்டு, 4 1/2ம் ஆண்டு நினைவஞ்சலி



ஆன் மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை (பெரியா)



திறினிற்றி அன்ரன் கமலநேசன் (குஞ்சு)

(கொன்வென்ட் வீதி, மன்னார்.)

மலர்வு : 27 - 08 - 1945
உதிர்வு : 06 - 08 - 2009

மலர்வு : 29 - 04 - 1952
உதிர்வு : 08 - 02 - 2010

*"கடவுளே உமது பேரன்பு எத்துணை அருமையானது! மானிடர் உம் இறக்கைகளின் நிழலில் புகலிடம் பெறுகின்றனர்." (தி.பா. 36:7)*

அன்பான எம் தெய்வங்களே! எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் பல ஆனாலும் எம்மைவிட்டு விலகாது உம் நினைவு. இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

*இவர்களின் பிரிவால் துயருறும் : சகோதரர், சகோதரிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.*
*தகவல் : தகியுன் பிலிப்புப்பிள்ளை, இலண்டன்.*

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி- 132

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

எரேமியாவின் நூல்கள் 52 அதிகாரங்களைக் கொண்டது. இந்நூலின் 42ஆம் அதிகாரத்தில் இஸ்ராயேலின் ஒரு தொகுதி மக்கள் கடவுளின் விருப்பத்துக்கு மாறாக, சுகவாழ்வுக்காக எகிப்துக்குச் செல்வதும் அங்கு கடவுளின் கோபத்திற்கு ஆளாகித் தண்டிக்கப்படுவதும் சொல்லப்படுகின்றது.

பலஸ்தீனத்தின் பல நாடுகள் சிலைவழிபாடுகளில் மூழ்கி இருந்தன. இச்சிலைகள் சிற்பிகளின் கைவண்ணத்தால் உருவாகியவை; இவற்றிற்கு உயிரோ உணர்வோ இல்லை; இவற்றிற்குத் தூபம் காட்டுவதும், நீர்மப்படையல்களைப் படைப்பதும், திருவிழாக்கள் எடுப்பதும் கடவுளின் சீற்றத்துக்குக் காரணமாயின. இந்நாடுகளைக் கடவுள் தண்டிக்கச் சித்தம்கொண்டார்.

இதற்கு பபிலோனையும் அதன் மன்னன் நெபுக்கத்னேசரையும் கல்தேயரையும் தெரிந்துகொண்டார். அவர்களை வலுப்படுத்தினார்; பலப்படுத்தினர்; அவர்களைக்கொண்டு சகல சிலைவழிபாட்டுக்காரர்களையும் அதன் நாடுகளையும் கடுமையாகத் தண்டித்தார். இவை எரேமியாவின் இறுதி நூல்களில் சொல்லப்படுகின்றன.

யூதாவின் நாடுகளும் எருசலேம் நகரும்கூட இறைவனின் இந்தத் தண்டனைக்குத் தப்பவில்லை. எருசலேம் தேவாலயம்கூடத் தவிடு பொடியாக்கப்படுவதை எரேமியாவின் இறுதி நூல்களில் படிக்கின்றோம். இஸ்ராயேல் மக்கள் நெறிபிறழ்ந்தபோதெல்லாம் இறைவாக்கினர் மூலமாகக் கடவுள் மக்களை எச்சரித்தார். ஆயினும் மக்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

"நீங்கள் எனது மக்கள்; தேர்ந்தெடுக்கப்பட்ட இனம்; நான் உங்கள் கடவுள்; நான் உங்களோடு ஓர் உடன்படிக்கை செய்துள்ளேன்" என்பதை ஞாபகப்படுத்தினார். யூத மக்கள் இறைவனின் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதனால் பலமுறை அடிமைத்தனத்துக்குள் வாழவேண்டியிருந்தது.

எவ்வளவுதான் இறைவன் சீற்றம்கொண்டு மக்களைக் கண்டித்தாலும் தான் அளவில்லாத கருணையும் அன்பும் உள்ளவர் என்பதனை "இஸ்ராயேலரை மீண்டும் கட்டியெழுப்புவேன்" என்று வாக்குறுதி கொடுப்பதன் மூலம் நிரூபிக்கின்றார்.

### இனி எமது வினாக்களுக்கு வருவோம்.

01. போரின் பிடியிலிருந்து தப்பி யூதாவில் எஞ்சியிருப்போர் எகிப்துக்குச் சென்று அங்கே குடியிருக்க முடிவுசெய்தால் என்ன நிகழும் என்று இறைவன் எரேமியாவின் வாயால் சொல்கின்றார்?
02. கல்தேயரின் கையில் யூதாவின் மக்களை ஒப்புவிக்கவும், சாவுக்குள்ளாக்கவும், பபிலோனுக்கு நாடுகடத்தவும் எரேமியாவை யார் தூண்டிவிட்டது என மக்கள் தலைவர்கள் எரேமியாவைக் குற்றம் சாட்டுகின்றார்கள்?
03. கடவுளின் சீற்றமும் சினமும் ஏன் யூதாவின் நகர்கள்மீதும் எருசலேமின் தெருக்கள்மீதும் மூண்டெழுந்து அவற்றைத் தீக்கிரையாக்கின?
04. இவ்வாறு நீ அவனிடம் சொல். ஆண்டவர் கூறுவது இதுவே. நானே கட்டியதை நான் அழிப்பேன். நான் நட்டதை நானே பிடுங்குவேன். இந்நாடு முழுவதும் இவ்வாறு நிகழும். இந்த 'நீ' யார்?
05. "இதோ நோகரத்து ஆமோனையும், பார்வோனையும், எகிப்தையும் அதன் தெய்வங்களையும், அரசர்களையும் தண்டிக்கப்போகின்றேன்" எனக்கூறும் ஆண்டவர் இஸ்ராயேலுக்கு என்ன கூறுகின்றார்?
06. வடக்கில் நின்று வெள்ளம் பெருகி எழுகின்றது. கரைபுரண்டோடும் காட்டாறென அது மாறுகின்றது. நாட்டையும் அதிலுள்ள அனைத்தையும், நகரையும் அதன் குடிகளையும் மூழ்கடிக்கும். இது யாரைப்பற்றி எரேமியாவின் வாயிலாகக் கூறப்பட்ட இறைவாக்கு?
07. எரேமியாவின் 48ம் அதிகாரம் எந்த நாட்டின் அழிவுபற்றிக் கூறுகின்றது?
08. கடவுள் இறைவாக்கினர் எரேமியாவின் வாயிலாக பல நகரங்களை அழிக்கப்போவதாக 49ம் அதிகாரத்தில் கூறப்படுகின்றது. அந்நகரங்கள் எவை?
09. எரேமியாவின் 50ம் அதிகாரம் தனி ஒரு நாட்டின் அழிவுபற்றி விரிவாகக் கூறுகின்றது. அது எந்த நாடு?
10. செதேக்கியா யூதாவின் அரசனாயிருந்தபோது இஸ்ராயேலர் பபிலோனிய அடிமைத்தனத்திற்கு உட்பட்டனர். ஜெருசலேம் திருக்கோவிலும் பெரும் அழிவுக்கு உட்பட்டது. இது எப்போது நடை பெற்றது?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 130 இற்கான கேள்விகளுக்கு 17 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

லோ. மெல்வின் அன்ரனி, 1ம் வட்டாரம், வங்காலை.

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. ம. சுதர்சினி, உமநகரி, நானாட்டான்.
2. இ. அ. ஜான்சி, ஒலிமடு, நானாட்டான்.
3. க. டிறோன், முருங்கன்பிட்டி, முருங்கன்.
4. ம. தர்மிகா, இல - 109, பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
5. சு. அன்ரனி பொபிக்ஷன், கொக்குப்படையான், சிலாவத்துறை.
6. றெ. அன்ரனி கிளிங்ரன் பீரிஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
7. கே. கமலினி, வைத்தியசாலை வீதி, மன்னார்.
8. அ. அன்பு, எமில்நகர், மன்னார்.
9. வி. ஆன் சௌமியா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
10. எஸ். குமுதினி, குழந்தையேசுபுரம், மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.145

## ஓசேயா 8ஆம் அதிகாரம் முதல் ஒபதியா முடிய

உங்கள் விடைகளைச் செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | ❖ | | | 09 |
| | 02 | | | | | | | 10 | |
| | | | 11 | 03 | | | | 12 | |
| | | | | | 04 | | | | |
| | 05 | 18 | | | | 06 | | | |
| | | | | | | | 13 | 16 | |
| | | | 14 | 15 | | | | | |
| | | | | | 19 | | | | |
| | 17 | 07 | | | | 20 | | | |
| 08 | | | | | | | | ❖ | 21 |

*உங்கள் விடைகளை, குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.*

*குறிப்பு : குறுக்கெழுத்துப்போட்டி விடைகளை அனுப்பும்போது மன்னாவில் உள்ள பெட்டியையோ அல்லது அதிலுள்ள இடைவெளிகளை நிரப்பியோ அனுப்பப்படும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதேபோன்ற கட்டமைப்பைத் தயாரித்து விடைகளை அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதில் உங்கள் பெயருடன் தபால் முகவரியைத் தெளிவாக எழுதவும்.*

### இடமிருந்து வலம்

1. அவன் இவற்றை அறிந்துகொள்ளட்டும்: ............. நெறிகள் நேர்மையானவை.
2. என் ..................... அவர்களுக்கு எதிராய் எரிகின்றது.
3. ................ மாரியையும் பின்மாரியையும் நிறைவாகத் தந்தருளினார்.
4. "ஆண்டவரின் நாள் .................. உள்ளது:
5. ஆயினும் ஆண்டவரே தம் மக்களுக்குப் ......................
6. என் மக்களாகிய இஸ்ரயேலரிடம் ...................... இறைவாக்கு உரைத்திடு' என்று அனுப்பினார்.
7. அவர்களுடைய வேர் ..................... போயிற்று.
8. உமது ...................... வேற்றினத்தார் நடுவில் நிந்தைக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாக்காதீர்.

### வலமிருந்து இடம்

4. ..................... ஆண்டவருக்கே உரித்தாகும்.
9. அதன் முடிவு கசப்புமிக்க ...................... இருக்கும்.
10. அதன் ...................... இப்பொழுதும் மறைந்துபோயிற்று.
11. 'என் மக்களாகிய இஸ்ராயேலின் ................. வந்துவிட்டது.
12. எரொபவாம் வீட்டாருக்கு எதிராக நான் வாளெடுத்து ................."
13. இஸ்ரயேலரோ ...................... வெறுத்துவிட்டார்கள்.

### மேலிருந்து கீழ்

1. உன்னை அறிந்து .................. நானே.
9. ஆண்டவரின் ................... அவர்கள் குடியிருக்க மாட்டார்கள்.
13. உங்கள் தேர்ப்படைகளின்மேலும், வீரர்களின் எண்ணிக்கையின்மேலும் நீங்கள் .................... வைத்தீர்கள்.
14. நான், "கனிந்த பழங்கள் உள்ள .................... என்றேன்.
15. வளரும் ................ முற்றுவதில்லை. கோதுமை நன்றாக விளைவதில்லை.
16. நானே அவனுடைய நகர்கள்மேல் ................ அனுப்புவேன்.

### கீழிருந்து மேல்

4. .................... கனியை அறுவடை செய்யுங்கள்.
7. அவர்கள் வேற்றினத்தார் நடுவில் ................. பாத்திரம்போல் இருக்கின்றார்கள்.
8. உன் இதயத்தின் இறுமாப்பு .................... ஏமாற்றிவிட்டது.
17. ஆண்டவரின் வாக்குக் கிடைக்காத ...................... அது.
18. அவர்கள் பாழடைந்த நகர்களைத் திரும்பக் ............... அவற்றில் குடியேறுவார்கள்.
19. கடல்களின் நீரை முகந்தெடுத்து நிலத்தின் ................ பொழிகின்றனர்.
20. அதைக் குறித்து அதன் மக்கள் ...................... அடைவார்கள்.
21. அந்த நுகத்தை அகற்றுவார் ......................

## சிறுகதை........

### 12ஆம் பக்கத் தொடர்ச்சி

அனோச் ஒரு மூலையில் இருந்து விம்மி விம்மி அழுதான். அப்பா அடித்தது வலித்தது. ஆனால் அவர் எதற்காக அடித்தார் என்பதை எண்ணிப்பார்க்காத அவன் சிந்தனை பலவாறு சுழன்றது. "சே ... இவருக்குப் போய் மகனாகப் பிறந்தேனே. எடுத்தாலும் குற்றம்; வைத்தாலும் குற்றம்; எதைச் செய்தாலும் அடிக்கிறதுதான் அவருக்கு வழக்கமாயிப் போச்சு! முகுந்தன்ர அப்பா எவ்வளவு நல்லவர்! அவன் என்ன செய்தாலும் அவன அடிக்கிறதில்ல. அவனோட அவரு எவ்வளவு பாசம்! என்னட அப்பா மட்டும்தான் என்னைக் கொடுமைப்படுத்துறாரு ..." என்றவாறு சிந்தித்தான்.

தந்தை செபஸ்டியானோ தனது மகன் அனோச் ஒரு நல்ல பிள்ளையாக வளரவேண்டும் என்று ஆயிரம் திட்டங்கள் தீட்டியிருந்தார். அதன் காரணமாக அவன்மீது மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டிருந்தார். அவர் அவன் செய்கின்ற தவறுகளைத் திருத்திக்கொள்ள அவனைச் சிலவேளைகளில் அடிப்பதும் உண்டு. அவற்றை அனோச் தப்பாகப் புரிந்துகொண்டு தன் அப்பாவைப் பொல்லாதவர் என எண்ணத்தொடங்கினான்.

அன்றொரு நாள் அடைமழை "சோ" வெனப் பெய்தது. மின்னல் கண்ணைப் பறிக்க இடி இதயத்தைப் பிளந்தது. தாயைக் கண்ட கன்றைப்போல அனோச்சும் அவனுடைய நண்பர்களும் அந்த அடை மழையில் துள்ளிக்குதித்து விளையாடினர். ஆடிப்பாடி கும்மாளமிட்டனர். அன்றிரவு படுக்கைக்குச் சென்ற அனோச் குளிரினால் நடுங்கினான். மேலெல்லாம் நடுங்க ஆரம்பித்தது. உடம்பு சரியாகக் கொதித்தது. காய்ச்சலுக்கான அடையாளங்கள் தென்பட ஆரம்பித்தன.

அருகில் சென்று தொட்டுப்பார்த்த அனோச்சின் தந்தை, "படிச்சுப்படிச்சு சொன்னனான், மழையில நனையாதை என்று. இப்ப பார் ..... காய்ச்சலில் அவதிப்படுறனி" என்று கூறி வருந்தினார். மறுநாள் காலை அனோச்சின் மேலெல்லாம் நடுக்கம்கூட காய்ச்சலும் வாந்தியும் அவனை வாட்டின. அவன் நிலைகண்ட அவனுடைய அப்பா அவனை மோட்டார் சைக்கிளில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றார்.

மிகுந்த நேரம் வரிசையில் நின்று அவனை வைத்தியரிடம் காட்டினார். அவனை நன்றாகச் சோதித்த டாக்டர், "உங்கட மகனுக்கு காய்ச்சல் ரொம்ப அதிகமாய் காயுது. இவரு நல்லா மழையில நனைஞ்சிருக்காரு. இப்ப இவரை வோட்ல சேர்க்கணும். ஒரு கிழமை நன்றாக அவரக் கவனிக்கணும்" எனக் கூறிமுடித்தார்.

ஓடி ஆடித் திரிந்தவன் படுத்த படுக்கையாகக் கிடக்கிறதைப் பார்க்க அனோச்சின் அப்பாவுக்கு நெஞ்சில் உதிரம் கொட்டியது. அனோச் கண்விழித்து எழும்போதெல்லாம், "அனோச் இப்ப எப்படி இருக்கு? தம்பி இப்படி இளைச்சுப் போட்டியே?" என அவன் அப்பா அவனுடைய தலையைத் தடவினார்.

அனோச்சிற்கு தனது தவறுகள் தெரிய ஆரம்பித்தன. தனது அப்பாவை மனசுக்குள் ஏசியதை எண்ணி எண்ணி வருந்தினான். தனக்குக் கடவுளாகப் பார்த்துத் தண்டனை கொடுத்திருக்கிறார் என்று நினைத்து மனம் வருந்தினான்.

அவனின் தந்தையும் அவனிடம், "அனோச் நான் உன்னை அடிக்கிறது உன்னுடைய நன்மைக்குத்தான். எப்பவும் ஓடியாடி திரியிர நீ இப்ப படுத்த படுக்கையாக இருக்கிறீயே" என்று புலம்பினார். ஏற்கனவே தனது தவறை உணர்ந்திருந்த அனோச் தந்தையின் இவ்வன்பு மொழிகளைக் கேட்டு கண்ணீர் சிந்தினான். தனது தந்தையின் பாசத்தை, அதன் ஆழத்தை உணரத்தொடங்கினான். தனது தந்தையிடம், "அப்பா ..... என்னை மன்னிச்சிடுங்க ... நான் தெரியாமல் தப்புக்கள் பண்ணிட்டேன். நீங்க எனக்கு அடிக்கிறபோதெல்லாம் நான் உங்கள மனதுக்குள்ளேயே திட்டுறது. ஆனா நீங்க இப்ப எனக்கு காய்ச்சல் வந்ததும் எப்படி துடிக்கிறீங்க. அடிக்கிற கைதான் 'அணைக்கும் என்கிறத நான் இப்போ புரிஞ்சுகொண்டேன்' என்று கூறியவனாகத் தன் தந்தையை அணைத்துக்கொண்டான்.

## புனிதர்களின் பாதையில்........

### 09ஆம் பக்கத் தொடர்ச்சி

முற்றிலும் மனந்திரும்பிய அகுஸ்தீனும் குடும்பத்தாரும் மீண்டும் தாயகம் செல்லக் கப்பலுக்காகக் காத்திருந்த நாட்கள் அவை. இதற்கு முன் மோனிக்கா தமது உடல் தம் கணவருக்கருகில் வைக்கப்பட வேண்டுமென துடித்தவர். அப்போது அமைதியாகக் கூறினார் "மகனே! எனது உடலை எங்கே வேண்டுமானாலும் அடக்கம் செய்யலாம். ஆனால் ஒன்று மட்டும் கேட்கிறேன். நீர் எங்கேயிருந்தாலும் ஆண்டவரின் பீடத்தில் என்னை நினைவுகூர்ந்தால் போதும்.

**சிந்தனைக்கு**

பெற்றோரே. உங்கள் பிள்ளைகளை நல்வழிப்படுத்த ஆண்டவரையும் அவர்தம் அன்னையையும் துணைக்கு அழையுங்கள். உருக்கமான மன்றாட்டுக்களால் அவர்களின் உதவியையும் அருளையும் வேண்டுங்கள். புனித மோனிக்கா வழியாக அவை உங்களை வந்தடையும்.

## ஓமந்தைப் பங்கில் ......

### 5ஆம் பக்கத் தொடர்ச்சி

காலையில் 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி நிறைவேற்றப்பட்டு திருப்பலியின்பின் மன்னார் மறைமாவட்ட, யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர்களும், ஓமந்தைப் பங்கின் முன்னைநாள் பங்குத்தந்தையர்களும், அருட்சகோதரி கிளேயா அவர்களும், ஊர்ப்பெரியவர்களும் மேடையிலே கௌரவிக்கப்பட்டனர்.

நூற்றாண்டு விழாவினையொட்டி தயார்செய்யப்பட்டிருந்த நூற்றாண்டு விழா மலர் பங்குத்தந்தை அவர்களால் வெளியிடப்பட்டு இரண்டு குருமுதல்வர்களுக்கும் தொடர்ந்து ஏனைய அருட்பணியாளர்களுக்கும் வழங்கிவைக்கப்பட்டது. தொடர்ந்து தமது துறவற அர்ப்பணத்தின் 40ம் ஆண்டை நிறைவுசெய்யும் அருட்சகோதரி கிளேயா அவர்களின் கௌரவிப்பு நிகழ்வும் அவ்விடத்திலேயே நடைபெற்றது. பின்னர் வந்திருந்த அனைவருக்கும் விருந்து பரிமாறப்பட்டது.

மாலை 5.00 மணிக்கு மக்கள் மீண்டும் ஆலயத்தில் ஒன்றுகூடி அன்னையின் திருச்சுரூபப் பவனியில் பங்கெடுத்து முடிவில் அன்னையின் ஆசீர்வாதமும் பெற்றுச்சென்றனர்.

தகவல்: அருட்பணி. [illegible]

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 143ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
ச. அனோஜன்,
கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்.

**இரண்டாம் பரிசு:**
மே. அமல்ராஜ்,
நிர்வளைக் குடியிருப்பு,
பொலிகண்டி.

**மூன்றாம் பரிசு:**
ஜே. மரிய றோசாறி டயஸ்,
தலைமன்னார் மேற்கு,
தலைமன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 75 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 60 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 143ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. கி. மேரி பிலோமினா றோஸ், 18 கோவில்வீதி ஒழுங்கை, யாழ்.
2. அ. லூர்தம்மா குரூஸ், ஆஸ்பத்திரிவீதி, சின்னக்கடை, மன்னார்.
3. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
4. கி. கிருஷாந்தன், பு.வ.அ.ம.தி சி.கு, கொழும்புத்துறை, யாழ்.
5. திருமதி. பிளன்ரீனா, இல-34/9, கன்னிய.வீதி, சின்னக்கடை, மன்னார்.
6. கி. டிசான் டலிமா, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
7. திருமதி. அல்வினா டயஸ், 8ம் வட்டாரம், திரேசா வீதி, பேசாலை.
8. செ. அசுந்தா, உமநகரி, நானாட்டான்.
9. வி. விமலினி, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
10. அ. லீலா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
11. மா. வைலார் மேரி பறுனாந்து, அரிப்பு மேற்கு, சிலாவத்துறை.
12. வி. மேரி கலிஸ்ரா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
13. செ. அனுசியா கூஞ்ஞ, அரிப்பு மேற்கு, சிலாவத்துறை.
14. அ. அனுசியா, கார்மேல் இல்லம், அடம்பன்.
15. ஜே. நிக்சன், வஞ்சியன்குளம், வங்காலை.
16. எம். மேரி ஜெசில்டா, இல-29B, 2ம்குறு.தெரு, பாசையூர், யாழ்.
17. எஸ். பிரியங்கா லெம்பட், ஆனாள் நகர், வங்காலை.
18. ஆர். மீரா, 50 வீட்டுத்திட்டம், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
19. பி. அனுசியா, பெரியகுஞ்சுக்குளம், மடுறோட்.
20. டொ. டர்லின் றொக்சி, சிறுத்தோப்பு, பேசாலை.
21. விமலதாஸ் டயாகன், பெரிய கோமரசன்குளம், வவுனியா.
22. ஞா. ஜெருசன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
23. அ. சறா நவறோஜினி, நீர்வளைக்குடியிருப்பு, பொலிகண்டி.
24. ஆர். அக்சியா, சாந்திபுரம், மன்னார்.
25. ம. நிவேதிகா, பெரிய குஞ்சுக்குளம், மடுவீதி.
26. ச. டெலாகினி சிலோஜனா, கி.அ.மா.இ. முருங்கன்.
27. திருமதி. ரி. எஸ். லீலாவதி, இல.76/100, சாந்திபுரம், மன்னார்.
28. சு. அன்ரனி பொபிக்ஷன், கொக்குப்படையான், சிலாவத்துறை.
29. ஞா. வினோசர்மி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
30. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
31. றெ. அன்ரனி கிளிங்ரன் பிரிஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
32. எஸ். கிருஷாந், சிறுத்தோப்பு, பேசாலை.
33. யோ. யோண் சயந்தினி, பரிகாரிகண்டல், முருங்கன்.
34. எ. மாகிறட், புகையிரதநிலைய வீதி, மன்னார்.
35. கி. ஆன் டிலாந்தி, அன்ரனிஸ் வீதி, 8ம் வட்டாரம், பேசாலை.
36. சூ. பார்த்திமா, இல.110, பெரியகமம், எழுத்தூர், மன்னார்.
37. அ. ஞானப்பிரகாசம், முதலைகுத்தி, உயிலங்குளம்.
38. ரஜனி எட்வின், 4 உவர்மலை, திருகோணமலை.
39. அருட்சகோதரி. மரிய விதுர்ஷிகா, கா.சபை, பம்பைமடு, வவுனியா.
40. பீ. நிக்ஷலா, பட்டித்தோட்டம், மன்னார்.
41. ஞா. கெலன் றீசா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
42. பெ. பிரகாசமேரி, அ.சி.இ, பூவரசங்குளம், வவுனியா.
43. அ. சுகன்யா, தேவன்பிட்டி, புதுக்காடு, மன்னார்.
44. ம. தர்மிகா, இல-109, பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
45. திருமதி. ஜே. ரதி, கட்டுக்காரன்குடியிருப்பு, தலைமன்னார்.
46. அ. மேரி பிரசானியா டலிமா, கு.யே.வீதி, 8ம் வட்டாரம், பேசாலை.
47. ஞா. செலஸ்ரீனா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
48. ஈ. நிஷாந்தினி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், கு.யே.வீதி, பேசாலை.
49. செ. யூடித் வினுஷா, 3ம் வட்டாரம், கடற்கரைவீதி, பேசாலை.
50. க. நிலுக்ஷன் குரூஸ், 7ம் வட்டாரம், வங்காலை.

## இல.143 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நே[01] | ர | மு | ம | ள் | க | ங | று | மா[02] | ❈ |
| ர் | ளி | ஓ[03] | டோ | ப[04] | ணி | வி | டை | றா | ரு |
| மை | ரி | உ[05] | ண் | உ[06] | நீ[07] | தி | யை | க | டி |
| யா | ன் | ட | க[08] | ட | வு | ளு | க் | கு | வோ |
| ள | ரை | வை | வ | னே | ண | து[09] | த | னை | ணி |
| ர் | வ | அ[10] | லை | ன் | உ[11] | ரை | த் | த[12] | து[13] |
| ப் | தி | னே | க | ம[14] | ள் | தொ[15] | சே[16] | ளி | கை |
| ரை | று | ண் | க[17] | னி | ள | மு | மி | யே | க் |
| யி | இ[18] | ❈ | க் | த | மு | நோ | த் | ❈ | ல |
| உ[19] | று | தி | போ[20] | ர் | ம | ய் | து | ந் | வ[21] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.144ற்கான முடிவுகளை 2014ம் ஆண்டு செப்ரம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்கு பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவிற்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்
- பதிப்பாசிரியர் -

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 28ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 04 1930

உதிர்வு 13 07 1986

### திரு. ச. வெற்றி நாயகம்

(ஆவணம், நானாட்டான்.)

*“தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை”*
*(யோவான் - 15:13)*


வெற்றி என்ற பெயருக்கு இலக்கணமாய்
வெற்றிகொண்டீர் அன்பால் எம் எல்லோரையும்.
அதனால்தான் இப்போது நினைத்தாலும்
எம் கண்கள் பனிக்கின்றதே மாமா!
அன்பால் எமை அணைத்து செல்லப்பெயர் கொண்டு
எமை அழைத்த உங்கள் பாசம்.
இன்னும் எம் உள்ளத்தில் பசுமையாய் உள்ளதே.

*உங்கள் உறவாக நாம் பிறந்ததை எண்ணி இறைவனுக்கு நன்றி சொல்கிறோம். உங்கள் ஆன்மா சாந்தி அடைய இறைவனிடம் உருக்கமாய் செபிக்கும்,*

*- அன்பு உறவுகள்.*

## 01ம் ஆண்டு. 34ம் ஆண்டு நினைவஞ்சலி





திருமதி. ஆனாள்பிள்ளை செபமாலை

திரு. அந்தோனிப்பிள்ளை செபமாலை

(நானாட்டான்.)

மலர்வு : 17 - 04 - 1927
உதிர்வு : 28 - 07 - 2013

மலர்வு : 06 - 09 - 1917
உதிர்வு : 13 - 08 - 1980

உயிருள்ளவரை எம்மை நேசித்தீர்.
இறந்த பின்பும் உம்மை நாம் மறவோம்!

*“வாருங்கள் என் தந்தையின் ஆசி பெற்றவர்களே! உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ள அரசு உங்களுக்கு உரிமையாகும்.”*
*(லூக்கா :23:43)*

இறைவா, இவர்களது ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்!

*உம் பிரிவால் துயருறும் :*
*பாசமுள்ள பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், உற்றார் உறவினர்.*

## 11ம் ஆண்டு நினைவஞ்சலி



### ஜே. றொஷான் மைக்கல் குலாஸ்

(சின்னக்கடை, மன்னார்.)

மலர்வு : 20 - 10 - 1982
உதிர்வு : 28 - 07 - 2003

ஆண்டுகள்தான் பதினொன்று ஆனபோதிலும்
ஆறவில்லை உம் பிரிவுத்துயர் சிறிதேனும்.
எம் மனத்திரைகள் மட்டும் காணும் உம்மை
எம் விழித்திரைகளும் காணத்துடிக்குதே!

என்றும் உம் நினைவுகளில் வாழும் :
அப்பா, அம்மா, அக்கா, அத்தான், மருமக்கள்.

# குருத்துவ வெள்ளிவிழா நாயகர்கள்

## யூபிலி விழாத் திருப்பலிகள், வாழ்வு மற்றும் பணி பற்றிய குறிப்புக்கள்

அருட்பணி. பீற்றர் மனோகர் ஒகஸ்ட் மாதம் 22ம் திகதி காலை 9.30 மணிக்கு நறுவிலிக்குளம் தூய இயாகப்பர் ஆலயத்தில் தமது யூபிலி விழா நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுக்கின்றார். அருட்பணி. எஸ். கே. தேவராஜா ஒகஸ்ட் மாதம் 21ம் திகதி காலை 9.30 மணிக்கு கற்கடந்தகுளம் தூய சூசையப்பர் ஆலயத்தில் தமது யூபிலி விழா நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுக்கின்றார். அருட்பணி. டெஸ்மன் குலாஸ் ஒகஸ்ட் மாதம் 22ம் திகதி மாலை 5.00 மணிக்கு தலைமன்னார் தூய லோறன்சியார் ஆலயத்தில் தமது யூபிலி விழா நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுக்கின்றார்.

### அருட்பணி. பீற்றர் மனோகர்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி மொத்தம் போல் பீற்றர் மனோகர் அவர்கள் நறுவிலிக்குளத்தைச் சேர்ந்தவர். திரு. திருமதி. செபமாலை மொத்தம் போல், பிறன்சி ஆனாப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனாக 16.09.1961 இல் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை நறுவிலிக்குளம் அ.த.க.பாடசாலையிலும், உயர் கல்வியை வங்காலை புனித ஆனாள் மகாவித்தியாலயம் மற்றும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவுசெய்தார். இவர் யாழ்ப்பாணம் புனித மடுத்தினார் சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்பக் குருத்துவ உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கொழும்புத்துறை புனித சவேரியார் பெரிய குருமடத்தில் மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார்.

**இவர் பணிபுரிந்த இடங்கள் வருமாறு:**

1. உதவிப் பங்குத்தந்தை, மன்னார் - 1989 – 1990
2. பங்குத்தந்தை, அடம்பன் - 1990 – 1992
3. பங்குத்தந்தை, உயிலங்குளம் - 1992 – 1993
4. பங்குத்தந்தை, பண்டிவிரிச்சான் - 1993 – 1996
5. பங்குத்தந்தை, தாழ்வுபாடு. – 1996 – 2000
6. பங்குத்தந்தை, ஆட்காட்டிவெளி. – 2000 – 2004
7. ஆன்மீக இயக்குனர், சுவிஸ்லாந்து – 2004 – 2009
8. பங்குத்தந்தை. பள்ளிமுனை – 2010 – 2013
9. பங்குத்தந்தை, முருங்கன். – 2013 - இன்றுவரை
10. மரியாயின் சேனை இயக்குனர் - 1996 – 2000
11. மறைக்கல்வி இயக்குனர் (உதவி, மடு) – 1993 – 1996
12. திருப்பாலத்துவ சபை இயக்குனர் (உதவி. மடு) – 2000 - 2004

### அருட்பணி. எஸ். கே. தேவராஜா

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. சந்தாம்பிள்ளை கொடுதோர் தேவராஜா அவர்கள் கற்கடந்தகுளம் பங்கைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி. அந்தோனி கொடுதோர் சந்தாம்பிள்ளை, சந்தாம்பிள்ளை கொடுதோர் அன்னம்மா தம்பதிகளின் புதல்வனாக 02.0[illegible] இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை கற்கடந்தகுளம் றோ.க.த.க. பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவுசெய்தார்.

இவர் யாழ்ப்பாணம் புனித மடுத்தினார் சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்பக் குருத்துவ உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் யாழ் புனித சவேரியார் பெரிய குருமடத்தில் மெய்யியல் கல்வியை நிறைவுசெய்தார். தொடர்ந்து யாழ் புனித சவேரியார் பெரிய குருமடத்திலும், கண்டி தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார்.

**இவர் பணிபுரிந்த இடங்கள் வருமாறு:**

1. உதவிப் பங்குத்தந்தை, வவுனியா : 1989 – 1990
2. உதவிப் பங்குத்தந்தை, மன்னார் : 1990 – 1991
3. கண்டி தேசிய குருமடம் B.Th. படிப்பு 31.05.1991 – 31.07.1991
4. மடுத்திருத்தலத்தில் உதவிப் பரிபாலகர், அகதிப்பணி, குஞ்சுக்குளம், தட்சனாமருதமடு பங்குப்பணி : 1991 – 1992
5. புதிய தேவன்பிட்டிப் பங்கின் பங்குத்தந்தை 1992 – 1995
6. உரோமை பாப்பிறை திருச்சிலுவைப் பல்கலைக்கழகத்தில், திருச்சபைச் சட்டத்துறையில் முதுமாணி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு : 1995 – 2000
7. மன்னார் ஆயர் இல்லத்தில் திருச்சபை திருமண நீதிமன்றத்தினை நிறுவி அதனை ஆரம்பித்ததும், ஆயரின் செயலாளராகப் பணிபுரிந்ததும் : 2000 – 2001
8. மன்னார் சிறிய குருமட அதிபராகவும், திருச்சபை திருமண நீதிமன்ற பொறுப்பாளராகவும் : 2001 – 2006
9. மன்னார் தூய செபஸ்தியார் பேராலயப் பங்குத்தந்தையாகவும், மறைக்கோட்ட முதல்வராகவும், திருச்சபை திருமண நீதிமன்ற பொறுப்பாளராகவும் : 2006 – 2011
10. மன்னார் குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனராகவும், திருச்சபை திருமண நீதிமன்ற பொறுப்பாளராகவும் : 2011 இன்றுவரை
11. மறைமாவட்ட நிர்வாகத்துறையில் குருக்கள் மன்றம், ஆயரின் ஆலோசகர் மன்றம் ஆகியவற்றில் நிரந்தர உறுப்பினராக 2000 இன்றுவரை.

### அருட்பணி. டெஸ்மன் குலாஸ்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. பர்னபாஸ் டெஸ்மன் குலாஸ் அவர்கள் வங்காலைப் பங்கைச் சேர்ந்தவர். திரு. திருமதி. சூசை பர்னபாஸ் குலாஸ், மனுவல் ஆனாள் மார்க் தம்பதிகளின் புதல்வனாக 21.02.1963 இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை வங்காலை புனித ஆனாள் பாடசாலையிலும், உயர் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவுசெய்தார்.

இவர் யாழ்ப்பாணம் புனித மடுத்தினார் சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்பக் குருத்துவ உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கொழும்புத்துறை புனித சவேரியார் பெரிய குருமடத்தில் மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார்.

**இவர் பணிபுரிந்த இடங்கள் வருமாறு:**

உதவிப்பங்குத்தந்தை - முருங்கன் - 1989 – 1990
பங்குத்தந்தை, தேவன்பிட்டி, செட்டிகுளம், பூவரசங்குளம் - 1990 - 1995 –
மறைக்கல்வியில் உயர்கல்வி - உரோம் - 1995 – 1998
மறைக்கல்வி இயக்குனர் - 5 வருடம்
கற்கிடந்தகுளம் பங்கு – 5 வருடம்
அளவக்கைப் பங்கு – 1 வருடம்
மடுப் பரிபாலகர் – 2 வருடம்
தற்போது பணிசெய்யும் பங்கு தலைமன்னார் - 3 வருடம்

## யூபிலி நாயகர்களின் கடந்த கால நினைவுப் பதிவுகள்



அருட்சகோதரர்களாக .....



புதிய குருக்களாக .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 50வது ஆண்டு நிறைவு விழா வாழ்த்து



(31. 08. 1964 - 31. 08. 2014)

### திரு. திருமதி. செபமாலைமுத்து மேரி குளோறியா

(நெடுங்கண்டல், அடம்பன்.)

சவால்களை பெரும் சாதனைகள் ஆக்கியவர் எங்கள் பப்பா!
எங்கள் எதிர்கால நலன்களுக்காய்
தனது நலனை தியாகமாக்கியவர் எங்கள் பப்பா!

சிலுவைகளை நாளும் சுகமாய் சுமந்தவள் எங்கள் அம்மா!
தடைக்கற்களை வாழ்வுப் படிக்கற்கள் ஆக்கியவர்
எங்கள் அம்மா!
நற்சுகத்தோடு பல்லாண்டு காலம் வாழ
மனதார வாழ்த்துகின்றோம் சேய்கள் நாம்.

வாழ்த்துவோர் : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 40வது ஆண்டு நிறைவு விழா வாழ்த்து



(22. 08. 1974 - 22. 08. 2014)

### திரு. திருமதி. மு. பிரான்சிஸ் சேவியர் (முருகையா), செபமாலை

(ஆவணம், முத்தொழிற் கிராமம்.)

அன்பே கடவுள் என்றால் அவ்வன்பிற்கிணை ஏதுமில்லை.
அந்த அன்பே எமக்கு நீங்கள்தானே ......!
40 ஆண்டுகளாய் சோதனைகள், வேதனைகள்
அனைத்தையும் அணைத்துக்கொண்டீர்கள் எமக்காய்!
உங்களிடம் முதலீடாய் எதுவும் இருக்கவில்லை; ஆயினும்
உடல் உழைப்பால் உயர்ந்து வாழ்க்கையில்
வளம் பெற்றீர்கள்.
எம் வாழ்க்கை வளம்பெறக் கல்விச்செல்வம் தந்தீர்கள்.
உங்கள் வாழ்க்கையில் இருந்து நாம் கற்ற பாடங்கள் பல!
நாம் சாதிக்க எமக்குக் கற்றுத்தந்தது நீங்கள்தானே.
நாம் செல்லும் தூரம் இன்னும் உண்டு .......
அதில் துணையாய் நீங்கள் என்றும் உடனிருக்க வேண்டும்.
பெருமை அடைகிறோம் உம்மைப் பெற்றோராய் பெற்றதற்கு
கவிதைக்கு பொய் அழகாம் கவிஞன் சொன்னான்,
இக்கவிதைக்கோ பொய் இல்லாமலே அழகு ...!

வாழ்த்துவோர் : பிள்ளைகள்.

## பேசாலை சென். விக்டரிஸ் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது!



மன்னர் பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழகம் நான்காவது வருடமாக நடத்திய மன்னார் பிறிமியர் லீக் 20:20 கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பேசாலை சென். விக்டரிஸ் சம்பியனானது. (வெற்றிக் கிண்ணத்தோடு பேசாலைப் பங்குத்தந்தை அருட்பணியாளர் விக்ரன் அவிதப்பர் படத்தில் காணப்படுகின்றார்.)

இறுதிப்போட்டியில் பெரியகடை ஸ்டார் ஈகிள் அணிக்கும் பேசாலை சென். விக்டறிஸ் அணிக்குமிடையில் இப்போட்டி கடந்த 06.07.2014 ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்டார் ஈகிள் அணியினர் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தனர்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பேசாலை சென். விக்டரிஸ் அணியினர் 18 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் கங்காதரன் அதிகபட்சமாக 52 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஜக்சன் 03 இலக்குகளையும், அரவிந் மற்றும் முருகா தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு 147 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்டார் ஈகிள் அணியினர் 16ஆவது பந்துப்பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 100 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். துடுப்பாட்டத்தில் அருண் 23 ஓட்டங்களையும் ஜக்சன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜேசுராஜ் 03 இலக்குகளைக் கைப்பற்றினார். இதன்மூலம் சென். விக்டரிஸ் அணியினர் 2014ஆம் ஆண்டுக்கான சம்பியன் கிண்ணத்தைத் தட்டிச்சென்றனர்.

## மலேசிய விமானத்தில் பயணித்து உயிரிழந்த சிறுவர்கள்



கடந்த யூலை மாதம் 17ஆம் திகதி கிழக்கு உக்ரேனிய பிராந்தியத்தில் வெடித்துச் சிதறிக் கீழே விழுந்த மலேசிய எம். எச். 17 விமானத்தில் பயணித்து உயிரிழந்த 80 அப்பாவிச் சிறுவர்களில் 22 சிறுவர்களது புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அப்படங்களையே இங்கு காண்கிறீர்கள். மேற்படி சிறுவர்கள் தமது குடும்பத்தினருடன் விடுமுறையைக் கழிக்கவும் உறவினர்களைச் சந்திக்கவும் விமானப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விமானத்தில் பயணம் செய்த பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் என 298 பேர் உயிரிழந்துள்ளனர். இரஷ்ய ஆதரவுப் போராளிகள் தவறுதலாக இந்த விமானத்தைச் சுட்டிருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது.

## மன்னாரில் 'இப்தார்' நிகழ்வு



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மன்னார் கிளை ஏற்பாடு செய்திருந்த 'இப்தார்' எனப்படும் நோன்பு துறக்கும் நிகழ்வு கௌரவ அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் மன்னார் அல் - அஸ்ஹர் ம.வி தேசிய பாடசாலையில் கடந்த 08.07.2014 செவ்வாய்கிழமை மாலை 6.00 மணியளவில் இடம்பெற்றது.

இதில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையின் பிரதிநிதியாக மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை கலந்துகொண்டார். இந்து மற்றும் பௌத்த மதத்தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர். இதேவேளை மன்னார் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர்கள், பொலிஸ் அதிகாரிகள், அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், அமைச்சரின் செயலாளர்கள், இணைப்புச் செயலாளர்கள் எனப்பல நூற்றுக்கணக்கானவர்கள் இன, மத வேற்றுமையின்றி குறித்த 'இப்தார்' நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 24 / 10 / 1997

உதிர்வு: 19 / 06 / 2014

### சா. ஜெருஷன்

(கோயில் வீதி, உயிலங்குளம்.)

"என் கற்பாறையும், கோட்டையும் அவரே"
(திருப்பாடல் : 144 -2)

படிப்பு, படிப்பு என ஆவலாய்ப் பயின்றும்
பரீட்சை எழுதவில்லையே என
பரிதவித்து ஏக்கமுடன் நித்தம் - நீ
பாரினிலே உயிர் துறந்தாய்.
கல்வியும், விளையாட்டும் உன் இரு கண்கள்.
பள்ளியில் ஒழுக்கம், அது! பாசமுள்ள வளர்ப்பு.
குடும்பத்தில் பொறுப்பு அது! நீ போட்ட வரப்பு.
சமூகத்தில் நல் மதிப்பு, அது! தானாய் வந்ததொன்று.
"உன் கனவுகள் நிறைவேறமுன் காலனவன் பறித்திட்டான்"
ஆண்டாண்டு காலங்கள் சென்றிடினும் ஆறாது உன் துயரம்.

பிரிவால் துயருறும்
பாசமிகு அம்மா, அப்பா, தம்பி, அம்மம்மாமார், அம்மையாமார், மாமன்மார், மாமிமார்.

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 02 / 03 / 1928

உதிர்வு: 06 / 08 / 2012

### திரு. பேதுறு இராயப்பு (ஓய்வு பெற்ற அதிபர்)

அன்பினால் எம்மை அணைத்தவரே
இன் சொல்லினால் எம்மை ஈர்த்தவரே
பண்பினால் எம்மை நிறைத்தவரே
பாசத்தினால் எம்மை அழைத்தவரே
நற் பணியினை எமக்கு தந்தவரே
கடமையினைக் கண்ணெனச் செய்தவரே
எளிமையாய் என்றும் வாழ்ந்தவரே
பகை செய்தோரையும் உடன் மன்னித்தவரே
உடலால் நீங்கள் பிரிந்தாலும்
எங்கள் உள்ளத்தில் என்றும் வாழ்கின்றீர்கள்
ஆண்டுகள் பல சென்றாலும்
நாம் மறவோம் உங்கள் நினைவுகளை!

அன்பான ஆண்டவரே, உம் பாதம் வந்த பேதுறு இராயப்பு அவர்கள் விண்ணகத்தூதர் கூட்டத்தோடு உம்மைப் புகழ்வாராக! இவ்வுலகில் அன்பு, பொறுமை, மன்னிப்பு, சகிப்பு ஆகிய நற்பண்புகள் நிறைந்த இவரது வாழ்வு இவரைப் பரலோக வாழ்விற்கு இட்டுச்செல்வதாக! ஆமென்.

நீங்கா நினைவுகளுடன் : குடும்பத்தினர்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org